[illegible]

[illegible]

[illegible]

1925

[illegible] II, No 4[illegible]


பால பாரதி

# "பாலபாரதி"

தமிழ் ஜாதி புத்துயிர் பெற்று ஆச்சரியமான சக்தியுடன் விளங்கத் துவங்கும் இந் நாளில் அதன் மறுமலர்ச்சியாகிற கோடி சூரியப் பிரகாசத்தில் ஓர் லேசா லேசத்தின் பலத்தினால் தோன்றியுள்ள பாரத்துவாஜ ஆசிரமத்தின் ஆதரவில் இப் "பாலபாரதி" உதித்துள்ளாள். நிமிஷத்துக்கொரு மனோகரமான வர்ணத்துடன் விரிந்து கொண்டு வருகிற இம் மறுமலர்ச்சித் திருவிழாவில் ஓர் பிரதானமான ஸ்தானத்தைப் பெறவேண்டும் என்று சங்கற்பித்துக் கொண்டு "பாலபாரதி" அதற்குத் தன்னைத் தகுதியுள்ளவளாக ஆக்கிக் கொள்ளப் பல்லாற்றிலும் முயலுவள்.

**ஸ்ரீமான்கள் சுத்தானந்த பாரதி, பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, மகேச குமார சர்மா, வையாபுரிப் பிள்ளை, ப. ஸ்ரீனிவாஸாசாரியர்**

முதலிய கலைஞர் தமது உயரிய வாக்குகளாலும் சீரிய நடையினாலும் "பாரதி"யை அலங்கரிக்க இருக்கையில் அவள் விரும்பும் ஸ்தானத்தைப் பெறுதல் அவளுக்கு அசாத்திய மில்லை. அரிய வியாசங்கள், இலக்கிய ஆராய்ச்சிகள், நாவல்களும் சிறு கதைகள், ஆத்மார்த்த உபதேசங்கள் முதலிய பலவகைப்பட்ட சுவையுள்ள விஷயங்கள் "பாரதி"யில் மாதாமாதம் வெளிவந்து தமிழ் நாட்டு மக்களுக்குக் கலைப் பயிற்சி தரும்—ரஸானுபவத்தைக் கொடுக்கும்.

தமிழின் நறுமணத்தை அனுபவிக்க விரும்புவோர் "பாலபாரதி"க்குச் சந்தாதாரராகச் சேர்ந்தே தீரவேண்டும்.

## சந்தா விகிதம்

| | | |
|---|---|---|
| இந்தியா பர்மா லங்கைகளுக்கு | வருஷம் | ரூ. ௩. |
| | ஆறு மாதம் | ரூ. ௨. |
| | மூன்று மாதம் | ரூ. ௧-௧௨ |
| வெளி நாடுகளுக்கு | வருஷம் | ரூ. ௪-௮ |
| | ஆறு மாதம் | ரூ. ௨-௦ |

## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கம் ... ... | ரூ. ௧௨. | அரைப் பத்தி ... ... | ரூ. ௩-௧௨ |
| அரைப் பக்கம் அல்லது ஒரு பத்தி | ரூ. ௭-௮. | கால் பத்தி ... ... | ரூ. ௨-௦ |

சந்தாதாரர்கள் ஏற ஏற விளம்பர விகிதம் ஏறிச் செல்லுமாதலால் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்கள் இப்பொழுதே ஒரு வருஷத்துக்கென ஒப்பந்தம் பேசிக் கொள்ளுதல் நலமென்று யோசனை சொல்லுகிறோம். ஒப்பந்த விளம்பர விகிதங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்க.

காரியஸ்தன்,
"பாலபாரதி,"
சேரமாதேவி (திருநெல்வேலி ஜில்லா.)

# பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

நாகரீகமான ஜரிகைவேலை செய்த பட்டுச்சேலைகள்,
ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டுகள், முதலியன
மிகச் சரசமாகக் கிடைக்கும்.

காசுமீரச் சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி,
கோரோஜனை முதலியனவும், கிடைக்கும்.

முந்துங்கள்! முந்துங்கள்!

## SILK PITAMBAR & Co.,
## BENAES CITY



# T. B. T. Malays, French Perfumers,
## KALAKKADU POST, TINNEVELLY DIST,

(o)

Hair Oil Essence! Cheap Price கூந்தல் தைல வாசனை!

[c]

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் வாசனைகளால் நீங்களே 16- அவுன்ஸ் அளவுள்ள நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பாதாமி எண்ணெய், ஆலிவ் எண்ணெய் இவைகளில் உயர்ந்த கூந்தல் தைலம் தயார் செய்துகொள்ளலாம். கடைகளில் விற்கப்படும் 2-அவுன்ஸ் புட்டிகளுக்கு ரூ 1—0—0 கொடுத்து ஏமாற வேண்டாம்.

| NAME | | | PRICE | NAME | | | PRICE |
|---|---|---|---|---|---|---|---|
| ரோஸ் | ½ oz | Rs. | 1—12—0 | கஸ்தூரி | ½ oz | Rs. | 2— 0—0 |
| மல்லிகைப்பு | ,, | ,, | 1—12—0 | தாமரைப்பூ | ,, | ,, | 1— 4—0 |
| வெட்டி வேர் | ,, | ,, | 1—12—0 | தாழம்பூ | ,, | ,, | 1— 0—0 |
| மனோரஞ்சிதம் | ,, | ,, | 2— 0—0 | மகிழம்பூ | ,, | ,, | 2— 8—0 |
| சந்தனம் | ,, | ,, | 1— 4—0 | குங்குமப்பூ | ,, | ,, | 1— 0—0 |
| ஹிலிடி ரோப் | ,, | ,, | 1— 8—0 | சுரங்கி | ,, | ,, | 1— 8—0 |
| சைபர் | ,, | ,, | 2— 0—0 | செண்பகப்பூ | ,, | ,, | 2— 8—0 |
| அம்பர் | ,, | ,, | 2— 4—0 | நேரோலி | ,, | ,, | 2— 0—0 |
| கருவைப்பூ | ,, | ,, | 1— 4—0 | பிச்சிப்பூ | ,, | ,, | 1— 0—0 |

*முக்கிய கவனிப்பு:—எங்களுடைய வாசனைகளில் ஒரே தடவையில் 6-புட்டிகள் வாங்குவோருக்கு, ஒரு தங்கப் பவுண்டன் பேனாவும், தைலத்திற்குச் சேர்க்கக்கூடிய, கலரும் இனாமாக அனுப்பப்படும். தபால்சார்ச்சுவேறு.*

# சிறந்த தமிழ் நூல்கள்!

## பரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்பு மற்று, பரிகாசத்துக்கிடமாய் விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர் பதம் பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர் நிலைமை பெய்துவதுடன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச் செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து தேசத்தொழிலைவிருத்திசெய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனைய வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும்.

விலை ரூ க—0—0.

## மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அநுபவங்கள்

தென்னாபிரிக்காவிலே நம்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமான தவச்சாலையாகக்கொண்டு அரும்பாடுபட்டும் உள்ளஞ் சலியாது சாத்விக எதிர்ப்பையே சாதனமாகக் கொண்டு, தேசாபிமான தத்துவங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில் அவராலே கூறப்பட்டவாறு எழுதப்பெற்றது.

விலை ரூ 0—4—0

## சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஐந்தினுள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழைய நூல் காவிரிப்பூம்பட்டினத்து வாணிகனாகிய கோவலன் அவன் மனைவி கண்ணகி என்னுமிவர்கள் சரித்திரத்தை விரித்துக் கூறும் அழகிய நூலாகும். அரசர் தமது நீதியில் சிறிது தவறினும் உயிர் வாழா ரென்பதையும், கற்புடைய மகளிரை மக்களே யன்றித் தேவரும் முனிவரும் கைதொழுதேத்து வரென்பதையும் முன்னர் செய்த இருவினையும் செய்த முறையே செய்தோரை நாடிவந்து பின்னர் உறுத்தூட்டி நின்று நுகர்விக்கு மென்பதையும், யாவரும் அறிந்துய்யக் கருதி, கதை கூறுமுகத்தாலே, இம்மூன்று உண்மைகளுக்கும் சிலம்பு காரணமாகப் பெறப்படுதலின் இந்நூற்குச் சிலப்பதிகாரமென்று பெயரிட்டனர். ந. பலராமையர் அவர்கள் எழுதியது.

விலை ரூ க—0—0

## மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

சுயராஜ்யம் என்பதை நன்கு விளக்கும் ஆதியில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல், நம் தேசத்தில் "நாகரீகம் நாகரீகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் விஷய விவரங்கள் நிர்மல சிந்தையுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போர் மனமயக்கம் நீங்கி, தெளிவு உண்டாகி, தேசாபிமான உதயம் உண்டாகும்.

விலை ரூ 0—4—0

கிடைக்குமிடம்:-

# கணேஷ் கம்பெனி

39, தம்புசெட்டித் தெரு, சென்னை.



உமர் கையம்

ஓம்

# பாலபாரதி

புத்தகம் க | மாசி, கலியப்தம் ௫௦௨௬ | பகுதி ௫

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 1925
MADRAS

## நபிநாயகத்தின் உறுதி

———(*)———

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடியது)

புயலிலவன் கருணையையும், இடியிலவன் மொழியினையும், பொங்கு [illegible]
வெயிலிலவ னொளியினையும், புலியிலவன் கைகளையும் விரும்பிக் கண்டே,
செயலிலிருங் கடவுளையும் மனதிலற மணங்கமழுந் தேவ தூதன்,
மயலிலுழ லுலகிருளை மாற்றிடவே வாய் மலரைத் திறந்திட்டானே.

*　　　*　　　*

அருள்வடிவ மானதொரு வாண்டவனைத் தொழுதவனின் அறத்தை யாற்றி
யிருள்கடிமின்! மெய்மொழிமின்! கொலைதவிர்மின்! இடம்பமதை விடுத்துக் காம
மருள் கடிமின்! குடியொழிமின்! மாதர்தமில் மயங்கன்மின் மனிதரென்று
பொருள்வடிவ மெடுத்ததொரு புண்ணியனும் முகம்மதுவும் மொழிந்திட்டானே!

*　　　*　　　*

அன்புருவ மானவனைச் சிலுவையினி லறைந்த கொடுமவனி யோர்கள்
இன்புருவச் சாந்தனைப்பல் விழிவுரைகள் பேசி மிக விடும்பை செய்யத்
துன்பருறை மெக்காவைத் துறந் தோடத் துரத்தி சிலை தொடுக்க மேனி
புண்பெருகிக் குருதி வெள்ளம் பூமகளின் மேற் பாயக் குகை யொன்றுற்றான்.

*　　　*　　　*

கூக்குரலிட் டொளி யிடத்துங் கொடியர்வர, வெப்புற்றுங் கூட நின்றே
யேங்க முறும் அபுபக்கர், "ஆண்டவனே! துணையின்றி யிருவர் நாமே;
தாக்கு மிகு காப்பிரியர் சூழ்ந்தனரென் றுரைத்திடலுஞ் சாந்தமாக
நோக்கு மிகு முகம்மது "நம் முடனுள்ளான் இறைவன்" என நுவலுவானே!!

*　　　*　　　*

அருந்துணைவ னன்பருக்காம் ஆண்டவனின் கட்டளையை யவனிமீது
வருந்துயர்க ளொண்ணாது, வயவுரைகள் வாழ்த்தெனவும் வழங்குங் கற்கள்
பொருந்து மணப் பூக்களெனப் பொறுமையுடன் கடனாற்றும் புனிதர் தம்மைத்
திருந்திலருந் திருந்தியடி தொழுவரென துறுதியெனச் செப்பினனே!

(பாரத சக்தி)

160202

# விவசாயம்

(ஸ்ரீ வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர் எழுதுவது)

மனிதர் செல்வம் செல்வம் என்று பறக்கிறார்கள். ஆனால் செல்வத்தைத் தேடும் முறை தெரியாமல், உத்தியோகம் என்று புனை பெயரால் அழைக்கப்பட்ட அடிமைத் தொழிலிலும் கண்டிராக்ட் என்று சொல்லுகிற ஒப்பந்த வேலையிலும், ஸ்பெகுலேஷன் என்று சொல்லப்படுகிற சூது விளையாட்டிலும், கள் சாராயம் முதலிய லாகிரிகளின் விற்பனையிலுந்தான் பெரும்பாலும் இறங்கிச் செல்வத்தைச் சேர்க்க முயலுகிறார்கள். இத்தகைய காரியங்களில் இறங்குபவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேருக்கு வயிற்றைக் கழுவப் போதிய அளவு கூட வருமானம் கிடைப்பதில்லை. அநேகர் பெருநஷ்டம் அடைந்து கெட்டும் போய்விடுகிறார்கள். மிகமிகச் சிலரேதாம் இவைகள் மூலமாகச் செல்வந்தர்களாகிறார்கள்.

ஆனால் பிடிவாதத்தோடு, மனது வைத்து, சரியான வழியில் முயற்சி செய்கிற அனைவருக்கும் பாரபக்ஷமில்லாமல் அமோகமாய்ச் செல்வம் தரப் பூமிதேவி காத்துக் கொண்டிருக்கிறாள். அவள் ஒருத்திக்குத்தான் ஜாதி வித்தியாசம், சமய வித்தியாசம், தாக்ஷணியம் முதலியவை இல்லை. உழைத்த மட்டிற்குப் பயன் தருகிறாள் —சாமானியமாக உழைத்தால் சாமானியமான பயனைத் தருகிறாள்—வழி தெரிந்து பெரு முயற்சி செய்தால் 'மடி தற்றுத் தான் முந்து'ற்று எதிர்பார்க்கமுடியாத அளவுக்குக்கூடப் பயனைத் தந்துவிடுகிறாள். ஆனால் அறிவோடு, பொறுமையோடு, பணிவோடு, செய்ய வேண்டும். சளைக்காமல் ஆராய்ச்சிகள் செய்து வரவேண்டும். செய்த ஆராய்ச்சி முறைகளை நினைவிலும் குறிப்பிலும் வைத்துக்கொண்டு, வந்த பயனுக்கேற்றபடி அவற்றை மாற்றியோ திருத்தியோ அமைத்துக்கொண்டு, புதிய ஆராய்ச்சிகள் செய்து புதிய முறைகளைக் கண்டுபிடித்து அனுஷ்டிக்க வேண்டும். ஆராய்ச்சி செய்வதில் அலம்பிரக்ஞை—போதும் என்கிற எண்ணம்—இருக்கவே கூடாது.

இந்த வழிகளில் வேலை செய்து ஐரோப்பியரும் அரிய பயனை அடைந்து வருகிறார்கள். பெல்ஜியம் நாட்டில் பத்து வருஷத்து விளைவைச் சராசரி பார்த்ததில் ஒரு ஏகராவில் ஒரு போகத்துக்கு ௫௫0 பக்கா கோதுமை விளைந்ததாம். நன்றாகப் பண் படுத்தின பூமியில் ௧௧௩௪ பக்கா வந்ததாம். அந்த நாட்டில் ஓர் சதுரமைலுக்கு ௫௮௯ ஜனங்கள் இருக்கிறார்கள். ௪0 வருஷங்களுக்கு முன் இவர்களில் ௪௯0 ஜனங்களின் ஆகாரம் அவர்களுடைய குறுகிய நாட்டிலேயே உண்டாக்கப் பட்டதானால் அவர்களுடைய வேளாண்மைத் திறத்தை ஒருவாறு நிச்சயம் செய்து கொள்ளலாம். அமெரிக்காவில் நன்றாக வேலை செய்த பத்து வேளாளர் ஒரு ஏகராவில் ௧௭௫0 படி முதல் ௨௫00 படி வரையில் மக்காச்சோளம் அறுத்தார்கள். சில ஏகராக்களில் ௫௧ டன் அதாவது ௯௯,௪௪0 ராத்தல் உருளைக்கிழங்கு எடுத்திருக்கிறார்கள்! தேன்மார்க்கில் ஏகராவிற்கு ௮00 பக்கா கோதுமை விளைகிறது. இந் நாட்டில் ௨௮ லக்ஷம் ஜனங்கள்தானிருக்கிறார்கள் சாகுபடிக்கு யோக்கியமாக ௭0 லக்ஷம் ஏகர்தான் இருக்கிறது. இந்த பூமியிலிருந்து இவர்கள் ௪ கோடி பவுன் கிரயமுள்ள உணவு பதார்த்தம் உண்டு செய்கிறார்கள். ௧௪௫ லக்ஷம் பவுன் விலையுள்ள உணவுப் பண்டங்களை இவர்கள் ஏற்றுமதி செய்கிறார்கள்!



ஆனால் பிரஞ்சுத் தோட்டக்காரர்களே பழமரங்கள் வைத்தும் கறிகாய்ப் பதார்த்தங்கள் பயிர் செய்தும் மற்றெல்லோரைக் காட்டிலும் அதிகமான லாபம் சம்பாதிக்கிறார்கள். ஓர் உதாரணம் எடுத்துக் காட்டுவோம். போன்ஸ் என்று ஓர் தோட்டக்காரன் இரண்டே முக்கால் ஏகரா வைத்திருந்தான். தண்ணீர் இறைப்பதற்கு ஓர் யந்திரம் உள்பட அவனுடைய நிலத்தின் கிரயமும் செலவும் சேர்த்து ௧௧௩௩ பவுன் அல்லது ரூ ௧௭000 ஆயிற்று. தோட்டத்தில் போன்ஸைச் சேர்த்து எட்டுபேர் வேலை செய்தார்கள். கறிகாய்களைப் பாரிஸ் சந்தைக்குக் கொண்டு போவதற்கு போன்ஸ் ஒரு குதிரையும் வைத்திருந்தான். பாரிஸிலிருந்து திரும்பும் போது அவனும் ஆட்களும் எரு அள்ளி வருவார்கள். ஓர் வருஷத்தில் இவ்வாறு ரூ ௧௫00 பெறும்படியான எரு வாரி வருவார்கள். குத்தகைக்கும் வரிக்குமாக வருஷம் ரூ ௧௫00 செலவாகும். இந்த இரண்டே முக்கால் ஏகர் நிலத்தில் வரும் படியோ சொல்லி முடியாது. அவற்றுள் முக்கியமானவை, ௨0,000 ராத்தல் கரோத்து (பறங்கிக்காய் போலத் தித்திக்கும் ஒரு காய்); ௨0,000 ராத்தல் வெங்காயம், முள்ளங்கி முதலியன; ௯௭00 முட்டைக் கோஸ்; ௫000 காலிப்ளவர்; ௫000 கூடைத் தக்காளிப் பழம்; ௯000 முதல் தராப் பழங்கள்; ௧௫௪000 ஸலாது! எல்லாம் சேர்த்துப் பார்த்ததில் இரண்டரை லக்ஷம் ராத்தல் சாகங்கள் அகப்பட்டன! இவன் ஒருவன்தான் இவ்வாறு வேலை செய்து வந்தான் என நினைக்க வேண்டாம். பாரிஸ் நகரத்தைச் சுற்றி ௫000 பேர் ௨௧௨௫ ஏகராக்கள் பயிர் செய்து, பாரிஸிலுள்ள ௨0 லக்ஷம் ஜனங்களுக்கு வேண்டிய சாகங்கள் உற்பத்தி செய்வதுமில்லாமல் லண்டனுக்குக்கூடச் சாகங்கள் அனுப்பி வருகிறார்கள்.

இன்னும் ஒரு உதாரணம் மாத்திரம் காட்டுவோம். கொன்ஸே என்று இங்கிலாந்துக்குச் சொந்தமான ஓர் பிரெஞ்சுத் தீவு இருக்கிறது. அதிலுள்ள பாறைகள், மலைச் சிகரங்கள் உட்பட அதன் விஸ்தீரணம் ௧௯000 ஏகராவுக்கு மேலில்லை. அவற்றுள் ௯௮௮௪ ஏகராக்கள்தாம் பயிர் செய்ய யோக்கியமானவையாம். ஆனால் அத் தீவிலிருந்து வருஷா வருஷம் ஏற்றுமதியாகும் சாகங்களைக் கணக்கிட்டு எடுத்துச் சொன்னால் பொய் போல இருக்கும். இருப்பினும் ஓர் மட்டுக்குக் குறிப்பிடுவோம்.

முப்பது வருஷங்களுக்கு முன் ௧௧¼ லக்ஷம் ராத்தல் கொடி முந்திரிப் பழம்; ௨௨½ லக்ஷம் ராத்தல் தக்காளிப்பழம் ௨0,000 பவுன் பெறுமானமுள்ள உருளைக் கிழங்கு; ௯000 பவுன் விலையுள்ள முள்ளங்கி முதலியன; ௫000 பவுனுக்குப் புஷ்பங்கள்; ௨00 பவுன் விலையுள்ள நாய்க்குடை ஆக ஒரு லக்ஷம் பவுனுக்கு இத் தீவார் லண்டனுக்குச் சாகங்கள் அனுப்பி வந்தார்கள். ஆனால் சகம் ௧௮௫௨ல் அதாவது ௬௪ வருஷங்களுக்கு முன் அவர்கள் ௫½ லக்ஷம் பவுன் விலையுள்ள உருளைக்கிழங்கு உட்பட ௧௧ லக்ஷம் பவுனுக்குச் சாகங்கள் ஏற்றுமதி செய்தார்களாம்! இன்றைக்கு இவ் வியாபாரம் இன்னும் அதிகமாயிருக்கும் என்பதில் தடையே இல்லை. இதனோடு இவர்களுடைய நிலங்களில் ௭௨௯0 மாடுகளுக்கும் ௯00 ஆடுகளுக்கும், ௧௪௮0 குதிரைகளுக்கும் தீவனம் கிடைத்ததாம்!

இத்தனைக்கும் நாம் மேலே பிரஸ்தாபித்த பூமிகள் இயற்கை வளம் நிரம்பியவை அல்ல. அநேக மிகச் சாமானிய பூமிகள். தேசமும் குளிர்ந்த தேசம். ஆனால் பிரகிருதி மறுத்திருக்கிற வளப்பத்தை மனிதன் பூமிக்கு உண்டாக்கித் தந்திருக்கிறான். நாம் பேசிய பிரெஞ்சு வேளாளர் பூமிக்கடியில் குழாய்கள் போட்டு

அவ வகளை வெந்நீரால் நிரப்பிப் பூமியை உஷ்ணப் படுத்துகிறார்கள். உள்ளிருந்து வெளியே போகாமல் செய்கிறார்கள். வைத்தியுத சக்தியைப் பிரயோகித்து, பூமியை மேலும் மேலும் சுரக்கச் செய்கிறார்கள். பூமிக்கு உரம் சேர்ப்பதற்கு அவர்கள் பின் வாங்குகிறதே யில்லை. குத்தகை ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் போது தான் போட்ட உரத்தினால் உயர்ந்த மண்ணையும் வாரிக் கொண்டு போவேன் என்று நிபந்தனை கண்டே தான் குத்தகைக்காரன் நிலக்காரனுக்குக் குத்தகைச் சீட்டு எழுதித் தருகிறான். அவ்வளவு தூரத்துக்கு அவர்கள் பூமியைப் பண்படுத்துவதில் கருத்தைச் செலுத்துகிறார்கள்!

நம் நாட்டுப் பூமி இவர்களுடைய பூமிக்கு வளப்பத்தில் எள்ளளவும் தாழ்ந்த தில்லை. தாமிரபர்ணி காவேரி, கிருஷ்ணை, கோதாவரி, கங்கை, ஸிந்து முதலிய திவ்விய நதிகள் பாய்கிற பிரதேசங்கள் நிலவளம் நீர்வளங்களில் எந்த நாட்டிற்கு இளைத் திருக்க முடியும்? ஆனால் இவை மாத்திரம் போதுமானால் நாம் பயிர்த் தொழிலில் ஐரோப்பியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இவ்வளவு பின்னே இருக்க மாட்டோம். ஆகவே செல்வச் செருக்குக்கு நிலவளமும் நீர்வளமும் மாத்திரம் போதா. குடிவளம் தான் முக்கியமானது. வீரப் ஹோக்யா வஸுந்தரா என்பது பழமொழி. ஆள் வினை உள்ளவர்க்குத்தான் நிலம் பயன் தரும். ஆகையால் இனியாவது நாம் மற்ற நாட்டவரைப் போல விவசாயத்தை அறிவாளிகள் இறங்கிச் செய்ய வேண்டிய தொழிலாகப் பாவித்து நடத்த வேண்டும். உத்தியோகம் உத்தியோகம் என்று பறந்துகொண்டு உள்ள நிலங்களை விற்றும் கொதுவை வைத்தும் பணம் வாங்கி ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் படித்துப் பிழைக்கும் வழி தெரியாமல் அலைகிறவர்கள், மேல் நாட்டவர் முறையைத் தெரிந்து கொள்வதற்கு மாத்திரம் போதிய அளவுக்கு ஆங்கிலம் படித்துக்கொண்டு, தங்கள் நிலங்களை விற்காமல் வைத்துக்கொண்டு அதைச் சரியானபடி கிருஷி செய்து வந்திருந்தால் எவ்வளவு சுகமாக வாழ்ந்திருப்பார்கள். நாட்டின் செல்வத்தை எவ்வாறு பெருக்கி யிருப்பார்கள். ஆனால் போனதை நினைத்து வருந்துவதில் பயனில்லை. இறந்த காலத் தவறுகளை வருங்கால வளர்ச்சிக்கு சோபானங்களாக வைத்துக்கொள்ளுவதே அறிவாளிகளின் இலக்கணம். ஆகையால் நாட்டின் செல்வத்தை வளர்க்க ஆசை கொண்டவர்கள் நாம் மேலே எடுத்துக் காட்டிய மேனாட்டவர் முயற்சியை ஓர் தூண்டுகோலாக வைத்துக் கொண்டு ரஸாயன ஆராய்ச்சிகளில் இறங்கி விவசாயத்தையும், கொடிக்கால் தொழிலையும் மேற்கொள்வாராக.

---

# பட்டினியும் நீண்ட ஆயுளும்

(*)

( ஸ்ரீ பா. ஆதிமூர்த்தி எழுதுவது )

இரத்தத்தைச் சுத்தம் செய்யவும் நாடிகளை அழுக்கற்று வைத்துக் கொள்ளவும் நீண்டாயுளுடனிருக்கவும் உயிர், அறிவு இவைகள் தெளிவாகவும் திர்க்கமாகவும் பிரகாசிக்கவும் விஞ்ஞானிகள் இரண்டு வழிகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்விரண்டு வழிகளில் எதையேனும் ஒன்றை யனுஷ்டிப்பதால் மேலே கண்ட பொதுப் பலன்கள் உண்டாகின்றன. இம்



முறைகள் ஜீவசக்திப் பிரயோகமும் பட்டினியுமாகும்.

ஜீவசக்திப் பிரயோகத்தின் தத்துவங்களையும் முறைகளையும் பற்றிக் கூறுவது இவ் வியாசத்தின் நோக்கமல்ல வாகையால் அதை விடுத்து பட்டினியின் தன்மைகளைப் பற்றி இங்கு ஆராய்வோமாக.

சென்ற நூற்றாண்டோடும் இந் நூற்றாண்டின் முற்பகுதி வரையிலும் ஐரோப்பா அமெரிக்கா முதலிய மேனாட்டார் பட்டினியைப் பற்றிப் பெரும்பாலும் ஒன்றுமறியாதவர்களாக விருந்தார்கள் என்ற உண்மையை அந் நாட்டு வைத்திய விஞ்ஞானிகளும் படித்த தத்துவ வல்லவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நூற்றாண்டில் இந்த பரிசுத்த முறையாகிய பட்டினியின் இரகசியங்கள் அம் மேனாடுகளில் வெகுதூரம் அபிவிர்த்தி யடைந்து விட்டது.

முதல் முதலில் பட்டினியின் அவசர உபயோகத்தை வைத்தியர்களும் சுகாதார வல்லுனரும் அறிந்து உபயோகிக்க ஆரம்பித்தார்கள். வர வர ஔஷதப் பிரயோகத்தின் ஆபத்துக்களை யறிந்து அனுபோகத்தால் பூத தத்துவ சிகிச்சையாகிய மருந்தற்ற இயற்கைச் சிகிச்சையைத் தெரிந்துகொண்ட புத்திமான்கள் இப் பட்டினியை அவசர வியாதிகளுக்கும் நீண்ட கால வியாதிகளான தீராத நோய்களுக்கும் உபயோகித்துப் பூரண வெற்றியை யடைந்து வருகிறார்கள்.

இந்தப் பட்டினி முறைக்காகவே அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பல பிரபல சுகாதாரஸ்தாபனங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

எந்த வைத்தியர்களாலும் தீர்க்க முடியாத கொடிய ரோகங்கள் இந்தச் சுகாதார சாலைகளில் பட்டினியால் தீர்த்து வருகின்றனர்.

இம் முறையின் தத்துவங்களைப் பற்றிப் பல "பட்டினி டாக்டர்கள்" பல புஸ்தகங்கள் எழுதிப் பிரசுரித்துள்ளார்கள். அன்றியும் இம்முறை வரவர அபிவிருத்தி யடைந்துகொண்டு வருகிறது.

நமது பாரத நாட்டில் இம் முறை வெகுகாலமாக ஜனசமூக வாழ்வில் இருந்து வருகிறதாகத் தெரிகிறதுடன் ஆசாரச் சீர்திருத்தத்துடன் இப் பட்டினி வெகுதூரம் கலக்கப் பட்டு, குடிவாழ்வின் ஒரு சிறு பாகத்தையே ஆதிக்கம் கொண்டிருப்பதை நம்மவர் யாவரும் அறிவார்கள். இம் முறை எக்காலத்தில் இந்து மதத்துடன் சேர்க்கப்பட்டதென்பதை நாம் சரித்திர ரீதியாக அறிந்து கொள்ள முடியாவிட்டாலும் பௌத்தம், வேதாந்தம், சைவம், வைஷ்ணவம், ஆகிய அந்நிய மதங்கள் இந்துமதத்துடன் சேர்க்கப் பட்ட காலத்திலிருந்தே பட்டினி நம் நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டதாக யூகிக்க வேண்டியிருக்கிறது.

பகவான் புத்தர், ஜீவராசிகளின் கஷ்டங்களை யறிந்து மனம் நொந்து தன் தவநிலையுடன் பட்டினியின் பரிசுத்தமாக்கும் செய்கையைக் கண்டு பிடித்து அடிக்கடி யனுஷ்டித்து வந்ததை யறிந்த அவருடைய சீடர்கள் அம் முறையைத் தம் வாழ்நாளின் கொள்கையுடன் சேர்த்து வந்தனர்.

அதன்பின் "பகவான் சங்கர"ரும் பட்டினியின் நன்மைகளை யறிந்து அதைத் தன் புதுமதமாகிய வேதாந்த அனுஷ்டானத்தில் கொண்டு வந்தனர். பிற்காலத்தில் ஸ்ரீராமானுஜரும் நீலகண்டசிவா சாரியாரும், மத்துவாசாரியாரும்

பல ஆசார விதி கர்த்தாக்களும் தங்கள் தங்கள் கொள்கைகளுடன் பட்டினியை மதக் கொள்கை யாக்கி விட்டனர்.

ஆசாரம் பாதியும் தேகசுகம் பாதியுமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த இந்தப் பட்டினியானது வரவர நம் நாட்டாரால் கைநழுவ விடப்பட்டு மத சம்பிரதாயத்திற்காக பேர் மாத்திரமாக நிற்கும்படியான ஸ்திதிக்குக் கொண்டு வந்து விட்டு விட்டார்கள். அதனால் நோய்களும் பரவிவரத் தொடங்கின.

இங்ஙனம் மதத்துடன் பட்டினி சேர்ந்ததற்குக் காரணம் அம் மதங்கள் யாவும் மாமிச போஜனத்தையும் உயிர்க் கொலையையும் வெறுத்ததாக இருந்தமையே யாகும் என்று ஊகிக்கிறோம். இக் காரணங்கள் எப்படியாயினும் பட்டினி மதத்துடன் சேர்ந்தது நம் நாட்டின் பாக்கியமே யாகும்.

அக்காலத்தவர்கள் இவ் வுத்தம முறையை ஜனங்களைக் கட்டாயப் படுத்தி அனுஷ்டிக்கச் செய்ததினால் ஜன சமூகம் நோயற்றுப் பலமுள்ளதாய்ப் பூரணாயுளுடன் விருத்தியடைந்து வருவதைக் கண்டுகொண்டவர்களாய் அதை மதத்துடன் சேர்த்தால் என்றும் அழியாது வாழ்வுடன் தலைமுறை தலையாக வந்து கொண்டேயிருக்குமென்று நம்பிச் சேர்த்து வைத்தனர் போலும். இல்லையேல் எந்த வகையிலும் மதத்திற்கும் பட்டினிக்கும் சம்பந்தமே இருக்க வேண்டியதில்லை.

இவ்வாறு இவ்வுயர்ந்த முறையை "பொய்முட்டையாகியமதத்"துடன் சேர்த்துவிட்டதால் மதங்களின் கதியே இப் பட்டினி முறைக்கும் சம்பவித்தது ஆச்சரியமாக மாட்டாது. புத்த சங்கர காலங்களுக்கு முன்னர் நமது * பரிசுத்த நாட்டில் பட்டினி எவ்வளவுதூரம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தன என்று நாம் அறிந்துகொள்ளப் போதுமான ஆதாரவு எம் புத்திக்கு எட்டவில்லை. ஆனால் இவ் வுண்ணாவிரதம் தேக சுகத்திற்காகவன்றி, "வைராக்கியப் பயிற்சி" க்காகவும் "தவ வலி' க்காகவும் "பரித்தியாகம் கடுங்கோபம்" இன்னமும் இது போன்ற மேலான நிலைமைகளுக்காகவும் பழக்கப்பட்டு வந்ததாக நினைக்க இடமிருக்கின்றது.

மேற் கூறிய குறிப்புகளால் நம் நாட்டில் பட்டினியானது பல்லாயிர மாண்டுகளாக அநுஷ்டிக்கப் பட்டு வருகிற தென்றும் அதன் சக்தியை ஐரோப்பியர்களுக்குத் தெரிவதற்கு முன்பே நம்மவர்கள் நன்கறிந் திருந்தன ரென்றும் தெரிகிறது.

ஆகவே இவ்வரிய முறையைப் பலரும் நன்கு அறியும்படி செய்வதனால் ஏற்படும் நன்மைகள் பலவென்பதை படிப்பவர்கள் நன்கறிய வேண்டுகின்றோம்.

இனி பட்டினியை எவ்விதம் அனுஷ்டிப்பதென்பதைப் பற்றி விசாரிப்போம். பட்டினி நான்குவித நன்மைகளுக்காக அனுஷ்டிக்கப் படுகிறது. அவை நோய் தீர்த்தல், தேக பரிசுத்தம், பிராண பரிசுத்தம், நீண்டாயுள் ஆகிய இவைகளே.

வியாதி நிவாரணத்தில் பட்டினி செய்யும் அற்புத வேலைகள் மிகவும் ஆச்சரியப்படத் தக்கன. ஜீரணக் கருவிகளுக்கும் மற்ற தேக இயந்திரங்களுக்கும் ஓய்வைக் கொடுப்பது பட்டினியின் கருத்தல்ல. தேகத்தில் அதிகப்பட்ட அழுக்குகளை ஜீரணக் கருவிகள் சரியாக ஜீரணிக்கச் செய்து முடிப்பதற்கு அவகாசம் கொடுப்பதே

* "பரிசுத்த நாடு" என்பது ஆரிய தர்மத்துடன் சைவ, வைஷ்ணவ மதத்தார் கலப்பதற்குமுன்.



முக்கிய நோக்கமாகும். இந்த அவகாசம் பட்டினியல்லது ஜீவசக்திப் பிரயோகந் தவிர வேறெந்த வகையாலும் கொடுத்த லரிது. இந்த அவகாசத்தால் பழமையான அழுக்குகள் ஜீரணிக்கப் பட்டு இரத்த சுத்தியும் உண்மைப் பசியும் உண்டாக்கப் பட்டால் வியாதிகள் அதிகரித்து வரும் நிலையினின்றும் நீங்குவதுடன் தேகத்தின் சுபாவ நிலையை மறுபடியும் அடையச் சாவகாசம் ஏற்படுகிறது. இதுவே பட்டினி வியாதிகளைத் தீர்ப்பதில் செய்யும் முக்கிய வேலையாகும்.

சாதாரணமாகச் சம்பவிக்கும் காய்ச்சல், வயிற்றுக் கடுப்பு முதலிய சிறு நோய்கள் இரண்டொரு தினங்கள் அல்லது ஒரு வாரத்திற் கதிகப் படாத பட்டினியாலேயே சுகப் பட்டு விடுவதை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம்.

எந்த வைத்தியருடையவும் எவ்வித மருந்தினுடையவும் துணையுமின்றி சகல சாதாரண ரோகங்களும் மேலே கண்டபடி ஒரு வாரத்திற்குட்பட்ட பட்டினியால் பயமின்றி ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே சுகப் படுத்திக் கொள்ளலாம்.

ஆனால் நாட்பட்ட வியாதிகளும் தீராத ரோகங்க ளென்ற பதிச்சொற்களை யுடைய கொடிய ரோகங்களும் நீண்ட நாட்களின் பட்டினியால் சுகப் படுத்தப்படுகின்றன. ஏனெனில் நாட்பட்ட கெட்ட அழுக்குகள் வெகு காலமாகத் தேகத்தோடு தங்கி உறைந்து தேக இயந்திரங்களின் உட்புறங்களையும் தம தாட்சியிற் கொண்டிருப்பதால் அவ் வழுக்குகள் முழுவதும் சிறுகச் சிறுக வெளிப்பட்டு ஜீரணமாகி ஒழிவதற்கு மிகுந்த காலம் வேண்டி யிருக்கிறது.

சாதாரணமாகத் தீராத நோய்களில் பட்டினி இருபது தினங்களி லிருந்து, ௪௦ அல்லது ௯௦ தினங்கள் வரை நோயின் தன்மைபோல் தேவைப் படுகின்றன.

இந்த நீண்ட காலம் பட்டினியால் எவ்வித ரோகமும் பூரண சுகத்தை யடைவதில் ஆட்சேபணை யில்லை.

அமெரிக்காவில் பிரபல வைத்தியராக விருந்து ஔஷதப் பிரயோகம் வியாதிகளை யுண்டாக்குவதற்கு உதவி செய்து வருவதைக் கண்டு பிடித்தவரும், பல வருஷங்கள் பட்டினி முறையைக் கைக்கொண்டு பல்லாயிரம் மனிதர்களின் தீராத ரோகங்களைத் தீர்த்தவருமான காலஞ் சென்ற டாக்டர் எட்வர்டு ஹுக்கர் டேவி * என்பவர் தனது பட்டினி வைத்திய சாலையில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு "பட்டினியால் தீராத நோய்களில்லை யென்றும், மூலகாரணமான சில நோய்களை ஒவ்வொரு மனிதனும் பட்டினியால் எடுத்து விடுவானானால் ஆயுள்வரை யாதொரு நோயுமின்றி வாழலா மென்றும் பின் பட்டினியே தேவையிராதென்றும், சந்ததிகளும் நோயற்றுப் பிழைப்பார்க ளென்றும், ஆகவே மனித வாழ்வில் பரிசுத்தம் ஏற்படும் வரை ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் பட்டினி யிருந்தாகவேண்டு மென்றும்" தனது பேர்பெற்ற புஸ்தகமாகிய விஞ்ஞான சிகிச்சை † என்ற புஸ்தகத்தில் மிகவும் தெளிவாகக் கூறுகிறார்.

அவரது காலத்திற்குப் பின் தற்போது அமெரிக்காவில் ஏராளமாகப் பட்டினிச் சுகாதாரசாலைகளுண்டாகி அபிவிருத்தி யடைந்துள்ளன.

ஆகவே வியாதிகளைச் சுகப்படுத்துவதில் பட்டினி மிகவும் பயன்தரத் தக்க முறையாகக் கொள்வது அவசியமாகும்.

* Dr. Edward Hooker Dewey.

† New Science of Healing.

பொதுவாகப் பட்டினியில் உடலின் மெலிவை நோக்குவதை யகற்றவேண்டும். புளியேப்பம் வாய்நாற்றம் இவைகள் தணிந்து தெளிவு, சுருசுருப்பு, ஒலியின் சுத்தம் முதலிய தோன்றுவதைக் கவனித்தல் வேண்டும். போஜனத்தின் பேரில் அதிக ஆவல் பித்தமபக்கம், படபடப்பு முதலியன இல்லையேல் ஆகாரம் கொடுத்துவிடலாம். பட்டினி காலத்தில் தாகத்தில் சுத்த ஜலம் வேண்டிய அளவு கொடுக்கப்படல் வேண்டும். ஜலம் கொடுப்பதில் தடையொன்று மிருத்தல் கூடாது. ஸ்நானம் செய்தல், சிறிது தூரம் நடந்து செல்லுதல், சிறு வேலைகளைச் செய்தல் படித்தல், எழுதல் இவைகளை நிதானமாகச் செய்துகொண்டே யிருத்தல் வேண்டும்.

பட்டினி நிறுத்தப் படும்போது நீண்ட நாட் பட்டினியாயின் முதல்நாளும் வேண்டுமானால் மறுநாள் மூன்றாவது நாட்கள் வரையிலும் பழங்களின் ரசங்களும் வெந்த காய்கறிகளும் கொடுத்து மெதுவாக நிதான ஆகாரத்திற்குக் கொண்டுவர வேண்டும். நீண்ட நாள் பட்டினியன்றி காய்ச்சல், பேதி, கடுப்பு முதலியவற்றிற்காகக் கொள்ளும் பட்டினிகளாயின் பட்டினி நிறுத்தப்படும் பொழுது பருப்பன்னம் அல்லது கஞ்சி முதலிய ஆகாரங்களையும் பொதுவாகக் காய்கறிகளும் கொடுத்துவிடலாம்.

நீண்ட நாள் பட்டினியை முறிக்கப் படும் போது அனுபோகமுள்ள பட்டினி வைத்தியர்களும், பட்டினி யிருந்து பழகியவர்களும் பக்கத்திலிருந்து புத்தி செல்லுவது நலம்.

இவ்வாறு வியாதிகளில் பட்டினியைப் பயமின்றியும் தைரியமாகவும் பயன் படுத்தி வியாதிகளைச் சுகப் படுத்தலாம்.

தீராதவியாதிகளைச்சுகப்படுத்தப் பட்டினியிருப்பவர்கள் ஒரே யடியாக நீண்ட தினங்கள் பட்டினியிருக்க முடியாதென நினைக்கின் அடிக்கடி மாதத்திற்கு ஒரு முறை யல்லது இரு முறைகளில் மூன்று தினங்களல்லது இரண்டு தினங்கள் வீதம் பட்டினி யிருந்து பழகி வரலாம். இவ்வாறு இருந்து வருவதால் காலஞ் செல்லச் செல்ல வியாதிகள் பலங்குன்றி நீங்கி விடுகின்றன.

வெட்டுக் காயங்கள் இரத்தக் கட்டிகள், பிளவைகள், பிரசவித்த ஆரம்ப ஆயாசங்கள், வாந்தி பேதி சீதக் காய்ச்சல் முதலிய சமயங்களில் பட்டினி யிருப்பதால் அந்த நோய்கள் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்தோடிவிடுகின்றன.

வைராக்கியம், பிடிவாதம், சந்துஷ்டியான உள்ளம், சிருஷ்டியற்புதங்களைப் பார்த்து மதித்து ஆனந்திப்பதில் இச்சை, கலைஞானக் கேள்வி, சங்கீதகமனம், குழந்தைகளுடன் விளையாடல், ஆகிய இவ்வித ஆனந்தங்களில் மனதைச் செலுத்தித் தியாலத்தைப் போக்குதல் வேண்டும். வேடிக்கை விநோதங்களில் மனஞ் செலுத்தல் மிகவும் நலம். இவ்விதம் பொழுது போக்கின் ஒவ்வொரு கலையிலும் புதிய தெளிவும், தைரியமும், வார்த்தைகளால் எழுதுவதரிதான சுக தேகத்தின் நற் குறிகளும் தன் பிறப்பு முதல் கண்டறியாத புதுப் பிறப்பின் தோற்றமும் உண்டாவதைப் பார்க்கலாம்.

பட்டினிக் காலத்தில் நோயுள்ளவர்களுக்கும், நோயில்லை யென்று சொல்லிக் கொள்ளக்கூடியவர்களுக்கும் இரண்டாவது தினத்திலிருந்து ஐந்து அல்லது எட்டு தினங்கள் வரை வாய்நாற்றம் மிகவும் கொடுமையாக விருத்தியாகும். சுவாசமும் நாற்றமடையும். ரோகத்தின் கொடுமையைப் பொறுத்து இந் நிலை சிறிதும் பெரிதும் தோன்றும்.

இந் நிலை குறைவதிலிருந்தே நற் குறிகளும் தோன்றத் தொடங்கி யபிவிருத்தி யடையும்.

இந் நிலைக்காக யாதொரு பதார்த்தத்தையும் வாயில் போட்டுக் கொள்ளக் கூடாது. அப்படிச் செய்வதால் அழுக்குகள் வெளிப்படுதல் தடைபட்டு விடும். நெஞ்சின் கனமானது தலையிற்றங்கியுள்ள ஜலமும் அழுக்கும் வடிந்த பின்னரே குறைய ஆரம்பிக்கின்றது. நெஞ்சின் கனம் சிறுகச் சிறுகக் குறைந்து தலையும் நெஞ்சும் மிகக் கனமின்மையை யடைந்து விடின் நோய் நசித்து வரும் குறிகள் பிரகாசிக்கும்.

ஆகவே இவ் விஷயங்களைக் கவனித்துப் பட்டினியைப் பூர்த்தி செய்ய வேண்டியது.

நோயாளி மிகுந்த புத்திமானாகவும் விவேகியாகவும் நம்பிக்கையும் பிடிவாத முள்ளவனாகவுமிருப்பானாயின் தனது பட்டினியின் நிலையைத் தானே தெரிந்துகொண்டு நன்றாக நடத்திமுடிக்கலாம். மிக ஆபத்தாகக் கருதப்படும் வாந்திபேதி சீதக்காய்ச்சல் (Influenza) கொள்ளைநோய் (Plague) முதலிய வியாதிகளுக்குப் பட்டினி கைகண்ட ஔஷதமாகும். இவ் வியாதிகளுக்கு யாதொரு ஔஷதப் பிரயோகமும் வேண்டுவதில்லை. நான்கு நாட்கள் முதல் எட்டு தினங்கள் வரை சுத்தப் பட்டினியை அனுஷ்டிக்கவேண்டும். தேகத்தில் தோன்றும் எவ்வித மாறுதலுக்கும் சிறிதும் பயப்படுதல் வேண்டுவதில்லை. தாகமானால் ஜலம் கொடுத்து வரவேண்டியது அவசியம். இந்த ரோகங்கள் சூரியனைக் கண்ட பனி போல் பறந்து விடுகின்றன.

இவைகளே பட்டினியிற் கவனிக்கவேண்டிய முக்கிய விசேஷங்களாகும்.



## தேக பரிசுத்தம் பிராண பரிசுத்தம்

தேகத்திற்கும் பிராணனுக்கு முள்ள நெருங்கிய சம்பந்தத்தை நாம் இங்கு எடுத்துக் கூறுகிறது மிகை யாகுமெனினும் எடுத்துக் கொண்ட விஷயம் கட்டாயப் படுத்துவதற்காகச் சிறிது கூறி பட்டினியா லிவைகளடையும் தன்மையைச் சொல்லுவது முறையாகும்.

பிராணன் பரிசுத்தமாக விருந்தாலொழிய தேகம் சுகமுடையதாக விருக்கமுடியாது. தேகமானது அசுத்த பதார்த்தங்களால் கேவல நிலையிலும், பலஹீனத்திலும் கேடுறுமானால், அக் கேட்டின் மிகுதி போல் பிராணனும் அழுக்கடைகிறது. இக் காரணத்தால் தேகம் பிராணனையும் பிராணன் தேகத்தையும் ஆதாரமாகக் கொண்டு சுகம் சுகக் கேடு என்ற பதவிகளை யடைவதாக நாம் உணர்கிறோம்.

இந் நிலையை யறிந்த மனிதசமூகம் தேகத்தை சுக நிலையில் வைக்க முயன்றது. இம் முயற்சிகளே வைத்தியம், பட்டினி, யோகசாதனம், என்பனவைகளாகும்.

இம் மூன்று முறைகளில் முதல் முறையானது தனது தப்பான வழியால் நலஞ் செய்து தவறி விட்டது ஆச்சரியமாக மாட்டாது.

எப்படி யெனில் ஒரு வீடு அல்லது ஒரு அறையைச் சுத்தம் செய்ய வேண்டியவன் தெருவிலிருக்கும் குப்பையை அள்ளி அவ் வீடு அல்லது அறையில் கொட்டிவிட்டு அறை சுத்தமாய்விடும் என்று நம்பி யிருப்பானானால் அந்த வீடு முன்னிலும் அதிக அழுக்கை யடையுமே யன்றிச் 'சுத்தம்' என்ற பதவியை யடைய மாட்டாதல்லவா? அது போலவே 'ஔஷதம்' என்ற அந்நிய பதார்த்தத்தை அழுக்குள்ள தேகத்தில் செலுத்தி தேகம் சுத்தமாய்விடும்

என்று நம்புவது வீணே யாகும். இதில் சந்தேகம் வேண்டுவதில்லை.

ஆகவே இந்த இரகசியத்தை யறிந்த விவேகிகள் தேகம் தன் சுகத்தைத் திரும்பவு மடைவதற்குத் தேக இயந்திரங்கள் தன் வேலையைத் தானே செய்து முடிக்க ஓய்வு கொடுப்பதே சரியென்று போஜனத்தை அவ் வினை முடியுங் காறும் நிறுத்திக் கொள்வது உத்தமம் எனத் தெரிந்து கொண்டார்கள். இதையே 'பட்டினி' என்று இங்கு கூறுகிறோம்.

இந்தப் பட்டினியால் தேகம் பரிசுத்தத்தை யடையவே அத் தேகத்தை விட்டகலாத பிராணனும் சுத்தத்தை யடைகிறது.

உடல், உயிர் ஆகிய இரண்டும் ஒரே காலத்தில் நிலையற்ற நிலையினின்றும் நிலைபெற்ற நிலையில் வந்து சேருமானால் இந்த ஆனந்த நிலையைக் காப்பாற்றிக்கொள்ள அவ்வுடல் உயிர்களே பழகிக் கொள்கின்றன. இப் பழக்கம் எதிர்கொண்டழைக்கத் தக்கதாகும்.

அதிக உணவருந்தும் வழக்கமில்லாதவர்களும் பசியாத போது கண்டிப்பாய் புசியாதவர்களும் தான் பூரண விருத்தாப்பியம் வரை வாழும் கிழவர்கள் என்றறிய வேண்டியது.

புத்திக்கு விஷயத்தைச் சரியாக நிச்சயிக்கும் வல்லமை எப்போதும் நிதான நிலையில் உடலும் உயிரும் இருக்கும்போதுண்டாகுமே யொழிய அதிகப்பசியிலேனும் அதிக உணவிலேனுமுண்டாவதில்லை.

உடலுமுயிரும் சேர்ந்து புரிவதான சில விநோத வினைகளை நாம் மனித வாழ்வில் பார்க்கிறோம். அவை எவையெனில் நோய்கொண்ட நிலை, பைத்தியம், கோபம், விடமுடியாத குடி, களவு, பொய், கொலை, அபின் தின்னல், வியபசாரம் முதலியவைகளாகும். இவ் வழக்கங்கள் ஒவ்வொன்றையும் பட்டினியால் பூரண சுகநிலைக்குக் கொண்டுவருவது மிகவும் சாத்தியமாகும்.

ஓரே காலத்திலோ அன்றி விட்டுவிட்டோ பட்டினியை நிலை பார்த்து உபயோகிப்பதால் இவ் விநோத உயிர், உடல் பேதிப்பு நிதானத்தை யடைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். பைத்தியக்கார வைத்தியசாலைகளிலும், காராக்கிரஹங்களிலும் தகுந்த சுகாதார சாலைகளிலும் இம்முறையைச் செய்யப்படல் வேண்டும்.

இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் ஒன்றிருக்கிறது. அது எதுவெனில்:- பிராணனை எவ்வகையிலேனும் ஒருமுறை 'மிகப் பரிசுத்த நிலைக்கு'க் கொண்டு வந்து நிறுத்திவிட்டோமானால் அப் பிராணன் ஒரு நூற்றாண்டல்ல பல நூற்றாண்டுகள் காறும் உடலையும், உடலைச் சேர்ந்த சகலவித வினைகளையும் அதிக்கிரமித்துப் போகாமற் காப்பாற்றிக்கொண்டு ஆனந்தத்தையும், நீண்டாயுளையும் திட்டமாகக் கொடுக்கும் என்பதே யாகும். இங்ஙனம் கூறுவதைப்பற்றி படிப்பவர்கள் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. மிகப் பரிசுத்த நிலைக்குக் கொண்டுவருவது கஷ்டமேயன்றி நாம் மேலே கூறிய பன்னூற்றாண்டுகள் வாழ்ந்து சுகிப்பது கஷ்டமேயில்லை. பிராணன் 'மிகப் பரிசுத்த நிலை' என்ற மொழியின் உண்மையான பொருள் பிராணனுடைய உசித்தான சக்தி என்பதே யாகும்.

இந்த முக்கிய விஷயத்தைக் குறித்து இங்கு விரிக்க இவ் வியாசம் இடந் தாராதாகையால் 'சக்தி' என்ற மற்றொரு வியாசத்தால் கூறுவோமாக.

பட்டினியால் பிராணன் குறைவாகச் சாதாரண ஜனங்களும் வைத்திய நிபுணர்களும் நினைப்பது மிகவும் துக்கிக்கத்தக்க தப்பபிப்பிராயமாகும். பிராணன் பட்டினியால் குறைவதுமில்லை. அதிகப் படுவதுமில்லை. உடல் நோயுற்றிருக்கும்போது பிராணன் தன் நிலையற்றுத் தவிப்பதையும் உடலின் நோய் அல்லது அழுக்குகள் நீங்கியதும் பிராணன் சுபாவத்தையும் ஆனந்தத்தையும் அடைவதையும் பார்க்கிறோம். ஆகவே அழுக்கற்ற தேகத்தில் பிராணன் சுகமாக வாழத் தயாராக விரும்புவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். சுத்ததேகம் சுத்தமானப் பிராணனை யடைந்ததும் அந்தப் பிராணன் உடல் ஆகிய இரண்டின் இன்றியமையாததான ஆகாரத்தைக் கொடுக்கப்படுமானால் இவ் விரண்டும் தம் தம் வேலைகளைக் கிரமமாகச் செய்து வருவதில் இறங்கி விடுகின்றன. என்றால்:- உடலும் உயிரும் வாழ்ந்து வரத் தகுதியுடையதாவதற்கும், புத்தி, வைராக்கியம் முதலிய குணங்கள் சக்தி யடைவதற்கும் பட்டினி அனுஷ்டிக்கப் படுகிறதேயன்றி உயிரின் சக்தியைக் குறைக்கவாவது கூட்டவாவது பட்டினி பயன்படமாட்டாது.

## நீண்டாயுள்

மேலே நாம் கூறியபடி உடலும் உயிரும் "மிக பரிசுத்த" நிலையை யடைந்த பின்னரே மனிதன் நீண்டாயுளை யடையத் தகுதியுள்ளவனாகிறான். "மிகப்பரிசுத்த" நிலையென்பது நாம் அபிப்பிராயப்படுகிறபடி தற்காலத்துப் படித்த புத்திமான்களுடைய கவனத்தை மட்டுமன்று; விஞ்ஞானிகளின் முழுக்கவனத்தையும் கவரத்தக்கதாகும். அந் நிலையின் சாதாரண குணங்கள் கீழ்க்கண்டவாறாகும். — மாறுதலடையாத சுகதேகத்தை யடைதல் உடலும் உயிரும் காற்று, ஜலம், உணவு ஆகிய இவைகள் மாறுவதால் பாதிக்கப்படாதிருத்தலும் இரத்தம் சுத்தத்துடன் தன் வேலையைச் செய்து வருதலுமாகும்.



இந்த நிலைமை சாதாரண காரணங்களால் மாறுவது கஷ்டம். அவ்விதம் மாறுதிருப்பதற்காகவே பட்டினி உதவி செய்வதாகும். எனில்; எக்காரணத்தாலேனும் தேகம், பிராணன் இவைகளின் நன்னிலை மாறும்போது அம்மாறுதலால் பிராணனுக்கும் ஆபத்துவராமல் காத்து உதவி செய்வதற்குப் பட்டினி உபயோகிக்கப்படல் வேண்டும்.

மிகப் பரிசுத்த நிலையில் உயிரும் உடலும் சில காரணங்களாலேனும் மிகச் சிறு சக்தியுள்ள பகைத் திறங்களாலேனும் மாறுதலடையமாட்டாது. இந் நிலைமையால் தான் நீண்டாயுள் சம்பவிக்கிறது.

நீண்டாயுளுக்காக நம் பாரத நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகள் பல பரிசோதனைகள் செய்யப்பட்டு வந்ததாக நாம் படித்துங்கேட்டும் வருகிறோம். சரித்திர ரீதியாகவும், கலைஞான ரீதியாகவும், இது நிஜம் என்பதைக் காட்டப் பல, ஆதாரவுகளும், சாஸ்திரங்களும் நமக்குச் சான்றாகவிருக்கின்றன. அம் முறைகளைத் தழுவியே தற்காலத்து விஞ்ஞான விசாரிகள் கூறும் நீண்டாயுளின் காரணங்களைநாம் ஒப்புக்கொள்ளுகிறோம்.

சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பிய விஞ்ஞானிகளுக்கு நீண்டாயுளின் மீது அவா அதிகப்பட்டு அதை யடையப் பல புஸ்தகங்களை யெழுதியும், பல மருந்துகளைக் கண்டுபிடித்தும், பல ஆராய்ச்சிகளைச் செய்தும் வருகின்றனர். இச் செய்கைகள் மிகவும் விரும்பத்தக்கதே யாகும். ஆனால் அவர்களின் முயற்சி "புருடனிறந்தபிறகும் கைபெண்டாட்டி புத்திசாலியாய் விட்டாள்" என்பது போலிருக்கிறது.

வேதோ சித்த கல்வியும், விஞ்ஞான விசாரமும் அவர்கள் கையில் வழிதப்பிக் கிடைத்ததைக்

கொண்டு அக் கல்வியையும் விஞ்ஞானவித்தையையும் தங்கள் சகோதரரான அந்நியரின் ஆஸ்திகளைக் கொள்ளை யடிக்கவும் அந்நிய நாடுகளைக் கைப்பற்றவும், அந்நியரின் கலை ஞானங்களை யழிக்கவும் உபயோகப் படுத்திப் பலனடைந்து வந்தனர். அன்றியும் தங்கள் நாடுகளிலேயே இயற்கை விரோதமான வாழ்வைப் பெருக்கி நோய்கள் பலஹீனம், அற்பமரணம் முதலியவைகளை விருத்திசெய்து அவைகளை நிவர்த்தி செய்வதாக ஔஷதங்களைக் கண்டுபிடித்து அதை வர்த்தகப் பொருளாக்கி உயிர்நாசமும் பெரும்பொருளும் ஈட்டி வரலாயினர். இவற்றின் பலனுலுண்டான மஹாயுத்தம் இவர்களிற் சிலருக்குச் சிறிது நற்புத்தியை யுண்டாக்கியதற்காக நாம் மகிழ்கிறோம்.

இப் புத்திமான்களான விஞ்ஞானிகளின் புதிய ஆராய்ச்சிகளால் உண்டாகும் நன்மைகளை உலகம் வரவேற்றுக் கைகொண்டும் புகழ்வதில் தடையொன்று மிராது. இவர்களின் முயற்சிகளோங்கி வளர்க!

சமீபத்தில் நாம் பத்திரிகையில் படித்த கீழே கண்ட விஷயம் நமது பட்டினியின் வெற்றியைப் பற்றியதாகும். அது இது.

அமெரிக்கா சிகாகோ சர்வகலாசாலையைச் சேர்ந்த ஆசிரியர் *ஏ.ஜெ. கார்ல்ஸன் முதுவயதை இளவயதாக்குவதற்காக ஒரு புதுவழி கண்டுபிடித்திருப்பதாகக் கூறுகிறான்.

மூன்று வருடங்களின் பரிசீலனைகளுக்குப்பின் யௌவனத்தை (மறுபடி) யுண்டாக்குவதற்குத் திறவுகோல் "பட்டினி" தான் என்று கண்டு கொண்டான். இவனுடைய கொள்கைப்படி இப் புனருத்தாரணத்திற்குப் பிரயோக அளவு பதினைந்து நாட்கள் பட்டினியாகும்.

இவனது பரிசைக்ஷச் சாலையில் இப்பதினைந்து நாட்கள் பட்டினியின் முடிவில் மூன்று நடுவயதுள்ளவர்களின் தேகரசாயன மாற்றத்தின் அளவு ஆச்சரியப் படும்படி நிதானத்தை யடைந்து விட்டது.

அம் மூவரின் தேக சருமக் கட்டிட நாடிகள் அவர்கள் ஆகாரமருந்தத் தொடங்கியவுடன் சுமார் நாற்பது வயதுத் தன்மையிலிருந்து பன்னிரண்டு வயதுத் தன்மையை யடைந்த நிலையின் அபிவிருத்தியை யடையத் தொடங்கிற்று.

ஆசிரியன் கார்ல்ஸன் இம் முறையைத் தனக்குத் தானே செய்து பயனடைந்திருக்கிறான்.

இவன் கூறுகிறான்—எனது இப் பரிசோதனைகளால் நீண்ட காலம் பட்டினி உமிழ்நீரை யதிகமாக வெளியேற்றுவதால் ஆகாரம் உட்கொள்ளத் தொடங்கிவிட்டால் தேகப்பழுவின் நிலைமை சுபாவத்தை யடைகிறது. (அன்றியும்) பட்டினி தேக அமைப்பை யௌவனநிசைக்குக் கொண்டு வருகிறதென்று நாம் உறுதியாகக் கூறுவோம் என்பதே.

மேலே கண்ட இத் தெளிவுரையால் நாமெடுத்தாண்டு ஸ்தாபிக்கும் பட்டினி முறையின் உண்மை நன்கு விளங்குமென்று நினைக்கிறோம்.

மனிதனுடைய வயது தேகத்தின் நிலையைப் பொறுத்ததேயன்றிப் பிராணனைப் பொறுத்ததன்று. பிராணன் சுத்தமான தேகத்தில் பெருகியும் ததும்பியும் மிகச் சக்தி வாய்ந்ததாகவும் பிரகாசிக்கும். அந்தச் சுத்தம் எவ்வளவு தூரம் குறைகிறதோ அதுபோல் பிராணனில் நிலையும் சக்தி யிழந்ததாகும்.

ஆகவே நீண்டாயுள் பிராண சுத்தத்தாலும் பிராணசுத்தம் தேக சுத்தத்தாலும், தேகசுத்தம்

* Pyof. A. J. Carlson of Chicago Univterciy

இருந்தாற் போலிருந்து எப்படி வந்ததென்று அந்தக் கனவிலும் அவனுக்கு வியப்பு உண்டாயிற்று. "பௌத்த தர்மத்தைப் பிரசாரம் செய்தல் கூடாது," என்னும் இந்த நிபந்தனைக்கு உட்பட்டே மானச் செல்வனாகிய மிருகேந்திரன் அசோகனுக்கு நட்பு பாராட்டத் தயாராயிருந்தான். அந்தப் புகழ்பெற்ற அசோகனை அன்புடன் வரவேற்று உபசரிக்க, அவன் துயிலில் அமர்ந்தவாறே கைகளை நீட்டியபொழுது, யாருடைய கரஸ்பரிசமோ அவனுக்கு உள்ளபடியே உண்டாயிற்று. தன் வைபவ காலத்தில் விசும்பின் கண் சம்பூர்ண கலைகளாலும் தண்கதிர்ச் செல்வத்தாலும் பொங்கிப் பூரித்த வெண் திங்கள் இப்பொழுது ஒளி குன்றி வாடியிருந்தது. பகவான் புவனபாஸ்கரன் சீக்கிரம் வந்து அதைப் புறங்காட்டியோடச் செய்வதே அதற்குற்ற நித்திய அநுபவமாயிருந்தது. நாடோறும் நிகழ்ந்த இவ்வனுபவத்தால் அது நல்ல படிப்பினைக் கற்றுக்கொண்டது. அப் படிப்பினையின்படியே இன்றும் அது தன் செல்வமாகிய கதிர்க் கிரணை மெல்ல மெல்ல சுருக்கிக்கொண்டிருந்தது. மிருகேந்திர மன்னனது நிலையும் அவ்வொளி குன்றிய வெண் மதியினதைப் போலவே ஆய்விட்டது. ஆயினும் வெண் மதி விழிப்போடிருந்தது. அதற்குத் தன் வருங்கால நிலைமை தெளிவாய்ப் புலப்பட்டது. மிருகேந்திரனோ நித்திரை வயப்பட்டிருந்தான். அவனுக்குத் தன் நிலையின் நினைவு கூட இல்லை மிருகேந்திர மன்னனும் தன்னைப் போலவே விபவமிழந்திருக்கிறானென்பதை வெண் மதி உணர்ந்து, அவனை நேரத்தோடே எழுப்பக் கருதித் தன் குளிர்ந்த கிரணங்களால் அவனைப் பல முறையும் தீண்டியது. ஆனால் அவைதெல்லாம் வீணே யாயிற்று. இத் தகைய மேன்மையான உபாயங்களால் மிருகேந்திரனை விழிக்கச் செய்வதற்கு இசைந்ததாயில்லை அவனுடைய மனநிலை. கடினமாகிய மாநுஷஸ்பரிசம் அவன்மேல் பட்டபொழுதுதான், அவனுடைய சொப்பனவஸ்தை ஒருவாறு நீங்கியது.

"அசோக, உன்னை அன்புடன் வரவேற்கிறேன்," என்று சொல்லிக்கொண்டே மிருகேந்திரமன்னன் தன்னைத் தீண்டிய ஆளைத் தழுவிக் கொள்ளப் போனான். அப்பொழுதுதான் அவனுக்கு நிலா வெளிச்சத்தில் தெரிந்தது தான் கண்டது கனவென்று.

"அரசன் அசோகனை வரவேற்று உபசரிக்கும் சமயம் சென்றுவிட்டது. இப்பொழுது அவனுடைய சேனைவீரர் உம்மைத் தேடிப் பிடிப்பதற்காக அரமனை முழுதும் அமளிகுமளி செய்துகொண்டிருக்கிறார்கள்," என்ற வார்த்தைகள் புதிதாய் வந்த வியக்தியின் வாயிலிருந்து வெளிப்பட்டன.

அந்த வியக்தியின் முகத்தை வியப்புடன் நோக்கிய வண்ணமாய் மிருகேந்திரன்,—"ஸ்வாமிகளே, தாங்களா!" என்றான்.

சிதானந்த ஸ்வாமிகள் தம்முடன் கொண்டு வந்திருந்த சில வஸ்திரங்களை மிருகேந்திரனிடம் கொடுத்துப் பரபரப்புடன் புகன்றார்,—"ஆம், நான்தான் ஆச்சரியப்படுவதிலும் உபசரிப்பதிலும் யோகக்ஷேமங்களை விசாரிப்பதிலும் ஒரு க்ஷணங்கூட கழிக்க வேண்டாம். பெரிய ஆபத்து விளைந்திடும், ஜாக்கிரதை. கேள்விகள் ஒன்றும் கேட்காமல் இந்த பௌத்த பிக்ஷுக்களின் ஆடையைத் தரித்துக்கொண்டு, கிழக்குப் பக்கத்து இரகசிய வழியே உடனே புறப்பட்டுச் செல்லும். விசுவாச காதகர்கள் மோசம் செய்து விட்டார்கள்."

"இப்படி கோழையைப் போல் நான் ஏன் ஓடிப் போகவேணும்?" "காரணம் கேட்க வேண்டாம்—காலத்தை வியர்த்தமாக்க வேண்டாம். அசோகனுடைய படை வீரராலும் பிக்ஷுக்களாலும் இந்திரபுரம் முழுதும் நிறைந்து போய்விட்டது. உம்முடைய பீரங்கி குண்டு சாலையில் வெங்கனல் வைத்தாய்விட்டது. அது பற்றி யெரியும் வெளிச்சத்தில் இரக்கமற்ற பிக்ஷுக்கள் ஸநாதன தர்மிகளைச் சர்வ ஸம்ஹாரம் செய்து வருகிறார்கள்.

"இந்த நெருக்கடியிலா என்னை ஓடிப்போகச் சொல்லுகிறீர்கள்?"

"ஸநாதன வைதிக சமயம் அடியோடு அழிந்திருக்க வேண்டுமானால், நீர் ஓடித்தான் போகவேணும்."

"இந்த மானதனனாகிய மிருகேந்திரனுக்கு யுத்தத்திலிருந்து ஓடிப் போவதில் கொஞ்சமும் பழக்கமில்லையே!"



சிதானந்த ஸ்வாமிகள் பௌத்த பிக்ஷுக்களின் ஆடையை மிருகேந்திரனுக்குப் பலாத்காரமாய் அணிந்துசொன்னார்—

"இப்பொழுது நடந்து கொண்டிருப்பது யுத்தமல்ல இது துரோகம்! விசுவாச காதகம்! படுகொலை! இதிலிருந்து உயிர் தப்புவதுதான் உமது கடமை. இதை நேராக எதிர்ப்பதில் ஒரு புருஷார்த்தமும் இல்லை! விவேகமுமல்ல! மிருகேந்திர மன்னன் மாண்டால், ஸநாதன தர்மமும் அழிந்ததென்று எண்ணிக்கொள்ளும். கேவலம் தர்ம ஸம்ரக்ஷணார்த்தமே இன்று நீர் ஓடிப் போக வேண்டியது."

"ஆனால் இதன்—"

"அரசே, வீண் பேச்சில் காலம் போக்க வேண்டாம். சடுதியில் கிழக்குப் பக்கத்து ரகசிய மார்க்கமாய்ப் புறப்பட்டுப் போம்."

"இது ஆகாத காரியம். ரகசிய மார்க்கத்தின் சாவிகளை மந்திரி வைத்திருக்கிறாரே."

அரசன் பிக்ஷுக்களின் ஆடையைத் தரித்துக்கொண்டான். அதைக் கண்டு சிதானந்த ஸ்வாமிகள் ஆநந்தத்துடன் கூறினார்—"நான் சொல்லுகிற படி சீக்கிரம் செய்யும். கிழக்குப் பக்கத்து இரகசிய மார்க்கம் முன் போல் இரகசிய வழியாயில்லை. அந்த மார்க்கம் இப்பொழுது பகிரங்கமாய்த் திறந்திருக்கிறது. அங்கே ஸம்புஷ்டாசாரியரின் காவல் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காவலைக் கடந்து செல்வதற்குக் குழூஉக்குறி—சங்கேத வார்த்தை—பிரமீலா!"

"ஒன்றன் மேல் ஒன்றாய் அத்தியாச்சரியமாய் இருக்கிறதே! மந்திரியாரிடத்திலிருந்து சாவிகளை எப்படி வாங்கினார்கள். பீரங்கி குண்டு சாலைக்கு யார் நெருப்பு வைத்தது? பௌத்தர்கள் நகரத்துக்குள் எப்படி நுழைந்தார்கள்? 'பிரமீலா' குழூஉக்குறியான தெவ்வாறு? ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமாய் இருக்கிறதே! பிரமீலா! உன பதியின் சம்சயங்கொண்ட சுபாவத்தின் பரிணாமமோ இது!"

'ஓடிப்போம், ஒரு விநாடிகூடத் தாமசித்தல் கூடாது,' என்று சிதாநந்தர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே படாரென்று அந்தப் பள்ளியறையின் கதவு திறக்கப்பட்டு, ஒவ்வொருவராய் எத்தனையோ பௌத்த பிக்ஷுக்கள் பிராணபயத்தை விளைக்கும் ஆயுதங்களைக் கையிலேந்தி அங்கே வந்து சேர்ந்தனர். அவர்கள் சிதாநந்தனாரைச் சூழ்ந்து கொள்ள, இதற்குள் மின்னற் கொடியைப் போல் பளிச்சிட்டுக்கொண்டு பிரமீலை அங்கு வந்தாள். மிருகேந்திர மன்னன் அவளைக் கண்டான். பிரமீலை அவன் அணிந்திருந்த புதிய ஆடையினால் ஏமாந்து போனாள். இரண்டு விநாடிக்கு முன் அவள் வந்திருந்தால், அவளுடைய அபீஷ்டஸித்தி தவறாமல் ஆயிருக்கும். அவள் மிருகேந்திரனைப் பிடித்து விட்டிருப்பள். பௌத்த பிக்ஷுக்களின் முன் பிரமீலை ஆயுதபாணியாய்ப் பிரகாசிப்பதைக்கண்டு பிரமித்துப் போய்விட்டான் மிருகேந்திரன்! அவன் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளிப்படக்கூடவில்லை. அதனால் அவன் தப்பித்துக் கொண்டான். ஒரு வார்த்தையேனும் அவன் சொல்லத் துணிந்திருந்தால், அந்த க்ஷணமே அவனைத் துண்டுதுண்டாய் வெட்டி யெறியும்படி பிரமீலையின் வாயிலிருந்து கட்டளை கிளம்பி யிருக்கும்; அப்பொழுதே அது நிறைவேறியுமிருக்கும்.

மிருகேந்திரன் தவசியம் தன் பள்ளியறையிலேயே அகப்படுவன் என்று பிரமீலை பெரிதும் நம்பியிருந்தாள். அதனாலேயே அவள் சற்றேனும் காலதாமதமின்றி ஓட்டமாய் ஓடி வந்தாள். ஆனால் அங்கே ஒரு சந்நியாசியைத் தவிர வேறு யாரும் அகப்படவில்லை. அதைக்குறித்து அவளுக்கு ஆச்சரிய முண்டானதன்றி எரிச்சலும் பற்றிக்கொண்டது.

"ஏ ஆண்டி, மிருகேந்திரன் எங்கே இருக்கிறான்?" என்று கர்ஜித்தாள் பிரமீலை.

சிதாநந்தனார் சாந்தமாக மௌனம் சாதித்தார்.

"நீ இதைச் சொல்லமாட்டையா?" என்று கேட்டுக்கொண்டே பிரமீலை வாளை உருவிக்கொண்டு அவர் மேல் பாய்ந்தாள்.

சிதாநந்தஞர் அலையற்ற சமுத்திரம் போல் சாந்த மூர்த்தியாய் விளங்கினுர். அவர் சிறிதும் கலங்க வில்லை. மிருகேந்திரனுக்கு அவ்வளவு சாந்தத் தன்மை ஏற்படாமையால், தன் பரம பூஜ்யராகிய குருமூர்த்திக்கு இழைக்கப்பட்ட அவமானத்தை அவனுல் சகிக்கக்கூடவில்லை. அவன் பிரமீலைக்கு குரோதம் பொங்கும் விழிகளால் சுட்டுவிடுவான் போல் விரைத்துப் பார்த்தான்.

பிரமீலை சிதாநந்தரை பயமுறுத்திப் புகன்ருள்—"உனக்கு உன் உயிரின் மேல் ஆசை இருந்தால், மிருகேந்திரன் எங்கே ஒடிவிட்டானென்று அதை சீக்கிரம் சொல்லு."

சிதாநந்தஞர் கம்பீரமாய் அவளை ஆக்ஞையிட்டு அடக்கி—"ஏடி குடிலாய், நிறுத்து உன் பிரசங்கத்தை பதனம், ஒரு அடியாவது முன்னே எடுத்து வைக்கப் போகிருய்," என்று எச்சரித்துவிட்டு, மிருகேந்திரனுக்கு அவ்விடத்தை விட்டு உடனே செல்லுமாறு சைகை காட்டினுர். மிருகேந்திரனே இருந்த இடத்திலிருந்து இம்மியும் அசைய வில்லை. பௌத்த பிக்ஷுக்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தில் அவன் இன்னது செய்வதென்று தெரியாமல் தியங்கி நின்ருன்.

"முன்னே அடியெடுத்து வைக்கக் கூடாதா! ஏடா, பிச்சையாண்டீ, நீ யார் மேல் இந்த கட்டளையைச் செலுத்துகிருய்?"

"ஒரு விசுவாசகாதகியும், மோசக்காரியுமான சிறுக்கியின் மேல்!"

சிதாநந்தருடைய வாயினின்று இந்த வார்த்தைகள் வெளிப்படவும், பிரமீலைக்குக் குரோதத்தை அடக்க முடியவில்லை. அவள் ஆதுரத்தோடு உதட்டைக் கடிக்க, அதினின்றும் இரத்தத் துளிகள் சிந்தலாயின. ஒரு கையினுல் வாளையுருவி, மற்றக் கையைச் சிதாநந்தஞரின் மேல் ஓங்கிக்கொண்டு அவள் ஓடிவந்தாள்.

சிதாநந்தஞர் தாம் இருந்த இடத்தினின்று ஓர் அங்குலமும் நகராமல் அதிகாரத்தோடு கூடிய குரலில் கூறலுற்ருன்—"ஏடீ சண்டாளி, போ அப்பாலே. இந்தச் சிதாநந்தன் சரீரத்தைத் தொட சாகசஞ் செய்யாதே. இன்று வரையில் எந்த ஸ்திரீயின் நிழலும் இந்தச் சரீரத்தின் மேல் விழுந்ததில்லை. கடும் பிரமசாரியின் உக்கிரபிரமசாரியின்—அங்கஸ்பரிசம் எவ்வளவு கடூரமான தென்பதைப் பரீக்ஷிக்க சாகசம் பண்ணுதே. இந்தச் சிதாநந்தன் சரீரத்தைத் தீண்டி அவன் கோபத்துக்கு இரையாகாதே!"

"சிதாநந்தம்" என்னும் வார்த்தை ஸ்வாமிகளின் வாயினின்று வெளிப்பட்டதோ இல்லையோ, பிரமீலையின் குரோதம் நீராய் உருகிவிட்டது.

ஹரித்துவாரத்து சிதாநந்த ஸ்வாமிகளின் பிரதாபம் அக்காலத்தில் மிக ஓங்கியிருந்தது. அவருடைய பிரஹ்மதேஜசும் அப்படியே அற்புதமாயிருந்தது. கலிங்க நாட்டின் பலாட்டியராகிய வைதிக அரசர்களுக்கு அவரே குருவாயிருந்தார். அக் காலத்து ஆரியர் அவரைத் தெய்வ துல்லியமாய்ப் பாவித்துப் போற்றினுர். பௌத்தர்கள் அவரது சத்திய சீலத்தையும் பிரஹ்ம தேஜஸ்ஸையும் யோக்கியதையையும் கண்டு மிகப் பயப்பட்டனர். பௌத்த பிக்ஷுக்கள் சிதாநந்தரின் தேஜஸ்வினுல் கண் கூசிப் பிரமித்துப் போயினர். 'சிதாநந்தன்' என்னும் பெயரைக் கேட்டவளவில் அவர்கள் ஒவ்வொருவர் அடியாய்ப் பின்னிட்டனர்.

பிரமீலை தன் குரோதத்தை ஓசைப் படாமல் விழுங்கிக்கொண்டு தன் பக்கத்தில் நின்ற பௌத்த வீரர்களைப் பார்த்து, சிதாநந்தரை அசோகனது படமாளிகைக்குக் கொண்டு போகும்படி கட்டளையிட்டுவிட்டு, மிருகேந்திரனைத் தேடிக்கொண்டு சென்ருள். செல்லும் சமயத்தில் சிதாநந்தரின் மேல் குரோதம் நிறைந்த பார்வையை வீசி அவருடன் புகன்ருள்—"சிதாநந்தா, மிருகேந்திரன் இந்திரபுரத்தினின்று உயிரோடு வெளிப்பட்டுப் போகமுடியாது. அவன் பொறுமையற்றவன், அவசரக்காரன், யோசனையின்றி ஆயிரக் கணக்கான சத்துருக்களோடு தனியே நின்று போர் புரிவதில் முன்பின் பார்க்கிறவனல்ல. சூரியோதயத்துக்கு முன்னமே, உனக்குத் தெரியவரும் இந்த பயங்கரமான ரணயஜ்ஞத்தில் அவன் ஆகுதியாய்ப் விட்டானென்று."



பிக்ஷுவேஷம் தரித்திருந்த மிருகேந்திரன் பக்கல் பொருள் பொதிந்த பார்வையைச் செலுத்திச் சிதாநந்தஞர் சொல்லலுற்ருர்—"பிரமீலா, அரசன் சுற்றுப் பக்கத்தில் எங்காவது இருந்தால், உன் மந்திரோபதேசத்தைத் தனக்கு அநுகூலமாக உபயோகியாமல் இருக்கமாட்டான். தன் குழந்தைகுட்டிகளை மாத்திரமன்று, என்னுடைய பிராணனைக் கூட அவன் எவ்வளவும் லட்சியம் பண்ணுமல், இந்தத் தற்செயலான சங்கடத்தினின்றும் தப்பித்துக் கொண்டிருப்பான். பிறகு ஸநாதன தர்மத்தின் ஸம்ரக்ஷணுர்த்தம், சாத்தியப்படாமல், என்னையும் உங்களுடைய பிணிப்பினின்று விடுவிப்பன்."

"அவனுடைய சவத்தைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறவரையில், நீ சந்தோஷமாய் இப்படிப்பட்ட இனிய கற்பனைகளின் சுகத்தை அநுபவித்துக்கொண்டே இரு. உயிர் பிழைத்திருப்பதற்கான யந்திரத்தை உபதேசிப்பதைவிட, அவன் சாகும் சமயத்திற்கூட அவனுடைய ஆத்மாவுக்குப் பொறுக்கமுடியாத வேதனையை உண்டாக்கக் கூடிய விஷயந்தோய்ந்த கர்ணமந்திரத்தை அந்திய காலத்தில் அவன் காதிலே ஓதுவது ஏற்றதாகும். அவன் சரீரம் துண்டுதுண்டாய் வெட்டுண்டு போவதற்கு முன்னமே, அவனுடைய உயிர் இவ்வுலகத்தை விட்டுப் போவதற்கு முன்னமே, பிரமீலையின் சாமர்த்தியம் இவ்வளவென்று அவனுக்குத் தெரியவேணும். அவன் மரிக்கும் சமயத்தில் பிரமீலை கலிங்க நாட்டாரியாய்விட்டாள் என்ற செய்தியை அவன் அவசியம் தெரியவேணும். அறிந்தால் ஏதமபக்ஷம் அவனுடைய ஆவியாகிலும் இந்த மகா பாக்கியவதியாகிய பிரமீலா மகாராணியைச் சுற்றித் திரிந்து கொண்டிருக்குமே."

பிரமீலை இப்படி பேசிக்கொண்டிருக்கையில் அவளுடைய பணிப்பெண் மாதவி அவளிடம் வந்து—"அந்தப்புரத்தில் தேடிப் பார்த்ததில், தேவி இந்துமதியும் கோமகள் பிரணயினியும் நேற்றே இந்திரபுரத்தை விட்டு எங்கேயோ போய்விட்டார்களென்று தெரிய வந்தது," என்று செய்தி சொன்னுள். அதைக் கேட்டதும் பிரமீலையின் ஜொலிக்கும் சௌந்தர்யம் சிறிது வாட்டத்தால் கறுத்தது.

சிதாநந்தஞர் ஆநந்தத்துடன் பேசலுற்ருர்—"மாதர்களின் இயல்பாகிய மென்மையைக் களங்கப் படுத்தும் அரக்கியாகிய பிரமீலா! கேள், தேவி இந்துமதியின் விஷயத்திலும் இராஜகுமாரி பிரணயினியின் விஷயத்திலும் நீ முற்றிலும் நிராசையே அடையும்படி நேர்ந்துவிட்டது. அவர்கள் நன்ருய்ப் பாதுகாக்கப் பட்டிருக்கிருர்கள். அப்படியே மிருகேந்திர மன்னனும் இந்தக் கபடச் சூழ்ச்சியிலிருந்து க்ஷேமமாய்த் தப்பித்துக்கொண்டு பிறகு சத்திய தர்மத்தின் பிரகாசத்தை இவ் ஆர்யாவர்த்தத்தில் பிரவர்த்திப்பிப்பான். சில காலமாக பௌத்த-ராஹு-க்ரஸ்தமாயிருக்கும் ஆரிய தருமமென்னும் சூரியன் மீண்டும் பூரண ரூபத்துடன் பிரகாசிக்கும். ஈசுவர சங்கற்பம் இவ்வாறே இருக்குமென்று தோற்றுகிறது. தருமத்தின் பிரபாவத்தை நோக்கும்போது, யாம் எமது உயிரைத் துரும்பெனக் கருதுகின்ருேம்."

"உன்னுடைய ஈசுவர சங்கற்பம் பிரமீலையின் சங்கற்பத்தின் முன் துரும்புக்குச் சமானம்! இவ் விஷயத்தின் அநுபவம் உனக்கு சீக்கிரத்திலேயே உண்டாகும்," என்று சொல்லிவிட்டுப் பிரமீலை அங்கிருந்து போய் விட்டாள். அதே வாயில் வழியாக உடனே ஒரு திராயதபாணியாகிய பௌத்த பிக்ஷு தலைகுனிந்த வண்ணமாய் வெளியே சென்ருன். மிருகேந்திரன் சுற்றுப் பக்கங்களில் எங்குமில்லை என்பதைச் சிதாநந்தஞர் கண்டு களிப்படைந்தார். அதன்மேல் அவர் அதிக சந்தோஷத்துடன் அசோகனது படைவீரர்களின் வசமாகிவிட்டார். பிரமீலையும் தன் வாக்கை நிறைவேற்றினுள். சூரியோதயத்துக்கு முன்னமே அவள் ஒரு தலையற்ற பிரேதத்தைச் சிதாநந்தஞருக்குக் காணிக்கையாக அனுப்பினுள். அவர் அதை சூக்ஷ்மமாய் உற்றுப்பார்த்துவிட்டு, பிரமீலையால் அனுப்பப்பட்ட அதிகாரியைச் சாந்தமாய் இவ்வாறு கேட்டார்—

"இந்தச் சவம் யாருடையதென்று எனக்குத் தெரியவேண்டு மென்பதுதானே உம்முடைய பெருமாட்டியின் விருப்பம்."

அதற்குக் கிடைத்த மறுமொழி—"எவனே ஒரு துஷ்டன் மகாராஜா மிருகேந்திரனைக் கொன்றுவிட்டான். இந்தப் பிரேதம் அவருடையதே."

"நல்ல அழகு! இரண்டாவது கபடச் சூழ்ச்சிக்கு இது பிரயத்தனம் போலும்!" என்று சொல்லிச் சிதாநந்தஸ்வாமி நகைத்தார்.

பௌத்த பிக்ஷுக்களும் அசோகனது சைனியமும் இந்திரபுரத்தில் எங்கணும் திரிந்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அதைப் பற்றிய செய்தி தானும்—அதன் வாசனைதானும்—அசோகனுக்கு எட்டவில்லை. இரவு வெகு நேரம் வரையில் அசோகனும் இராதாகுப்தனும் மிருகேந்திரனுடன் செய்துகொள்ளப் படப்போகிற சந்தியின் நிபந்தனைகளை நிர்ணயித்துக் கொண்டிருந்தார்கள். அது காரணமாக அசோகன் காலையில் சிறிது நேரங்கழித்துப் படுக்கையிலிருந்து எழுந்தான். அவன் தன் கூடாரத்திலிருந்து வெளியே நோக்கியபொழுது, பிரபஞ்ச முழுதும் அவனுக்குப் புதிதாய்த் தோற்றியது. நடுநிசி வரையில் கூடாரத்தில் தம்தம் இடங்களில் குறட்டை விட்டுக்கொண்டிருந்த படைவீரர் அங்கே இப்பொழுது அவனுக்குத் தென்படவில்லை. அவர்களுடைய பாசறை முழுதும் பாழடைந்திருந்தது. நள்ளிரவு வரையில் சந்திர கிரணங்களின் வெண்மையுடன் போட்டிப் போட்டுக் கொண்டு பாசறையின் பக்கல் பறந்துகொண்டிருந்த அவனுடைய புகழ்க்கொடி இப்பொழுது அங்கே காணப்படவில்லை. அதனால் அவனுக்கு மிக்க வியப்பு உண்டாயிற்று. தன் எஜமானனை நெடுநேரம் அந்தகாரத்தில் வைத்திருப்பது—சந்தேகத்தில் விட்டு வைப்பது—உசிதமல்லவென்று நினைத்து மோகனன் எதிரில் வந்தான். கிழக்குத் திசையில் இந்திரபுரத்தில் மகதநாட்டின் கீர்த்திக்கொடி பறந்து கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டித் தன் உள்ளக்கிடக்கையை அவன் எஜமானனுக்கு அறிவித்தான். அதிலிருந்து அசோகனுடைய வியப்பு இன்னும் அதிகமாயிற்று. அவன் மோகனனை அதற்குக் காரணம் கேட்பது போல் நோக்கினான்.

மோகனன்—"இந்திரபுரம் விழுந்துவிட்டது! கலிங்க நாட்டை வெற்றிக்கொண்டாய் விட்டது!"

அசோகன்—"அதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் இது எப்படி சம்பவித்தது? கேவலம் ஆறே நாழிகைக்குள் இந்திரபுரத்துக் கோபுரத்தின் மேல் நம்முடைய கொடிமரம் எப்படிப் போயிற்று?"

"இந்த விஷயத்தில் எனக்கும் ஒன்றும் தெரியாது," என்று மோகனன் ஒப்புக்கொண்டான்.

அசோகன் மீண்டும் கேட்டான்—"நம்முடைய சைனியம் இங்கிருந்து எப்பொழுது போயிற்று?"

"இரண்டு நாழிகைக்கு முன்!"

"அவர்கள் இரண்டே நாழிகைக்குள்ளாகவா இந்திரபுரத்தில் கொடியைப் பறக்க விட்டார்கள்?"

"நம்முடைய சேனை இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னமே இந்திரபுரம் ஜயிக்கப்பட்டது."

"மந்திர வல்லமையினாலா, அல்லது தெய்விக அற்புதத்தினாலா?"

"ஸம்புஷ்டாசாரியரின் பிக்ஷு மண்டலம் இந்திரபுரத்தை ஜயித்தது," என்ற வார்த்தைகளால் மோகனன் அசோகனுடைய ஆச்சரியத்தைப் பன்மடங்கு அதிகமாக்கி மீண்டும் மொழியலுற்றான்;—பாதிராத்திரி கழிந்தபின் இந்திரபுர நகரத்தில் பயங்கரமான அக்கினிப் பிரளயம் காணப்பட்டது. அந்த மகாபூதம் விழித்துக்கொண்ட சுபலக்கினத்தில்போலும் ஸம்புஷ்டாசாரியரின் தலைமையில் ஆயிரக் கணக்கான பிக்ஷுக்கள் கூட்டம் கூட்டமாக இந்திரபுரத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் அக்கினியின் பிரசண்டமான பிரகாசத்தில் இந்திரபுரத்துக் கோட்டைக்குள்ளே பிக்ஷுக்கள் தாராளமாய் உலாவுவது காணப் பட்டது. எவ் வகையான தடையுமின்றி நகரத்துக்குள் அவர்கள் எப்படி பிரவேசித்தார்கள்? இது விஷயமாய் இதுவரையில் நான் எத்தனையோ அநுமானம் செய்தேன். ஆனால் எந்த அநுமானத்தினாலும் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. பிக்ஷுக்களின் குழாத்துடன் ஸம்புஷ்டாசாரியர் நகரத்துக்குள் சுலபமாய்ப் பிரவேசித்துவிட்டதைக் கண்டவுடனே இந்திரபுரத்திலிருந்து இராஜகுமாரத்தியும் இராஜமாதாவும் குதிரைச் சவாரி செய்துகொண்டு இங்கே வந்தார்கள். வந்து, கீர்த்திக் கொடியை எடுத்துக் கொண்டு இந்திரபுரத்துக்கு மீண்டார்கள். பெரும, தங்களை எழுப்பி இச் செய்திகளையெல்லாம் சொல்லவேண்டுமென்று எனக்கு ஆசையாயிருக்கிறது. ஆனால் இராஜமாதாவின் கட்டளையோ—"மகா ராஜாவை எழுப்பிக் கஷ்டப் படுத்த வேண்டாம். நாளை காலம் பெற அவருக்கு சகல சமாசாரங்களும் தெரிவிக்கப்படும்," என்றிருந்தபடியால், நான் இதுவரையில் சும்மா இருந்தேன்.

"பின்னை நம்முடைய சைனியம் எப்பொழுது சென்றது?"

"இந்திரபுரத்துக் கோட்டை மதில்மேல் கொடி நாட்டப் பட்டதற்கு நெடுநேரம் பிந்தி."

அசோகன் கூறினான்—"ஆசாரியர் கேவலம் பிக்ஷுக்களின் சகாயத்தினாலேயே கடைசியில் கலிங்கநாட்டை ஜயித்து விட்டார்! நம்முடைய பங்குக்கு வெற்றியின் ஒரு பாகமாவது கிடைக்கவொட்டவில்லை! மோகனா, அதோ எதிரில் பார் வந்துகொண்டிருக்கிறார்கள், பார்."

மோகனன் பார்வையைத் தூரமாய்ச் செலுத்தி மனங்கலங்கி மொழியலுற்றான்—"பெரும, எல்லாருக்கும் முன் நடந்து, கையில் சுவர்ண தண்டம் தாங்கி, அதை அவலீலையைச் சுழற்றிக்கொண்டு, வலது புறம் ஒரு பொழுதும் இடது புறம் ஒரு பொழுதும் முகத்தைத்திருப்பி, கர்வத்தோடு கூடிய திருஷ்டியைச் செலுத்திக்கொண்டு வந்துகொண்டிருப்பவர் ஸம்புஷ்டாசாரியர். அவருக்கு வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் இரண்டு ஸ்திரீகள் வந்துகொண்டிருக்கிறார்கள். வெள்ளை ஆடையையும், ஜீவகளையோடுகூடிய தோற்றத்தையும், ஸம்புஷ்டாசாரியரின் அருகே இருப்பதையும் பார்த்தால், வலது பக்கத்திலுள்ள ஸ்திரீ வேறொருவருமல்ல, இராஜமாதாவே என்று தோற்றுகிறது. அதை ஒப்பாமல் தீராது. ஏனெனில், அப்படியில்லாவிட்டால், உக்கிரமான தோற்றமும், இரத்தக் கறைபட்ட மலிக வேஷமும், கையில் பளிச்சிடும் வாளும், வீர நடையும் ஆகிய இவற்றைப் பார்த்தபிறகும், இவள் இராஜமாதாவல்ல, ரணதேவியே உக்கிரரூபம் தாங்கி வருகிறாளென்றே எண்ணவேண்டியதாகும். ஆனால் அந்த இடது பக்கத்து உருவத்தைச் சற்று நோக்குங்கள். பெரும, இவ்வளவு தூரத்திலிருந்தும் கூட, அந்தக் காளிமாதாவின் பக்கல், அந்த ரௌத்திராகாரமுடைய துர்க்கா தேவியின் பக்கல், அவ் வுயிருடன் கூடிய கல்லாலாகிய—அல்ல—இரத்த மாம்ஸங்களாலாகிய காளியம்மையின் பக்கம் பார்ப்பதற்கு எனக்கு பயங்கரமாயிருக்கிறது. அவள் இரத்தத்தில் குளித்திருக்கிறாள். அவளுடைய அடர்ந்த, அவிழ்த்துவிட்ட, கேசபாசம் தோள்களின் மேல் சுயேச்சையாய்ப் புரள்கிறது. உதட்டை அடிக்கடி கோபாவேசத்தினால் கடிப்பது காரணமாக, அதிலிருந்து இரத்தத்துளி இன்னும் சொட்டிக் கொண்டிருக்கிறது. கண்களில் நெருப்புப் பொறிகள் இன்னும் வீசிக்கொண்டிருக்கின்றன. மேலும் நடக்கும்போது இந்தத் தரை தன்னைத் தீண்டுவதினால் அவமதிக்கிறதென்று எண்ணினாள் போல் அதைக் காலால் உதைத்து மிதித்துக்கொண்டே இங்கு வந்துகொண்டிருக்கிறாள். அது இருக்கட்டும், இதோ தங்களை நோக்கி அலட்சியமாய்க் குதிரையை விட்டுக்கொண்டு வருகிறாரே, இவர் யார்?"

மோகனன் இப்படி பேசிக்கொண்டிருக்கையிலேயே, அரசிளங்குமரன் வீதசோகன் மிக நெருங்கி வந்துவிட்டான் குதிரையை விட்டுக் கடுக இறங்கிக் கையை நீட்டிக்கொண்டே அவன் அசோகனிடம் வேகமாய் வந்தான் அசோகன் அவனை அன்புடன் தழுவிக் கொண்டான்.

வீதசோகன் தமையன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, தீரமான குரலில் கூறினான்—"கலிங்கநாடு கைக்கு வந்துவிட்டது! அசோகனுடைய மாசற்ற புகழுக்கு வரவிருந்த களங்கம் அகன்றுவிட்டது! மௌரியரின் பிரதிஷ்டை நிலைத்துவிட்டது."

அசோகன் தன் தம்பியின் முகத்தைத் தைவந்து தழுதழுத்த கண்ட ஸ்வரத்துடன் கூறினான்—"தம்பி, நீ [illegible]."

"தாங்கள் மௌரியகுல தீபமன்றே?"

இந்தச் சகோதரர்களின் அன்பார்ந்த ஆலாபம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

தம்முள் ஒருவருக் கொருவர் இவ்வளவு அன்பு செய்வது தம் அன்னைக்குப் பிடிக்காதென்று சகோதரர் இருவருக்கும் தெரியும். ஆகையால் இராஜமாதா சமீபத்தில் வந்து கொண்டிருக்கிறாளென்று அறிந்ததும், அவ்விருவரும் தங்கள் அன்பு நிறைந்த சம்பாஷணத்தை உடனே சுருக்கிவிட்டார்கள்.

அசோகன்—"மோகனா, எதிரிலுள்ள பச்சைக் கூடாரத்தில் வரவேற்புக்கு வேண்டிய ஏற்பாடு செய்து, இதோ வந்துகொண்டிருக்கிற மானியர்களை அங்கே போய் உட்காரும்படி கேட்டுக்கொள். மந்திரி பிரதானிகளுக்கும் தர்ப்பார் நடக்கப் போகிறதென்று சொல்லி, அவர்களையும் அழைத்துக் கொண்டுவா. அதற்குள் நானும் வந்து சேர்கிறேன். கோமகனுடைய அற்புத சௌரியங்களையும் ஆசாரியரின் புத்தி சாதுரியத்தையும் பற்றிய வர்ணனையை நாம் கேட்க வேண்டும்," என்று சொல்லிவிட்டு வேந்தன் அசோகன் தன் கூடாரத்துக்குச் சென்றான். மோகனனும் ராஜாஞ்ஞையை நிறைவேற்றும் பொருட்டுப் புறப்பட்டுப் போனான்.

அசோகனுடைய தேஜோமயமாயும் ஜீவகளை நிறைந்து நிர்மலமாயும் விளங்கும் முகத்தை நோக்கிய வண்ணமாய் அவனுடைய அத்தியந்த பிரேமபாவத்தை நினைந்து நினைந்து வீதசோகன் அவ்விடத்திலேயே செயலற்று நின்றான். வீதசோகன் அசோகனது மாற்றாந் தம்பி, இராஜமாதா புத்திமதிதேவியின் புத்திரன்; அப்படியிருந்தும், அசோகனை அவன் சொந்த தமையனைவிட அதிகமாய் மதித்து அவனிடத்தில் அன்பும் பக்தியும் சிரத்தையும் பூண்டொழுகி வந்தான்.

அசோகனுடைய் தந்தை விந்துசாரன் பல மனைவியரை மணந்திருந்தான். ஒரே ஸ்திரீயை விவாகம் செய்துகொண்டு வாழ் நாளெல்லாம் அவளுடனே கழிப்பது அகௌரவமானதென்னும் ஒரு பிரமை அக்காலத்து அரசர்களுக்கு இருந்தது. அவனவனது பேருக்கும் பிரதிஷ்டைக்கும் தக்கபடி வம்ச கௌரவத்தையும் வம்ச விருத்தியையும் கருதி ஒருத்திக்கு மேற்பட்ட மாதர்களை அந்தப்புரத்தில் வைத்திருக்க ஒவ்வொருவனும் கடமைப்பட்டவனென்று அக்காலத்திய அரசர்களென்ன, அமாத்தியர்களென்ன, சிறிய பெரிய பிரபுக்களென்ன, உச்ச நீச பதங்களில் உள்ள பிரமுகர்களென்ன, ஆகிய எல்லோரும் நம்பினார்கள். குறுநில மன்னர்களது பதங்களின் உயர்வும் தாழ்வும் அவர்கள் மணந்திருந்த மனைவியரின் தொகையைக் கொண்டே நிர்ணயிக்கப்பட்டன. பெரிய மனிதர்களின் பெருமையும் அவர்களது பத்தினிகளின் எண்ணிக்கையைக் கொண்டே அளவிடப்பட்டது. இனி அரசர்களோ தங்கள் ஐசுவரியத்துக்கும் பிரபுத்துவத்துக்கும் ஏற்றபடி ஸ்திரீகளைச் சம்பாதித்து வைத்தார்கள். இப்படி பல மாதரை ஒரு புருஷன் மணந்தாலும் விவாகத்தின் தூய்மை கெடாதென்றும், செல்வச் செருக்கினால் மதி மயங்கி விஷய சுகத்தின் கொடிய விடாயைத் தீர்த்துக் கொள்ளும்பொருட்டு விலங்குகளைப் போல் அபலைகளை விவாக பந்தத்தால் திடமாய்ப் பிணித்து வைப்பதற்கு சாஸ்திர சம்மதமான ஆஜ்ஞை உண்டென்றும் இக்காலத்திலுள்ளதைப் போலவே நம் முன்னோருக்கும் மூட நம்பிக்கை இருந்தது.

விந்துசார ராஜனே எத்தனையோ விவாகங்கள் செய்துகொண்டான். மனைவியரின் தொகை எவ்வளவுக்கெவ்வளவு விருத்தியாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு தன் வைவாஹிக சுகமும் அதிகமாகுமென்று அவன் எண்ணினான் போலும்! இராஜமாதா புத்திமதி விந்துசாரனுக்கு விவாகஞ் செய்யப்பட்ட பிரதம பத்தினியாயிருந்தாள். அவளுக்குப் பின் விந்துசாரன் தன் அந்தப்புரத்தை நிறைப்பதற்கு எத்தனையோ புத்தி தெரியாதவரும் அநாதைகளுமான பேதைகளை விவாக மாங்கலிய மென்னும் ஆசை காட்டிக்கொண்டுவந்து குவித்தான். ஆனால் இன்னும் அவனுடைய விஷயசுக விடாய் தணியவில்லை. அவனுடைய கருத்து என்னவெனில், நான் இராஜா, மகதத்தைப் போன்ற பெரிய நாட்டுக்கு இறைவன்; ஆகவே மகதநாட்டிற் பிறந்த பெண்களின் ஒப்பற்ற அழகும் இளமையும் என் பொருட்டேயாகும்; அந்த அழகும் அந்தக் கன்னிமையும் விவாக மாங்கலியத்தினால் தூய்மையடையும்



போதே நான் அவற்றை ஆளும் அதிபதியாய்விட்டேன் என்பதே யாகும். அவன் உள்ளக்கிடக்கை இப்படி இருந்தபடியால், அழகிய பெண் எங்கிருந்தாலும்; அவளை அவ்வரசன் தன் கலியாணப் பந்தருக்குக் கொண்டுவராமல் விட்டதில்லை.

இவ்வாறு விவாகம் செய்யப்பட்ட பத்தினிகளால் அவனது அந்தப்புரம் நிறைந்து வருங்காலத்தில் ஒரு நாள் ஓர் ஏழையாகிய கிழப் பிராமணன் அரசனுடைய அத்தாணிக்கு வந்தான். அவனோடு ஒரு ரூபவதியும் யுவதியுமாகிய கன்னிகையும் இருந்தாள். அவளை அவன் அரசனுக்குக் காணிக்கையாக அளித்து,—"இவளுடைய ஜாதகத்திலிருந்து இவள் ஒரு சக்கரவர்த்திக்கு வாழ்க்கைப்படுவளென்று தெரிகிறது. அதை மெய்ப்பிக்கும்பொருட்டு இவளைத் தங்களுக்கு ஸமர்ப்பிக்கிறேன்," என்று விண்ணப்பித்தான். சோதிட விஷயத்தைப் பற்றிய இச்செய்தியை விந்துசார ராஜன் எவ்வளவுமட்டில் நம்பினானென்று உறுதியாய்ச் சொல்லமுடியாது. ஆயினும் சுபத்திராங்கி யென்றும் அவ்வேதியக் கன்னிகையின் சௌந்தரியத்துக்கு அவன் நிச்சயமாய் அடிமையாய் விட்டான். விஷயசுகத்தில் அழுந்திய அவனுடைய மனம் சுபத்திராங்கியை முதற்கண் கண்டபோதே மயங்கிவிட்டது. இத்தகைய வனப்பு வாய்ந்த வனிதா ரத்தினத்தைத் தன் அந்தப்புர திரவியசாலையில் அவசியம் சேமித்து வைக்கவேண்டுமென்று அவன் அந்த க்ஷணமே நிச்சயித்து, அடுத்த சுப லக்கினத்திலேயே சுபத்திராங்கியைத் தன் எண்ணிறந்த பத்தினிகளின் 'ஜாபிதாவில்' பதிவு செய்துகொண்டான். சுபத்திராங்கி உள்ளபடியே அத்தியந்த ரூபலாவண்யவதியாய் இருந்தமையால், இராஜ விந்துசாரன் அவளை அதிகமாய்க் காதலிக்கத் தொடங்கினான். அவன் அவளுடைய அந்தப்புரத்தை விட்டு வாராமலேயிருந்தான். புத்திமதிக்கும் மற்றைய இராணிமாருக்கும் இது சகிக்கமுடியாத துக்கமாய்விட்டது விந்துசாரனுடைய பழைய இராணிகள் எல்லோரும் சுபத்திராங்கியைப் பகைக்கலாயினர். அவர்கள் அவளைக் கொண்டு சாமானியமாகிய குற்றேவல்களைச்செய்வித்ததுமன்றி, கூடுமானமட்டில், இராஜா அவளைச் சந்திக்க முடியாமலும், இராஜாவின் பார்வையில் அவள் தாழ்வடைந்தும் போகும்படியான வேறு பல சூழ்ச்சிகளும் செய்தார்கள். அவ்வுபாயங்கள் பலிக்கவும் செய்தன சுபத்திராங்கியினிடம் அரசனுடைய அன்பு வரவரக் குறையத் தொடங்கியது. சில காலத்துக்குப் பின்னர் அவன் அவளை முற்றிலுமே மறந்துவிட்டான். இவ்வாறு சுபத்திராங்கியானவள் தன் பதியாகிய வேந்தன் விந்துசாரன் பிழைத்திருக்கையிலேயே வைதவ்ய துக்கத்தை அநுபவிக்கலாயினள்! இராணி புத்திமதியின் முயற்சி அந்த சமயத்துக்குப் பலித்துவிட்டது. இராணிவாசஸத்தில் மீண்டும் புத்திமதி தேவியின் அதிகாரம் தலையெடுக்கத் தொடங்கியது. திக்கற்ற சுபத்திராங்கியோ, அரசனுடைய அன்பைத் திரும்பவும் எவ்விதத்தில் அடையலாம் எவ்விதத்தில் மகிழ்விக்கலாம், என்கிற சிந்தையில் ஆழ்ந்திருந்தாள். இராஜாவிந்துசாரன் அவளை அவ்வளவு மறந்திருந்தபடியால், அவளைச் சந்தித்தாலும் அவன் இன்னாளென்று தெரிந்துகொள்ளக் கூடாதவனாயினான். இராஜனுடைய இந்த மனோ-தௌர்ப்பல்லியத்தைத் தன் சுபலாபத்துக்கு உபயோகப்படுத்தி, சுபத்திராங்கி மீண்டும் அவனுடைய மனத்தை மகிழ்வித்துத் தன் பக்கல் கவர்வதற்கான வழியைத் தேடலாயினள். அதற்காக அவள் ஒரு யுக்தி செய்தாள். விந்துராஜன் தினந்தோறும் க்ஷவரம் செய்துகொள்வது வழக்கம். சுபத்திராங்கி அந்த சமயத்தில் அவனைச் சந்தித்து அவன் தலைமயிரைச் சீவும் காரியத்தைத் தானே செய்ய ஏற்றுக்கொண்டாள். விந்துசாரராஜன் இவள் யாரோ சூத்திரப்பணிப்பெண் என்று எண்ணி, அவள் புரியும் பணிவிடையை ஏற்றுக்கொள்ளலாயினான். சுபத்திராங்கி இந்த வேலையை மிக்க பக்தி சிரத்தையோடும் ஏகாக்ரதையோடும் ஆற்றிவந்தாள். இதனால் விலாசப்பிரியனாகிய விந்துசாரனுடைய மனம் அவள்பால் இழுக்கப்படவும், அவன் அவளிடத்தில் கழிபேருவகை கூர்ந்து, அவளை நோக்கி— "உனக்கிஷ்டமானதைக் கேள்," என்றான் அப்பொழுது அவள் வணக்கமாய்க் கூறினாள்——"மஹாராஜா, ஸ்திரிகளாகிய நாங்கள்பட்டமகிஷியின் பதத்துக்கு மேலாக எதையும்விரும்புவோம்? திருவுள்ளமானால், அதையே இந்த அடிச்சிக்குத் தந்தருளுங்கள்." இதைக்கேட்டு அரசன் ஆச்சரியம் அடைந்து— "அது எப்படி சாத்தியமாகும்? நாங்கள் க்ஷத்திரியர்—நீயோ பணிப்பெண், சூத்திரச்சி!" என்றான். அதற்கு விடையாக அந்தப் பிராமணமணி

தன் வரலாறு முழுதும் கூறிக் கேட்பித்தாள். அப்பொழுதுதான் மற்ற இராணியரின் நீசத்தன்மையும் மாற்சரிய சுபாவமும் அரசனுக்குத் தெரிந்து, சுபத்திராங்கியின் மேன்மையும் அவன் நினைவுக்கு வந்தது. அதுமுதல் அரசன் மீண்டும் அவளிடம் முன்போல் அன்பு பாராட்டத் தொடங்கினான். அன்றியும் அவள் மற்றவர்களுக்கு அடங்கியிராமல் சுதந்தரமாய் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்தான். ஆனால் மகாராணியாயிருக்கும் கௌரவம் புத்திமதிதேவிக்கே நிலைத்தது.

அரசனது அந்தப்புரம் விவாகமான பத்தினிகளால் முற்றிலும் நிறைந்திருந்தது. அரசனுக்கு விவாகமான இன்பவல்லிகள்—முழுமலர்ச்சியுற்ற பிரேமலதைகள் அவனது அந்தப்புரமாகிய பூங்காவில் சோபித்துக் கொண்டிருந்தன. ஆனால் அரசனுக்கு அவனது கடிமணக் காதலின் பயன்பேறு—பலப்பிராப்தி—இன்னும் உண்டாகவில்லை. அரசனது இன்பக்கொடிகள் மக்கட்பேறாகிய கனியின்மையால் முற்றிலும் சுவையற்றிருந்தன. சுபத்திராங்கியினிடம் விந்துசாரனது காதல் மறுமலர்ச்சியடைந்த சிறிதே காலத்துக்குப்பின் அவ் வின்பவல்லியில் கனியுண்டாகும் அறிகுறிகள் தோன்றலாயின. அதே சமயத்தில் மூத்தராணியெனும் பெருமை பெற்ற புத்திமதி தேவியும் கர்ப்பவதியானாள். சுபத்திராங்கியினிடத்தும் புத்திமதியினிடத்தும் தன் காதல் கனிதரப் போகிறதென்று கேட்டு இராஜா விந்துசாரனுக்கு ஆநந்தம் பொங்கியது. அவசியமாகிய அவதி கழிந்த பின்னர் அவனிகாவலனது கடிமணக்காதலின் பயனாக இனிய இரு கனிகள் உதித்தன. புத்திமதிக்கு இரண்டு நாழிகை முன்னதாக சுபத்திராங்கி பிரசவித்தாள். பிரசவ காலத்தில் அவளுக்குச் சிறிதும் கஷ்டம் தோன்றவில்லை. தன் ஆயுள் முழுவதையும் அஹிம்ஸா தர்மத்தின் பிரசாரத்துக்கே அர்ப்பிக்கப் போவதும், எல்லா உயிர்க்கும் நலம் செய்வதையே தன் வாழ்க்கைக் கடனாக உணரப் போவதும், பிறர் துக்கத்தைக் கண்டு துக்கிக்கப் போவதுமாகிய இந்தச் சிசு தன் அன்னைக்குப் பிரசவ காலத்திலும் தயாமயமாயும் அத்தியந்த சுகமயமாயும் இருந்ததாகத் தோற்றினால் அதில் என்ன ஆச்சரியம்? ஆனால் பிற்காலத்தில் தேஜோமயமாய்த் திகழப் போகிற அச் சிசுவின் துகளற்ற ஒழுக்கத்தின் சூக்குமவித்து மக்களின் காட்சிக்கு முதலிலிருந்தே புலனாயிற்று. ஆதலினாலேயே சுபத்திராங்கிக்குப் பிரசவ காலம் மிகவும் சுகபரிபூரணமாய்த் தோற்றியது. அதைப்பற்றி விந்துசாரனும் பிறரும் மிக்க ஆச்சரியம் அடைந்து அந்தக் குழந்தைக்கு அசோகன் என்னும் பொருள் பொதிந்த பெயரை இட்டார்கள். என்று அசோகனுக்கு நாமகரண ஸம்ஸ்காரம் நடந்ததோ, அன்றே அதனிலும் அதிகமான சிறப்புடன் புத்திமதியின் புத்திரனுக்கும் நாமகரணம் செய்யப்பட்டது. அவள் மாற்சரிய வயப்பட்டு துராக்கிரஹத்தினால் தன் மகனுக்கு ‘வீதசோகன்’ என்று பெயரிட்டாள். அப்பொழுதே இனிவரும் கலகத்துக்கு அங்குரார்ப்பணமும் செய்யப்பட்டது.

அக்காலத்திய சட்டநூல் நிபுணர்களுக்குள்ளே ஒரு பெரிய விவாதம் கிளம்பியது—‘வன்மை பொருந்திய மகதநாட்டுக்குப் பிற்காலத்தில் இறைவனாய் வரும் உரிமையாளன் யார்?’. என்பதைக் குறித்து. இராஜகுமாரன் வீதசோகன் பட்ட மகிஷியாகிய புத்திமதியின், எனவே, விந்துசாரனது மூத்த பத்தினியின், மூத்த குமாரனானபடியால், அவனே ‘மகதேசன்’ என்று புத்திமதி தேவியும் அவளுடைய ஆலோசனை நண்பர்களும் வாதித்தனர். அசோகனது ஜநநம் முன்னர் நிகழ்ந்தது; ஆதலால் அவனே இப்பொழுது இளவரசனும் விந்துசாரனுக்குப் பின் மகதாதிபதியும் ஆகவேண்டியவன். என்று வாதித்தனர் ஏனைய சட்டநூல் வல்லுநர்.

இவ் விஷயத்தில் விந்துசாரன் உடன்பாடாகவாவது எதிர்மறையாகவாவது ஒன்றும் கூறினானில்லை. இதைப் பற்றி அவன் மஹா ஜனங்களை ஆராய்ச்சி செய்யவொட்டவுமில்லை. அவன் அரசிளங்குமரர் இருவருடைய யோக்கியதைகளையும் பற்றித் தனக்குள்ளே நிர்ணயம் செய்துகொண்டிருந்தான். எவனுடைய யோக்கியதை சிறந்ததென்று தெரியவருகிறதோ, அவன் சார்பாகச் சட்ட நூலின் நுண்ணிய இழைகளை இழுத்துப் பிரயோகித்தல் வேண்டுமென்பது அவன் செய்துகொண்ட நிர்ணயம். ஆனால் இவ்விரு சகோதரர்களின் இயற்கைகளிலுள்ள பரஸ்பரமான வேற்று



மையை உணர்ந்த பின்னும் விந்துசாரன் தன் இறுதி காலம் வரையிலும் யாருடைய யோக்கியதை மேலானதென்று நிச்சயிக்க முடியாதவனாயிருந்தான். அசோகன் சுபத்திராங்கியின் நேர்மையும், நிஷ்கபடமும், அன்புமயமுமான பயிற்சியில் வளர்ந்துவந்தான். அவனது நேர்மையான சுபாவத்தைக் கண்டு, இவன் பகைவரை முற்றிலும் வென்று மௌரிய வம்சத்தின் கீர்த்தியைப் பெருக்குவானென்று விந்துசாரன் பெருமை பாராட்டினான். ஆனால் வீதசோகன் கபடியும் தந்திரியுமான புத்திமதிதேவியின் காவலில் பயிற்சி பெற்றவனாயினும் அவனது இயற்கை அன்பு நிரம்பியதும், கள்ளங் கவடற்றசாதுத்தன்மையுடையதுமாயிருந்தது. அரசன் அதைக் கண்டு, இவன் தன் பிரஜைகளை மக்களைப் போல பாதுகாத்து அவர்களது ராஜநிஷ்டையாகிற வன்மையுடைய ஆதாரத்தின் மேல் மௌரிய வம்சத்தை நீடூழி நிலவுமாறு செய்வானென்று ஆசை கொண்டார். அசோகனது தேஜஸ்ஸையும் சற்றுப் பிடிவாதமுள்ள இளங்கன்றின் இயற்கையும் கண்டு விந்துசாரன், இவன் துஷ்ட நிக்ரகம் செய்வானென்று தீர்மானித்தான். இனி வீதசோகனது லலிதமாகிய இனிய பாலலீலைகள் அவன் சஜ்ஜன ரக்ஷகனாய் விளக்குவானென்பதை உணர்த்தின. இவ்விரு இராஜகுமாரர்களின் இயற்கைகளும் ஒன்றற்கொன்று பேதப்பட்டிருப்பதை உணர்ந்திருந்தும், விந்துசாரனுக்கு இவ்விருவரும் ஒரேதரத்தினரென்றும் ஒரே ரீதியாய் உபயோகமுள்ளவரென்றும், ஒரே தன்மையான யோக்கியதை யுடையவரென்றுமே தோற்றினர். ஆதலால் அவன் தன் இறுதி காலத்திலும் இவ்விருவருள் எவன் விசேஷித்தவன் என்பதை நிச்சயிக்கக்கூடாதவனாயிருந்ததில் யாதோர் ஆச்சரியமும் இல்லை.

காய்தல் உவத்தலின்றி நியதியின்படியே கடனாற்றி வரும் காலபுருஷனது உதவி கொண்டு வேந்தன் விந்துசாரன் தன் தந்தை சந்திரகுப்தனும் மற்ற முன்னோரும் வதியும் துறக்கநாடு செல்லவேண்டி இம்மை வாழ்க்கையை நீத்தான். அரியணை யுரிமையைக் குறித்து இதுகாறும் அமர்ந்திருந்த விவாதச்சூறவளி இப்பொழுது தன் முழுவன்மையுடன் சீறி எழுந்து இராஜமாதா புத்திமதி வீதசோகனே மகதாதிபதியென்று வாதாடினாள். அசோகன் பாடலிபுத்திரத்துச் சிம்மாசனத்துக்குச் சுதந்தரமுடையவன் தானேயென்று தோள் தட்டினான். இராஜமாதாவின் பக்ஷத்தை பிக்ஷு சங்கத் தலைவன் ஸம்புவஷ்டாசாயன் முற்றிலும் ஆதரித்தான். அதற்கு மாறாக, நியாயப்படி அரியணைக்கு உரிமையாளன் அசோகனே என்பது அமாத்தியன் இராதாகுப்தனது உள்ளக்கிடக்கையானமையால், அவன் அசோகன் பக்ஷத்தையே போற்றினான். வேந்தன் விந்துசாரனுடைய உத்தரக்கிரியைகள் நடப்பதற்கு முன்னரே இவ்விவாதம் சிதறவேண்டுவது ஆவசியகமாயிற்று ஆகையால் நிஷ்பக்ஷபாதமாகத் தம் உள்ளக் கிடக்கையை ஸ்பஷ்டமாய்த் துணிந்து கூறக்கூடிய சட்டவல்லுநர் ஐவரின் மத்தியஸ்தம் வேண்டப்பட்டது. அம் மத்தியஸ்தர்கள் சாஸ்திர மதத்தை ஸ்பஷ்டமாய் இவ்வாறு வெளியிட்டனர்—“அசோகனே சரியான ஜேஷ்ட குமாரன் அவனே சட்டசம்மதமான உரிமையாளன் அவனே நியாயமான மகதாதிபதி.” இதைக் கேட்டவுடனே புத்திமதிக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. பதிமரித்த சோகத்தையும் அடக்கிக்கொண்டு அவள் ஐம்பெருங் குழுவினரை நோக்கி—“மீண்டும் ஆலோசித்துக் கூறுங்கள், அரியணைக்கு உண்மையான உரிமையுடையவன் யாரென்பதை;” என்று ஆஞ்ஞாபித்தாள். சட்டவிற்பன்னர் மீண்டும் தமது முன்னைய மதத்தையே சாந்தமாயும் அழுத்தமாயும் எடுத்துரைத்துக் கேட்பித்தனர். அதைக் கேட்ட புத்திமதி மிகச் சீற்றங்கொண்டு அவ்வேழை ஐம்பெருங் குழுவினரை வாயில் வந்தபடி வைது அனுப்பினாள்.

அசோகன் அரியணைக்கு உரியவன் என நிர்ணயமாய் விட்டது. விந்துசாரனது சாமக்கிரியைகள் முற்றுப் பெற்றன. இராஜமாதாபுத்திமதிக்குத் தன் பகையையும் சினத்தையும் மறைத்துக்கொள்ளும்படி நேர்ந்தது. ஆனால் தக்கதருணம் வாய்க்கும்போது வீதசோகனே சிம்மாசனத்துக்குச் சுதந்தரமுடையவன் என்பதை உலகமறியச் செய்வேனென்று உள்ளத்தில் உறுதி கொண்டாள். இராஜமாதாவின் இவ் இருதயக்கிரந்தி இதுகாறும் அவிழ்க்கப்படவில்லை. அசோகனது கீர்த்தியின் மாசற்ற பேரொளி நாளுக்குநாள் ஓங்கித்திகழ, அவளது நெஞ்சத்தில் அசோகனைப் பற்றிய முடிச்சு மென்மேலும் முறுக்கேறியது. எனவே தன் மகன்

வீதசோகன் நெஞ்சார அசோகனைப் பகைக்கவேண்டு மென்றும் அவனிடம் பழி வாங்குவதைத் தவிர்த்து வேறு எண்ணம் எதையும் தன் மனத்தில் புகவொட்டக் கூடாதென்றும் இராஜமாதா விரும்பினள். வீத சோகனோ அதற்கு நேர்மாறாக அசோகனிடம் மட்டற்ற சகோதரவாஞ்சையுடன் ஒழுகிவந்தான்.

வீதசோகன் இவ்வாறு ஒழுகுவது சரியல்லவென்று ஸம்புஷ்டாசாரியன் பலமுறையும் இராஜமாதாவின் செவிகளில் திணித்து வந்தான். புத்திமதியும் அவனை அசோகனுடன் இவ்வளவு அந்நியோந்யமாகிய நட்பு வைத்துக்கொள்ள வேண்டாமென்று நயந்தும் அச்சுறுத்தியும் வற்புறுத்தினள். ஆனால் அவ்வுபதேசத்தினால் ஒரு பயனும் விளையவில்லை. அதற்குமாறாக வீதசோகன் அசோகனை முன்னிலும் அதிகமாக நோக்கித் தொடங்கினன். பின்னர் கலிங்கநாட்டுடன் யுத்தம் தொடங்கினது முதல் அவன் அசோகனைத் தன் உயிர்ச் செல்வமென மதிக்கலானன். ஆயினும் அவன் அன்னையின் பகைமையியற்கைக்கு அஞ்சி அசோகனிடம் தான் செய்யும் மெய்யன்பு இராஜமாதாவுக்குத் தெரியாமலிருக்குமாறு ஜாக்கிரதையாய் நடந்து வந்தான்.

அசோகன் கூடாரத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னரும் வீதசோகன் அவ்விடத்திலேயே அசையாமல் நின்றிருந்தான். அவனது விழிகளிலிருந்து நீர் துளித்துக்கொண்டிருந்தது. ஆனால் அவன் அழவில்லை. அவ்விழிநீர்கள் துக்கத்தினால் உண்டானவையல்ல அவை அன்பு நீரென்க. அசோகனது மாசற்ற மெய்யன்பை நினைத்து அவனது நெஞ்சம் இளகி உருகிவிட்டது. அதுவே விழிநீர் வடிவமாய் அவன் கண்களினின்று பெருகியது. அவ்வருமையான சகோதர வாஞ்சையை நினைத்து அவன் சிறிது நேரம் தன்னை மறந்திருந்தான். எங்கே யிருக்கிறேன், என்ன நிலையில் இருக்கிறேன், என்ற உணர்வுகூட அவனுக்கு இல்லாமலிருந்தது.

"இளவரசே, இராஜமாதா தங்களை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்," என்று சொல்லி மோகனன் வீதசோகனை அந்தப் பரவச நிலையினின்று எழுப்பினர்.

வீதசோகன் சற்றுத் திகைத்து—"மோகனா, அம்மையார் எங்கே இருக்கிறார்?" என்றான்.

மோகனன்—"அரசர் பெருமான் கட்டளைப்படி பச்சைக்கூடாரத்தில் தர்ப்பார் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செயப்படுகிறது. அம்மையார் தங்களையும் அரசர் பெருமானையும் அங்கே எதிர் பார்க்கிறார்கள்," என்று கூறிக் கோமகனை வணங்கித் தொழுதுவிட்டு அசோகனது கூடாரத்தை நோக்கி விரைந்து சென்றான். வீதசோகனும் அதே க்ஷணத்தில் பச்சைக் கூடாரத்தின் பக்கமாய்ப் போனான்.

# ஆனந்தரங்கப்பிள்ளையின் தினசரி

இந்த நாள் பகலுக்குமேலாய்க் கேழ்க்கப்பட்ட சேதி ராமலிங்கபிள்ளை பாபு ராயர், ராமச்சந்திர ராயர் குண்டூர் பாலிசெட்டி சஞ்சய செட்டி இவர்களை முசெல்வி அழைப்பிச்சு சிலவு காரியங்களுக்குக் குடுக்க வேணுமென்று கேட்டவிடத்திலே ராமலிங்கபிள்ளை மாத்திரம் நாலாயிர ரூபாயி ரொக்கமும் சிறிது சாமான்களும் குடுக்கிறோமென்று உடன்படிக்கை பண்ணிக்கொண்டு வந்ததாகவும் மத்தபேரை பணம் கேட்டவிடத்திலே நாங்கள் முன்னேயும் கொடுத்திருக்கிறோம் எங்களுக்கு கொடுக்கிறத்துக்கில்லை யென்று சொன்னவிடத்திலே மூணு நாளுக்குள்ளே பணம் குடுத்தால் ஆச்சுது. இல்லாவிட்டால் உங்களை அப்படி செய்வோம் இப்படி செய்வோம் கசத்திலே போடுவோம் என்று சொல்லிப் போகச்சொல்லி பிறகே வீட்டுக்கொரு சேருவைக்காரனை அனுப்பி வாசற்படியிலே வைச்சார்களென்கிறதாய் கேழ்கப்பட்டது. பின்னையும் பதினொரு பேர்வழியென்றும் பதினறு பேர்வழியென்றும் சொல்லுகிறார்கள். இதிலே குண்டிக் கிராமம் குத்தகைக்காரர் பேரும் எழுதியிருக்குதென்று சொல்லுகிறார்கள். இந்தப் பேர்வழியை எழுதி நயினர் கையிலே குடுத்துத் தெண்டசொன்னதாயும் சமாசாரம் கேழ்க்கப்பட்டது. சாயங்காலம் அஞ்சுமணிக்கு முசெல்வி அழைச்சு வரச்சொன்னரென்று ஒரு சேருவைக்காரன் வந்து நம்மை அழைச்சான். நமக்கானால் சரீரம் சொஸ்தமில்லை. இரண்டு மாசமாய் வெளியே வரதில்லை என்று சொன்னதின் பேரிலே அந்த சேருவைக்காரன் போய் மறுபடி சொன்னவிடத்திலே, ஆனால் அப்பாவையாகிலும் முன்னாலே வீடுகள் எடுத்தெழுதின கணக்கும் எடுத்துக் கொண்டு அழைச்சுவரச் சொன்னார்கள் என்று மறுபடியும் அந்த சேருவைக்காரன் வந்து சொன்னான். அப்பாவு போனவிடத்திலே முசெகது நீவிலங்கிறவன் அப்பாவைக் கண்டு முன்னாலே வீடுகள் எடுத்தெழுதி யிருக்குதே அந்தக் கணக்கு கொண்டு வந்தியா என்று கேட்டதிலே வந்த சேருவைக்காரனும் வயணமாய்ச் சொல்லாமல் போனான். ஆனாலும் முன்னாலே தானே எழுதி துரைகள் கையிலே தானே குடுத்திருக்கிறோமென்று சொன்னதின் பேரிலே அதுவெல்லாம் எனக்கு தெரியாது முசெல்வியுடைய உத்தாரம் அந்த வீடுகள் எழுதின கணக்குக் கேட்டு வாங்கச் சொல்லி, என்று சொன்னதின் பேரிலே ஆனால் நல்லது அந்த கணக்கு இருந்தால் பார்ப்போம் என்று சொல்லிப் போட்டு அப்பாவு வந்து இந்த சமாசாரம் சொன்னான். இன்னை பதினம் இதுகளெல்லாம் எதுனாலே இப்படி காபறுப் படுகுதென்றால் நம்மண்டை கணக்கெழுதின முசெகலிக்கு என்கிறவன் முன்னாலே முசெலெறி கந்தப்பபிள்ளை முன்னிலையாய் வெளியிலே சனங்கள்கையிலே வரி வாங்கின போது



தானே முசெகலிக்கு ஒரு பிந்திரமெழுதினான். என்ன என்றால் பணமிருக்கிற இடங்களறியாமல் ஏழை சாதுவை ஏன் கொல்லுகிறீர்கள். இதுகளுக்கெல்லாம் துலுக்கராகட்டும் வெள்ளைக்காரர் ஆகட்டும் ஒரு தமிழனை பெசமானைப் வச்சு அவர்கள் முன்னிலையாய் எந்தக் காரியமும் நடப்பிச்சால் சகல காரியமும் கட்டி நடக்கும். அதைவிட்டு தாத்தினம் பண்ணுகிறவர்களுடைய சொந்த துபாசினைப் தானே விட்டு பணங்கட்டச் சொன்னால் பணமென்ன தன்பு அகப்போகுதா கும்பினிக்கு சிலவு அடையப் போகுதா என்று இப்படி எல்லாம் முசெல்வியுடைய யிருந்ததெந்து கையிலே எழுதிக் கொடுத்திருந்தான். அதற்கு நகல் நம்முட வீட்டிலே இருந்தது. அது நாமறியோம். மந்தியானம் நாம் தூங்கச்சே வந்து அந்த மேசைப் பலகைச்சாவி அவன் கையிலே இருந்தபடியினாலே திறந்து அந்தக் கடுதாசியை எடுத்துக்கொண்டு போகச்சே நம்மை வந்து நம்முட மனுஷா எழுப்பி முசெகலிக்குக் கடுதாசி எடுத்துப் போறானென்று சொன்னதின் பேரிலே எழுந்து என்னென்று கேட்டவிடத்திலே அது என் சொந்த சம்மதிக் கடுதாசி என்று சொல்லிப் போட்டு போயிவிட்டான். அதின் பேரிலேதான் இவர்களையெல்லாம் அழைச்சு பணம் காசு கேட்டதும் இந்த சம்மதிகளெல்லாம் நடந்தது. இதல்லாமல் வீடுகள் எழுத்தெழுதின கணக்கு நம்முட கையிலே இருக்குது என்று சொன்னதுமானது தான், ஆகையாலே இந்தக்கணக்கு குடாயலிருந்தால் பொல்லாப்பு வரும். ஆனபடியினாலே நாளை அந்தக் கடுதாசிகொடுப்பதாய் யோசனை பண்ணியிருக்கிறோம் இந்த நாள் ஊரிலே வெள்ளைக்காரர் கத்திளைய உருவிக்கொண்டு வீடுகளிலே பூந்து வெது சொறவியள் பண்ணி பட்டணமெல்லாம் அதலகுதலபட்டு போச்சுது. செனங்களை இரண்டொருத்தரை குத்தியும் வெட்டியும் இப்படி யெல்லாம் சொறவி பண்ணினார்கள்.

விக்கிரம ௵ சித்திரை௴ ௪௨ சனிக்கிழமை

௧௭௪௦ ஆண்டு அபிரேல்௴ ௧௨ ௳

இந்த நாள் கால்த்தாலே பட்டணத்திலே இருக்கிற தமிழர் பேரிலே முன்னாலே வரி எழுதியிருந்த கணக்கை அப்பாவு எடுத்துக் கொண்டு போயி முசெகதிவேல் கையிலே குடுத்தவிடத்திலே அந்தக் கணக்கைப் பார்த்து இதானா மெத்த அலப்ப சொலப்பமாய் இருக்குதென்று சொல்லி அதை வாங்கிக்கொண்டு நல்லது நீர் போம் உங்கள் தகப்பனாருக்குச் சலாம் சொன்னேமென்று சொல்லுமென்று அனுப்பிவிச்சான். அந்த சமாசாரம் அப்பாவு வந்து நம்முடனே சொன்னான். அப்பால் கோட்டையிலே நடந்த சமாசாரம் என்னவென்றால் கங்கிபாடி வீரசெட்டி, குண்டூர் வீரசெட்டி, ஆதிவாரகசெட்டி குமாரன் அழகிய மணவாளசெட்டி, திருவம்பலசெட்டி, குழந்தை செட்டி, பாபுராயர், ராமசந்திர ராயர் இந்த ஏழுபேரையும் மணிக்கூண்டுப் பேரிலே காவல் வைச்சார்களென்றும் மத்தப் பேர் தயிலப்பசெட்டி பிச்சகுப்பன் முசெகுப்பனென்கிற கணக்கு ரங்கபிள்ளைகுமாரன் கையபுர் சிறிதுபேரை நயினார் வீட்டிலே கொண்டுபோயி வச்சு பணத்துக்குச் சம்மதி பண்ணச் சொன்னார்களென்றும் இந்தப் படிக்குக் கேழ்க்கப்பட்டுது. பின்னையும் குருவப்பசெட்டி தருமசிவசெட்டி, மாநதை பிள்ளை மூன்று பேரையும் எங்கே என்று கேட்ட யிடத்திலே வெளியே போயிவிட்டார்களென்று சொன்னதின் பேரிலே அவர்கள் காவல் வச்சுப்போன சேவகரைப் போயி அழைச்சுவரச்சொன்னதாய் சேதிகேழ்க்கப்பட்டது. இந்த நாள் இங்கலெசுக்காரர் குதிரை ஆயிரம் குதிரையையும், ரெண்டாயிரம் பாறுறுக்காரரும் ஆயிரம் வெள்ளக்காரரும் மெஸ்குறி கற்றால் பெட்டு என்கிறவரும் வந்து வழுதாவூர் சுத்தி பூத்துறை இந்த வட்டங்களிலே இறங்கி அவர்கள் குதிரை குண்டு சாலைக்கு மட்டும் வந்து காலாடினத்தின் பேரிலே இங்கே இருந்து நம்முடவர்கள் இருநூறு குதிரை மட்டுக்கும் போனவர்கள் அவர்கள் குதிரைகள் விஸ்தாரமானபடியினாலே இவர்கள் திருப்பி வந்து விட்டார்கள். இந்தக் காலிமெலியைத் தொட்டு ரொம்ப இவடங்களெல்லாம் காபறுப்பட்டு பட்டணத்து செனங்கள் வெளியே போயிருந்து வந்தவர்கள் கலாபத்துனாலையும் பணத்து நிமித்தியும் காவல் கட்டு பண்ணுகிறபடியினாலேயும் சமீபத்திலே இங்கலெசுக்காரர் நெருங்கி வரபடியாலேயும் மறுபடியும் வெகு செனங்கள் வெளியே போயிவிடுகிறார்கள். இந்த நாள் நம்முட அமில்தாரர் திருமங்கலம் நெர்கருணத்திலே இருந்த அண்ணாமலைமுதலியும் பொன்மலை பிள்ளையும் அவடத்திலே இங்கலெசுக்காரர் குதிரைகள் வாடுகிறபடியினாலே இருக்கக் கூடாமல் படிக்கி பிறப்பட்டு வந்துவிட்டார்கள்,

## கடலின் அழைப்பு

(ஸ்ரீ ஸுரேஷ் சந்திர சக்கிரவர்த்தி வங்க மொழியில் எழுதியதை ஸ்ரீ க. அமுதன் மொழிபெயர்த்தது)

தட்சிணை என்பவனுக்கு முப்பத் தேழாவது வயதில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது; இவ்வளவு காலம் வியசனத்தில் மூழ்கி இருந்த அவனுடைய குடிசை இன்று இன்பக் களியில் திகழ்ந்து மகிழ்ந்தது. அவனுடைய குடிசை கடற்கரை யண்டை. காலந் தொடங்கியது முதல்



160202 600 008.

நீலக்கடல் விம்மி விம்மிக் கொண்டிருக்கிறது — சிருஷ்டியின் ஆரம்பத்தினின்று அதனுடைய அலைகள் கோலாகலமாய் ஓவென்று இரைந்த வண்ணமாய் இருக்கின்றன—இன்றும் அப்படியே. பூமாலைகளை யொத்த அந்த அலைகளின் சத்தம் இன்று ஏன் அவ்வளவு ஆனந்தத்தேனைப் பொழிந்து தருகிறது? இன்று நீலக்கடலின் கொந்தளிப்பில் அவ்வளவு மகிழ் ஒலி ஏன்? குடிசையின் சுற்றுப் புறங்களில் வரிசை வரிசையாய் பனைமரங்கள், பனை ஓலைகள் காற்றில் நடுங்கி சலசலவென்று ஓசை யிடுகின்றன—இன்று மட்டிலும் அவைகள் என்ன மந்திரத்தினால் களிகூத்தாடுகின்றன? தட்சிணைக்கு முப்பத்தேழாவது வயதில் ஒரு ஆண்குழந்தை பிறந்தவுடன் தனிமையிலும், அமைதியிலும், துயரிலும் மூழ்கிகிடந்த இவர்களுடைய குடிசை, ஆகாசம், பூமி முதலிய பத்துத்திசைகளிலுமாப் பரிந்து மகிழ்வுற்றது.

தட்சிணைக்குக் குழந்தை பிறந்தது ம் சிமந்தனுடைய இதயம் பக்தியினால் மலர்ந்தது: பக்தியின் ஒளியால் அவன் கண்களிரண்டும நீர் கொண்டு ததும்பின; தெய்வத்தின் தயை சிமந்தனுடைய நெஞ்சினுட்புகுந்து பற்றி ஒரு கணமாத்திரத்தில் அவன் வாழ்நாளைப் பயன்பெறச்செய்துவிட்டது கைகளைக் கூப்பிஆகாயத்தைநோக்கித் தழுதழுத்த குரலில் சிமந்தன் சொல்லுகிறான்—“ஓ தெய்வமே, என் கவலை சாகாது உயிரோடிருக்கட்டும்; கையில் சந்திரனைக் கொடுத்தவுடன் பிடுங்கிக் கொள்ளாதே,”—சிமந்தனுடைய வாயில் பிறகு வார்த்தைகள் ஒன்றுமே எழவில்லை! அவனுடைய எண்ணங்களுக்குத் தக்கவண்ணம் அவனுக்கு வார்த்தைகள் கிட்டவில்லை.

சரியான காலத்தில் அன்னப் பிராசனத்துடன் குழந்தைக்கு நாமகரணமும் நடந்தது. தெய்வம் தந்த குழந்தை என உள்ளூர எண்ணி, பிரசாதன் என்று அதற்குப் பெயரிட்டார்கள். கொச்சைக் கொச்சையாய் முதல் முதல் ‘அம்மா, அப்பா” என்று குழந்தை சொல்லத் தொடங்கியவுடன் பெற்றோர்களுடைய உள்ளங்களில் ஆசை நிறைந்த ஆனந்தம் பொங்கி எழுந்தது— அவர்கள் கண்முன்னால் ஒரு புதிய உலகம் தோன்றலாயிற்று. அவ் வுலகில் அவர்களுடைய உள்ளங்களில் எவ்வளவு வாஞ்சை, எவ்வளவு அன்பு!—வாஞ்சையும் அன்பும் நிரம்பித் ததும்பின; அங்கு ஒரு துளி அளவு கடுமைக்குக்கூட இடமே இல்லை, அவசியமுமில்லை. வீட்டில் குழந்தை—குழந்தையின் மழலைச் சொற்கள் அதனுடைய சிரித்துக் கொந்தளிக்கும் கருவிழிப்பார்வைகள். அப்படிப்பட்ட அந்த வீட்டில் கடுமைக்கு இடமேது? துன்பேது? பாலைவனத்தை ஒத்திருந்த சிமந்தனுடைய வீட்டில் ஒரு கணத்தில் “தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்கள் திகழும்” மந்தாகினி வெள்ளாறுப் பாய்ந்து கொண்டிருப்பது போல் இருந்தது. இனி அவர்களுக்குக் களைப்பேது? துயரேது? வறுமையேது?—இனி எதுவும் வீணில்லை. குழந்தையைச் சீராட்டும் ஆனந்தத்தினால், சமஸ்தமும் தேவானுக்கிரகத்தைப் பெற்றது; சமஸ்தமும் ஒளி பெற்றுத் திகழ்ந்தது.

இவ்வளவு காலம் பெற்றோர்களுக்கு தினசரி வேலையனைத்தும் தாங்க மாட்டாத சுமையாக இருந்து வந்தது; அவர்களுடைய வாழ்நாளை அங்குமிங்குமாக இழுத்தலைத்த அந்த பேய்ச்சுமைஇப்பொழுது ஒரு குழந்தை உண்டானவுடன் தாங்குவதற்கு அடியோடு இலேசாய் விட்டது. சிமந்தன் தன் தோள்மீது மீன் வலையைப் போட்டுக் கொண்டு கடலில் மீன் பிடிக்கப் போகும்பொழுது அவனுடைய இதயம் ஆனந்தத்தால் கடல் போல் அலம்பிக் கொண்டு கொந்தளித்தது. “நான் ஒரு நாளெல்லாம் படும் சிரமத்திற்கு எவ்வளவு பலனும்

திருப்தியும் உண்டோ அதைக் காட்டிலும் பன்மடங் கதிகமாக பலனையும் திருப்தியையும் எனது குழந்தையை ஒருதரம் சும்மா தொடுவதனாலேயே அடைந்து விடுகிறேன். எனது குழந்தை என்னை அப்பாவென்று கூப்பிடுதலே எனது சிரமம் அனைத்திற்கும் பலன்." எனப் பலவாறு சீமந்தன் எண்ணலானான். ஒன்றையும் நினையாது இயந்திரம் போல் சமயற்கட்டில் வேலை செய்யும் வழக்கத்தை இப்பொழுது தட்சிணை விட்டுவிட்டாள். வீட்டில் ஒரு குழந்தை இருக்கும் ஆனந்தத்தினால் அவர்கள் சாப்பிடும் இரசமும் சோறும் அவர்களுக்கு சகல வியஞ்சனங்களும் நிறைந்த கலியாணச் சாப்பாடு போல் ருசித்தது. முன் இருந்த மாதிரி தட்சிணைக்கு இப்போது ஒழு நாள் முழுவதும் வெறிச்சென்று பாலைவனம் போலிருக்கவில்லை. சமஸ்த தினமும் அன்பு பொங்கி யெழும் பல வகை வேலைகளுக்கு அவள் அதிகாரியாய் விட்டாள். குழந்தையைக் குளிப்பாட்டல்—சோறூட்டல்—தாலாட்டல்—சீராட்டல்—தூங்கப்பண்ணல் முதலியன இவள் செய்ய வேண்டிய வேலைகள். தெய்வத்தின் அனுக்கிரகமே அநுக்கிரகம்! தெய்வம் எனது குழந்தையை ஒன்றுமறியாதவாறு செய்து என்னிடம் கொடுத்துவிட்டது போலும்! பெற்றோர்கள் ஒரு இளஞ்சிசுவினிடமிருந்து எவ்வளவு ஆனந்தத்தைப் பெறுகிறார்கள் என்பது குழந்தைக்கும் தெரியாது, பெற்றோர்களுக்குந் தெரியாது. பிரசாதனுக்கு சிறுகச்சிறுக வயது ஆறாய்விட்டது.

ஒரு நாள் இரவு வீட்டிற்குள் வெந்துபோவது போல் அதிக புழுக்கமாயிருந்தது; தட்சிணை அரைக்கு வெளியே தாழ்வாரத்தில் பாயை விரித்துப் படுத்தாள்; பக்கத்தில் பிரசாதன் தட்சிணைக்கு கிழக்கு வெளுக்குந் தருணத்தில் தூக்கம் கலைந்தது. அப்பொழுது எங்கோ ஒரேஒரு காக்கை "கா,கா" என்று கத்திக் கொண்டிருந்தது. வானமும் கடலும் முத்தமிட்டுத் தழுவுமிடத்தில் ஒரே ஒரு வெள்ளைக் கீற்று வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. அது தெளிவுபடுவதற்கு முன்னதாகவே சீமந்தன் வலையை எடுத்துக்கொண்டு மீன் பிடிக்கப் போய்விட்டான். தட்சிணை அவசரமாய் பாயை விட்டு எழுந்திருக்கப் போனாள்; திடீரென பிரசாதனுடைய முகம் அவள் கண்ணுக்குப் பட்டது. அதன்பிறகு அவளுக்கு பாயை விட்டு எழுந்திருக்க மனமே வரவில்லை. அவள் பிரசாதனை ஒரு நாளும் அப்படி பார்த்ததே கிடையாது! தூங்குகிற குழந்தையின் இருகைகளும் அதன் மார் மேல் சேர்த்து கூப்பிய வண்ணமாயிருந்தன; கண்களிரண்டும் புஷ்பத்தின் இதழ்கள் போல் மூடி இருந்தன; உதடுகள் இரண்டினிடையும் ஒரு மெல்லிய—மிகமெல்லிய—புன்னகைக் கீற்று. தட்சிணை பிரசாதனை தூங்கி யிருக்கும் பொழுது ஒரு நாளும் பார்த்ததே கிடையாதா?—பார்த்திருக்கிறாள்; ஆனால் இதற்கு முன் பார்த்திருக்கும் பிரசாதனுக்கும் இப்பொழுது பார்க்கும் பிரசாதனுக்கும் ஆகாசத்துக்கும் பூமிக்குமுள்ள அவ்வளவு வித்தியாசம். புன்னகை புரியும் பொழுது பிரசாதனை ஒரு பொழுதும் பார்த்ததே கிடையாதா?—பார்த்திருக்கிறாள்; அவள் இதற்கு முன் பார்த்த புன்னகைக்கும் இப்பொழுது தூங்கிக்கொண்டிருக்கும் சிசுவின் மெல்லிதழ்க்குறு நகைக்கும் என்ன வித்தியாசமென்று தட்சிணையால் சொல்லமுடியவில்லை; ஆனால் அதுவும் இதுவும் மட்டிலும் ஒன்றல்ல. இதோ தூங்குகிறதே, குழந்தை—இது என்ன தட்சிணையின் பிள்ளையா? இல்லை, இல்லை, இதுவதோ ஒரு தேவசிசு! இந்த மண்ணுலகின்கண் வாழும் இவ்வேழைப் பெற்றோர்களின் வாஞ்சைக்குட்பட்ட சிசுவா இது?—இல்லை, இது ஆனந்த ஆகாயத்தினின்றுதித்த எதோ ஒரு ஜீவன்! இது என்ன மர்த்தியத்திற்குட்பட்ட சிசுவா?—இல்லை, இது ஸுவர்க்கலோகத்துக் குழந்தை! இவ்வாறு எண்ணமிட்



டுக் கொண்டிருக்கும் பொழுதே தட்சிணைக்கு ஏதோ ஒரு மாதிரி திகிலாய்இருந்தது; உடனே 'பிரசாதா, பிரசாதா!' என்று கூப்பிட்டாள்.

தட்சிணையின் குரல் பிரசாதனின் தூக்கத்தைக் கலைத்து விட்டது. அவன் நாலாபக்கமும் சுற்றிமுற்றிப் பார்த்தான். அவனுக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. கடைசியாகத் தன் தாயைத் திடீரெனக் கண்டு, எழுந்து, அணைந்து கட்டிக் கொண்டு சொல்லுகிறான்:—"நான் ரொம்ப அதிசயமான ஒரு சொப்பனம் கண்டேன், தெரியுமாம்மா!"

தட்சிணை தன் சிசுவை இறுக அணைத்துப் பிடித்துக்கொண்டு அதன் இரு கன்னங்களையும் தழுவி முத்தமிட்ட பிறகு, அச் சிசு தன்னுடைய பிரசாதனே என்று தேர்ந்து, குழந்தையைக் கேட்கிறாள்—"என்ன சொப்பனமோ கண்டே?"

"ரொம்ப அதிசயமான சொப்பனம்மா! அது என்னவோ ஒரு மாதிரி இருந்தது—நான் ஒரு நாள் விளையாடிக்கொண்டிருந்தேன்— நொரு அனங்கன், வைகுண்டன், தாரகன், சசி எல்லாரும் அங்கே இருந்தா—திடீர்னுப்பார்க்கிறேன், ஒருத்தரையும் காணோம்!— நான் மாத்திரம் தனியா நின்னுண்டிருந்தேன்—அப்றம் எனக்கு [illegible]லே அம்மா ஒரே வெறும் நீலம்—வெறும் நீலம்—ஒரே அடியா நீலம்! அப்றம் யாரோ வெறும்னே "பிரசாதா, பிரசாதா"ன்னு கூப்டா; பதில் கொடுக்கணும்னு இருக்கேன், ஆனா முடியவில்லை— நடக்கணும்னுஇருக்கேன், நடக்க முடியவில்லை. ஏம்மா சொப்பனத்திலே இப்படி இருக்கு? நடக்கப் போகச்சே நடக்க முடியவில்லை— ஒண்ணையுஞ் சொல்ல முடியவில்லை?"

"சொப்பனத்திலே என் அப்படி இருக்குதுன்னு யாருக்குப்பா தெரியும்? யாராலேப்பா சொல்லமுடியும்?"

"இன்னும் எவ்வளவோ சங்கதி'ம்மா, எல்லாம் எனக்கு நினைவிலே இல்லை. எத்தனையோ அழகழகான தேசம்—எத்தனையோ வீடுகளும் அறைகளும்—எவ்வளவோ பூ, எவ்வளவோ பழம்—எவ்வளவுன்னு சொல்லிமுடியாது—எவ்வளவு அழகுன்னு சொல்றே—அதெல்லாம் கந்தர்வலோகமாக்கும்— ஏம்மா கந்தர்வலோகம் எங்கேம்மா இருக்கு?"

"அவர்கள் தேசம் எங்கே இருக்கு என்னு யாருக்குத் தெரியும்'பா?—யாருக்குந் தெரியாது. அவர்கள்'லாம் ஆகாசத்திலே இருக்கிறதா கேள்வி—ஆகாசத்திலேயே நடமாடுகிறார்கள்—ஊம், அவர்கள் தேசந்தான் எங்கே இருக்கு என்னு யாருக்குந் தெரியாதே."

பிரசாதன் ஐயத்தால் வாட்டப்பட்ட மனதுடன் ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினான். அவன் கண்ணுக்கு வெறும் ஆகாசந்தான் தெரிந்தது. கங்குகரை காணாத வெளி—வெறும் வெட்டாரவெளி—வேறு ஒன்றையும் காணோம் குழந்தைக்குத் தான் ஏய்க்கப்பட்டதாக எண்ணம். ஐயோ, கந்தருவலோகந்தான் எங்கே இருக்கு என்று யாருக்குந் தெரியாதே!

அன்றிரவு பெரும் புயல் அடித்தது; வானத்திலே கரிய கரிய மேகங்கள் ஒன்று குவிந்தன. அங்கு மிங்கும் வெட்டு மின்னல்கள் பல்லைக் காட்டி மினுக்கின; திக்குத் திசைகளுக்குப்புறங்களிலிருந்து புயற் காற்று "கூ,கூ" வென்று கூவி விண்ணைக் குடைந்தன; அக் காற்றினால் அலைக்கப்பட்ட இலட்சக் கணக்கான பேரலைகள் தூங்கி எழும் மகா நாகங்கள் போல் படங்களை விரித்தெழுந்தன; அவைகள் தங்கள் இலட்சக் கணக்கான படங்களை விரித்து, சீறி, கடற்கரை மீது மோதுவது போல் இருந்தன; இதோடுகூட வானம் இடிந்து விழுவது போல் "ஜோ" வெனப்

பெருமழை பொழிந்து தள்ளிற்று! விடிய அரை ஜாமத்திற்கு மழை நின்றது; பிரகிருதி சாந்த மூர்த்தி யாகத் தோன்றினாள். தட்சிணைக்குத் தூக்கம் கலைகிற சமயத்தில் கீழ்த்திசையில் உஷையின் மங்கிய ஒளி புலப்பட்டுக் கொண்டிருந்தது. அப்பொழுது இருள் மரங்களினிடை ஒண்டிக் கொண்டும், மரங்களின் இலைகளி னிடுக்குகளில் புகுந்து கொண்டும், வீட்டின் அறைகளினுடைய மூலைமுடுக்குகளில் ஒதுங்கிக் கொண்டும், பின்னும் சிறிது நேரம் தங்கிப் போவதற்காகப் பிர்யாசைப் பட்டுக் கொண்டிருந்தது. தட்சிணை எழுந்து தெருவாயிலுக்குச் சாணந் தெளித்துப் பெருக்க வாரம்பித்தாள். அவ் வேளைக் கெல்லாம் இருள் நீங்கி நாலா பக்கமும் வெளுத்து விட்டது. தட்சிணை பிரசாதனை எழுப்பிச் சொல்லுகிறாள்:— "ராத்ரி, நல்ல மழை பேய்ந்திருக்கு; நீ கிளிஞ்சில் பொறுக்கப் போகலே?" நல்ல மழை பேய்ந்து ஓய்ந்த ஒவ்வொரு தடவையும் கடலின் பேரலைகளினால் ஒதுக்கப்பட்டுக் கிடக்கும் கிளிஞ்சிலோடுகளை தட்சிணை பொறுக்கி இரண்டு மூன்று அணாவிற்கு விற்பது வழக்கம். சில சமயங்களில் நல்ல பெரிய சங்குகளும் அழகிய சோழிகளும் கிடைப்பதுண்டு. கொஞ்சம் பணமுள்ள வீட்டார்கள் ஜாஸ்தி விலை கொடுத்து அவைகளை வாங்குவதுமுண்டு. தட்சிணை பிரசாதனுக்கு அவசர அவசரமாய்த் துணி உடுத்தி, குடிசைக் கதவைத் தாளிட்டுப் பூட்டிவிட்டுப் பிள்ளையுடன் கிளிஞ்சில் பொறுக்க வெளிக் கிளம்பினாள்.

பல வர்ணங்களில் சின்னதும் பெரிதுமான பல வகைக் கிளிஞ்சில்களைத் தன் கூடை நிறையப் பொறுக்கிப் போட்ட பிறகு தட்சிணை நிமிர்ந்து கடலைப் பார்த்தாள்; கடலின் கருப்பத்தினின்றெழும் பரிதியின் சீற்றக் கதிர்கள் கீழ்த் திசையில் இங்கு மங்குமாக இறைந்து கிடக்கும் மேகக் கூட்டங்களை அம்புகளால் கிளப்புவது போல் பிளந்து உயரக் கிளப்பி வானத்தை நீலமயமாக்கிக் கொண்டிருந்தன. கிளிஞ்சில்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டே அவர்கள் கடலோரமாய் வெகு தூரம் போய்விட்டார்கள். திரும்பி வருதற்கும் அதே கடலோரந்தான். தட்சிணை தனது இடது இடுப்பில் நிறை கிளிஞ்சிற் கூடையை வைத்துக் கொண்டு தன் வலக்கையினால் பிரசாதனுடைய இளஞ் சிறு கையைப் பிடித்து அவனை நடத்திக்கொண்டு, பிள்ளைக்குக் கதை சொல்லிக்கொண்டே வீட்டுப் பக்கமாகத் திரும்பி நடக்க வாரம்பித்தாள்.

தாய் தன் குழந்தைக்குக் கதை சொல்லிக் கொண்டே நடந்தாள்; குழந்தையின் நிலையில்லாது சஞ்சலிக்கும் இரு கண்களும் அங்குமிங்குமாக அலைந்தன. பிரசாதன் கடலின் புறமாகத் தன் இரு கண்களையும் ஒரு தரம் திருப்பினான். பிறகு சொல்லுகிறான்:— "பார் அம்மா, ஒரு கப்பல் வெகு தூரத்தில் என்னமாப் போராதுன்னு பாரேன்." அடுத்த நிமிஷம் தனது நடுங்கும் மெலிந்த சுண்டு விரலைப் பற்களால் கடித்துக் கொண்டு அப்படியே நின்று விட்டான். அவன் ஏதோ ஒன்றை ஞாபகப் படுத்திக்கொண்டிருப்பது போல் இருந்தான். திடீரென ஆனந்த மலர்ச்சி கொண்டு சொல்கிறான்—"என்னான்னு தெரியுமாம்மா!"

தட்சிணை பிள்ளையுடன் நின்றுகொண்டு சொல்லுகிறாள்— "என்னப்பா தெரியுமா!"ன்றே

"அன்னைக்கிப் பார்த்தேனே அந்தச் சொப்பனம்."

"ம்ம்ம்—அப்படியா?"

"வெறும் நீலம்—ஒரே நீலம்—ஒரே அடியா நீலம்!"

"ம்ம்ம்—அப்படியா?"



குழந்தை தன் சிறு கையின் சிறுவிரலை கடற்புறம் நீட்டிச் சொல்லுகிறது:—

"அது இந்த மாதிரி தா'ம்மா இருந்தது."

"ஓ,ஓ சொப்பனம்லாம் பொய்ப்பப்பா— சொப்பனத்தெல்லாம் யாராவது நினைவிலே வைச்சுண்டிருப்பாளா?"

தட்சிணை பிரசாதனைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு சடுதியாக வீட்டின் பக்கம் நடக்க வாரம்பித்தாள். வேறெதை யெதையோ எண்ணிய வண்ணமாய்க் குழந்தை தன் தாயுடன் நடந்தது. அது மனதிலே எண்ணிற்று— 'அடே, சொப்பனம்லாம் பொய்யா! அவ்வளவு அதிசயமான சங்கதி எல்லாம் பொய்ப்பப்போவானேன்?' இவ்வாறாக எண்ணி எண்ணி அவன் மனது புண் பட்டது.

அன்று பகல் பதினொருமணி வேளை இருக்கும். ஊருக்கு அருகாமையில் ஒரு பெரிய ஆலமரம் குடை போல் இலைகளையும் கிளைகளையும் விரித்து நல்ல குளிர்ந்த இன்பமான நிழலைப் பரப்பி நின்றது; அவ் வேளை ஊர்ச் சிறு பிள்ளைகள் தங்கள் விளையாட்டை அவ்விடத்தில் முடித்துவிட்டு, ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுவழி சென்று கொண்டிருந்தார்கள். அன்று பிரசாதனை மட்டிலும் அங்கு காணோம். தட்சிணை சமையலை முடித்துவிட்டுக் கையில் எண்ணெயும் கிண்ணமுமாக வீட்டு வாயிற்படியில் நின்று கொண்டு பிரசாதன் வரவை எதிர்பார்த்த வண்ணமாய் நின்று கொண்டிருந்தாள்! தெருக் கோடியிலிருக்கும் ஒரு மாதுளைச் செடியின் நிழல் தரையில் படாது செடியோடு செடியாய்க் கலந்துவிட்டது; இன்னமும் பிரசாதனைக் காணோம். தட்சிணை அவனைத் தேட வாரம்பித்தாள். பிரசாதன் ஒரு வேளை அவனுடைய தோழப் பிள்ளைகளில் யாருடைய வீட்டிற்காவது போயிருக்கலாமெனத் தட்சிணை சகஜமாக எண்ணினாள். உடனே வீடு வீடாகப் பிள்ளையைத் தேடி அலைந்தாள். எவ்விடத்தும் பிரசாதனைக் காணோம். தட்சிணைக்கு நெஞ்சில் மிக்க கலக்கமுண்டாயிற்று. இது வேளை வீட்டிற்குப் பிரசாதன் வந்திருக்கலாமென நினைத்துத் தன் வீட்டிற்குத் தட்சிணை ஓடி வந்தாள். நினைத்தபடி வீட்டில் பிரசாதனைக் காணோம்—வீட்டின் கதவுகள் அப்படியே தாளிட்டுக் கிடந்தன. அக்கம் பக்கத்தில் எங்காவது பிரசாதன் இருக்கலாமென எண்ணி உரத்த குரலில் "பிரசாதா, பிரசாதா" என்று தட்சிணை கூவினாள்; ஒருவித பதிலுமில்லை. இன்னமும் பிரசாதன் வீடு திரும்பக் காணோம்.

பறபறவென்று உடனே தட்சிணை வீட்டை விட்டு மறுபடியும் வெளிக் கிளம்பினாள். மறுபடியும் பேட்டையிலுள்ள ஒவ்வொரு வீடாய்ப் போய் விசாரித்தாள். பிரசாதனைக் குறித்து ஒரு விதத் தகவலும் கிடைக்கவில்லை. இவ்வண்ணம் நான்காந்தரம் வீட்டிலிருந்து வீடாய் அழுது கொண்டே தட்சிணை பிரசாதனைத் தேடிவரும் பொழுது அவளிடம் ஒரு சிறு பிள்ளை பின்வருமாறு சொல்லிற்று:— "நடுவிலே, பாதி விளையாடிண்டிருக்கச்சே, பிரசாதன் அதோ இருக்கே அந்த ஆலமரத் தடியிண்டேருந்து கடலுக்குப் போற வழியா அவன் போனான்." ஆலமரத்தடியினின்று கடற்புறமாகப் போகும் வழி யொன்றைக் காட்டி, அவ்வழி பிரசாதன் போனது தனக்கு ஞாபகமிருக்கிறதாக அச் சிறுபிள்ளை சொல்லிற்று. ஒரு கணமேனும் தயங்கி யோசியாது தெய்வத்திற்கு அநேக பிரார்த்தனைகள் செய்து கொண்டே அச் சிறுபிள்ளை காட்டிய வழியே தட்சிணை சென்றாள். ஆலமரத்தடியின் கிட்ட வந்து பார்த்தாள். அங்கு காக்கை குருவியைக் கூடக் காணோம். அங்கிருந்து கடல்வழி

போகும் பாதையைப் பிடித்துக்கொண்டே தட்சிணை கடற்புறம் சென்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் கடல்டியண்டை வந்து சேர்ந்தாள். நாலா புறமும் சுற்றிப் பார்த்தாள்; அவள் கண்கள் அவள் கண்ட காட்சிமீது அசைவற்று ஸ்தம்பித்து நின்று விட்டன.

அங்கு கடலோரத்தில் ஒரு அடர்ந்த சவுக்குத் தோப்பு; சவுக்குத் தோப்புக் கருகாமையில் ஒரு அடர்ந்த தென்னந் தோப்பு. சவுக்குத் தோப்பில் ஒரு சவுக்கு மரத்தடியில், மரத்தின் மீது சாய்ந்து உட்கார்ந்து கொண்டு கடலை ஒரே கண்ணாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் தன்னுடைய பிரசாதனைத் தட்சிணை கண்டாள். பட்டப் பகல் சூரியனால் தீயப்பட்ட வானம் கடலை மிக்க மனோகரமான நீலவர்ணம் பூசியது போல் செய்து காட்டிற்று. நடந்த இரவு அடித்த புயற் காற்றினால் அலைக்கப்பட்ட அலைகள் இன்னமும் அமைதியை அடையாது தடமாடிக் கரை மீது விசையாய் மோதிக்கொண்டிருந்தன; இன்னமும் அவைகளினுடைய கர்ச்சனை ஓயவில்லை. கடற்கரைமீது குளிர்ந்த ஆழ்ந்த சவுக்குத் தோப்பின் நிழலிடை அச் சிறு பிள்ளை தன் இரு முழந்தாள்களையும் தன் இரு சிறு கைகளினால் சேர்த்துப் பிடித்துக்கொண்டு நீலக் கடலைப் பார்த்த வண்ணமாய் இருந்தது; குழந்தை கண்ணிமை கொட்டவில்லை. அப்படி இப்படித் திரும்பவில்லை—சிலை போல் உட்கார்ந்து கொண்டிருந்தது.

தட்சிணை பிரசாதனைத் திட்ட வேணுமென்று எண்ணி அவசர அவசரமாய் இரண்டு மூன்றடி பையன் பக்கமாய் நடந்தாள்: மனிதக் காலடிச் சத்தத்தைக் கேட்டவுடன் பையன் திடுக்கிட்டுச் சுற்றி முற்றிப் பார்த்தான்; தாயைக் கண்டவுடனே ஓடி அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு படபடத்தவனாய்ச் சொல்லுகிறான்—"அதோ, அதைப் பார்த்தையா அம்மா?"

குழந்தை 'அம்மா' என்று அழைத்தவுடன் தாயின் கோவ மெல்லாம் க்ஷணமாத்திரத்தில் கண்ணீராய் மாறிவிட்டது. தட்சிணை பிள்ளையை இடுப்பில் தூக்கியெடுத்து, தன்மார்போடுமார்பாய்க் கட்டி அணைத்து முத்தமிட்டு, பிள்ளையைக் கேட்கிறாள்,—"என்னத்தைப்பா பாக்கச் சொல்றே?"

பிரசாதன் அதே படபடத்த குரலில் சொல்கிறான்:—"கேள் அம்மா, அதைக் கேளேன், கடல் 'பிரசாதா, பிரசாதா' என்னு கூப்டபடியே இருக்கு. அது கூப்டறது உனக்குக் கேக்கலே?"

பையன் சொன்னதைக் கேட்டவுடன் தட்சிணையின் நெஞ்சம் படபட வென்று துடித்தது. உடனே இனி நடக்கப் போவதைப் பற்றிய, இன்னது என்று சொல்ல முடியாத, திகில் தட்சிணையினுடைய நெஞ்சு, மனது, உயிர், உடல் முதலியவைகளைக் கலக்கிற்று. துக்கம் மேலிட்டுச் சொல்லுகிறாள்:—"சீ, சீ பைத்தியக் காரனோடம் பேசாதே. கடலுக்கென்ன கூப்பிட முடியுமா என்ன? அதெல்லாம் அலை ஓசை!"

தட்சிணை இடுப்பில் பிரசாதனை வைத்தபடியே வீடு வந்து சேர்ந்தாள்.

அது முதல் சமயம் வாய்த்த போதெல்லாம் பிரசாதன் அந்தச்சவுக்குத்தோப்பில் போய் உட்கார்ந்துகொண்டு ஒரே கண்ணாய்க்கடலைப்பார்த்தபடியே இருப்பான்! இவன் விளையாட்டையெல்லாம் விட்டுவிட்டுத் தன்னந்தனியாகக் கடலைப் பார்த்துக் கொண்டு என்ன எண்ணமிடுகிறானென்று யாருக்குத் தெரியும்? கடலின் ஓவென்றிரையும் அலைகள் அவனுடைய இதயத்தின் ஒவ்வொரு கட்டினின்றும் என்னென்ன உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் எழுப்புகின்றனவென்று யாரால் சொல்ல முடியும்? கடற்கரையில் உட்கார்ந்து கொண்டு அவன் தன்னுடைய கரிய விழிகளின் நிர்மலமான முடிவற்ற திருஷ்டியை திக்குத் திசைகளின் எல்லைக் கோடிகளுக் கப்பால் செலுத்தி, என்ன இரகசியத்தின் எந்தத் திரையைப் பிளந்து, என்ன கனவைத் தேடி அலைகிறானென்று யாருக்குத் தெரியும்? குழந்தைக்காவது தெரியுமா?— தெரியுந் தெரியாதென்று யாரால் சொல்ல முடியும்? குழந்தை மட்டிலும் சமயம் வாய்த்த போதெல்லாம் அங்கு செல்லுகிறது; விளையாட்டுகளை யெல்லாம் விட்டுத் தன்னந் தனியாகச் செல்லுகிறது; சிரிப்பு, கதை, கூத்து முதலிய எல்லாவற்றையும் வெறுத்துவிட்டுக் குழந்தை அங்கு செல்லுகிறது. தன்னை மறக்கும் பொருட்டு!—தன்னைத் தானாகவே தன்னுள் கைவிடும் பொருட்டு!—தன்னுள் மூழ்கிவிடும் பொருட்டு அந்தச் சவுக்குத் தோப்பிற்கு அக் குழந்தை செல்கிறது! பிரசாதன் விளையாடப் போவதாக சாக்குச் சொல்லி உண்மையில் கடலோரஞ் சென்று தனியே காலம் கழித்துவிட்டு வருகிறானென்பது தட்சிணைக்கு நாளாவரிசையில் கொஞ்சங் கொஞ்சமாகப் புலப்பட்டது. அவள் அவனுக்கு முதலில் நல்ல வார்த்தை சொல்லிப் பார்த்தாள்— பிறகு அதட்டிப் பார்த்தாள்—கடைசியாக மிரட்டிப் பார்த்தாள்—அவனை அங்கு போகவேண்டாமென்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்—அவன் எதற்கும் பிடிபட்டு வரவில்லை. முடிவில் தன்னால் ஒன்றும் முடியவில்லை என்று நன்கு தெளிந்த பிறகு, சீமந்தனிடம் சகல விஷயத்தையும் ஒவ்வொன்றாக—அப்படியே நடந்தவற்றை நடந்தவாறு தட்சிணை சொல்லி முடித்தாள்.



அன்று தொடங்கி பிரசாதனுடைய கைகளிலும் கழுத்திலும் பலவித வர்ணங்களில் பலவகையான முக்கோணம் நாற்கோணம் பத்தளம்போன்ற குளிசங்களும் இரட்சா பந்தனங்களும் மந்திரித்துக் கட்டப்பட்டன. எவ்வளவோ மூலிகைகளும் ஔஷதங்களும் கொடுக்கப்பட்டன; எவ்வளவோ பேய்கள் மந்திரங்கள் செய்து பார்த்தார்கள். எது என்ன செய்த போதிலும் பிரசாதனிடத்தில் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லை. முன் போலவே சமயம் வாய்த்த போதெல்லாம் அதே சவுக்குந் தோப்பிற்குத்தனியாகச் சென்று அதே இடத்தில் உட்கார்ந்து கடலைக் கண் கொட்டாது நோக்கியவண்ணமாய் இருப்பான். ஒரு வேளை எதையாவது கேட்பதற்காக உட்கார்ந்திருக்கிறானோ என்னவோ? யார் கண்டது? மந்திரங்களும் மூலிகைகளும் முதலிய எதுவும் பலிக்காததைக் கண்டு சீமந்தனும் தட்சிணையும் ஒருவர்க்கொருவர் கலந்து பேசி ஆலோசிக்கலானார்கள். எவ்வளவோ யோசித்தான பிறகு தட்சிணையைப் பிரசாதனுடன் அவனுடைய சொந்தக்காரர் ஒருவர் வீட்டிற்கு அனுப்புவதாகச் சீமந்தன் முடிவு கட்டினான். தட்சிணையின் சொந்தக்காரர் வீடு கடற்கரையினின்று இருபது மைல் தூரம். சீமந்தன் தனக்கு வேண்டியபோது, அவ் வீடு சென்று பிரசாதனைப் பார்த்துத் திரும்புவதாகவும் தீர்மானஞ் செய்தான். பிறகு ஒரு நல்ல நாள் பார்த்துத் தட்சிணையையும் பிரசாதனையும் அந்தச் சொந்தக்காரர் வீட்டிற்குக் கொண்டு போய் விட்டுவிட்டு, சீமந்தன் தன் குடிசைக்குத் தனியே திரும்பி வந்து சேர்ந்தான்.

பிருதிவியில் பழைய சின்னங்கள் பல மாறின; புதிய சின்னங்கள் பல உண்டாயின; இவ்வண்ணம் பத்தாண்டுகள் கழிந்து சென்றன. சீமந்தன் ஒரு நாள் தட்சிணையையும் பிரசாதனையும் சொந்தக்காரர் வீட்டினின்று அழைத்து வரச் சென்றான்; அந்தசமயம் எல்லோரும் பிரசாதனுடைய விளையாட்டுப் பிள்ளைத் தனத்தை மறந்து விட்டிருந்தார்கள். தட்சிணை மட்டிலும் அதை மறக்கவில்லை. தட்சிணை அதைச் சீமந்தனுக்கு நினைவு மூட்டியபொழுது, அவன் அவளை ஒரு

முழுப் பைத்தியக்காரி என்பதாக அவளிடம் தெரிவித்தான். தனக்கு வயதாகி விட்டது என்றும்—தான் கைலாசம் போவது இன்றைக்கோ நாளைக்கோ என்பது நிச்சயமில்லை என்றும், மேலும் பிரசாதனுக்குப் பரம்பரைத் தொழிலைக் கற்பித்தாகவேண்டும், அவனுக்கு ஜீவனத்திற்கு ஏதாவது ஒரு வழி தேடி வைத்தாகவேண்டுமென்றும் சிமந்தன் தட்சிணையிடம் சாங்கோபாங்கமாய்ச் சொன்னான். உடனே ஒரு நல்ல நாள் பார்த்து அங்கிருந்து தட்சிணையையும் பிரசாதனையும் கடற்கரையிலுள்ள தங்கள் குடிசைக்குக் கொண்டுவந்து சேர்த்தான். சமுத்திரத்தைக் கண்டதும் பிரசாதன் ஒரு விதமான கூத்துஞ் செய்யாததைப் பார்த்துத் தட்சிணை மகிழ்வுற்றாள். மூன்று மாதங்களில் சிமந்தனுடைய கண்காணிப்பில் பிரசாதன் ஒரு தேர்ந்த வலைக்காரனாய் விட்டான். வலைபோடவும், தண்டு வலிக்கவும், பாய்மரத்தில் பாய் விரிக்கவும் பிரசாதன் செவ்வனே கற்றுக் கொண்டான். அந்தப் பேட்டையில் இவ் விஷயங்களில் இவனுக்கிடான இவன் வயதுப் பிள்ளைகள் யாருமே யில்லை.

ஒரு நாள் இரவு; சித்திரை மாதம் பௌர்ணமி. இரவு எவ்வளவு சோபையாக இருந்தது என்று சொல்லுதல் எளிதல்ல. இதற்கு முன்னதாக எந்தப் பௌர்ணமி இரவும் இவ்வளவு அழகாக இருந்ததே கிடையாது. ஒருவேளை இலட்சக் கணக்கான அப்ஸரஸ்கள் அவரவர்களின் காதலர்களுடன் கூடி இன்புறுவதற்காக ஆகாயத்தில் வெளிக் கிளம்பி வந்திருந்தார்களோ என்னவோ? அவர்களுடைய இலட்சக் கணக்கான உடல்களினின்று ஒரு வேளை தெளிவான, இளகிய, வெள்ளி மயமான பள பளப்பு நாலா பக்கங்களிலும் சிதறிக் கிடந்ததோ என்னவோ? அவர்களுடைய இலட்சக் கணக்கான இதயங்களினின்று ஆகாயம், திக்குத்திசை, நீர் மண், எங்குமாகக் காதலின்பம் பாவிக் கிடந்ததோ என்னவோ?—அவர்களுடைய காற்சிலம்புகள் பாடி வரும் "காதுகளால் கேட்க முடியாத பாட்டு" ஒரு வேளை எங்கு பார்த்தாலும் நிர்த்தனம் செய்து வந்ததோ என்னவோ? யார் கண்டது?

அன்றிரவு சாப்பாடான பிறகு பிரசாதன் கையில் மீன் வலையைக் கொடுத்து விட்டு, பாய் தூக்கும் கழியையும் கப்பற் பாயையும் தான் எடுத்துக் கொண்டு சிமந்தன் வீட்டினின்று வெளிக்கிளம்பினான். அவ் வேளைக்குப் பூர்ணிமைப் பூர்ண சந்திரன் வானத்தில் வெகு தூரம் உயர வந்துவிட்டான். தகப்பனும் பிள்ளையும் கடற்கரை வந்து, நீண்ட பருத்த மூன்று கட்டைகளால் இணைக்கப்பட்ட கட்டுமரத்தைத் தண்ணியில் இழுத்துத் தள்ளினார்கள். பிறகு பாய் விரிக்கும் கழியைக் கட்டுமரத்தில் சரியான இடத்தில் நாட்டி அதன் மீது பாயை விரித்தார்கள். நல்ல காற்றின் உதவியினால் தண்ணியை அலம்பிக் கொண்டே கீழ்த் திசையின் அடிவானை நோக்கிக் கட்டுமரம் பறக்கிற மாதிரி நகர்ந்து வெகு தூரம் சென்றது. பிரசாதன் கட்டுமரத்தின் பின் முனையில் உட்கார்ந்து கொண்டு துடுப்பைப் பிடிப்பாக இருக்குமாறு செய்து கொண்டிருந்தான்; சிமந்தன் கட்டுமரத்தின் முன்னணியில் உட்கார்ந்து கொண்டு வலை விரிப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தான்.

அன்றிரவு கடலின் வெள்ளிமயமான எழில் விம்மி விம்மிப் பொங்கிக் கொந்தளித்த வண்ணமாய் இருந்தது. எழில் வீசும் இளங்கிளி மாதர்கள் போன்ற அலைகள் தங்கள் உடல்மீது வெள்ளி இழைப் போர்வைகளைப் போர்த்துத் தகத்தக வென்று நிர்த்தனம் செய்து கொண்டும், கல கல வென்று சிரித்துக்கொண்டும் இருந்தன. கரையோரங்களிலுள்ள தோப்புத் தாவுகள் முந்



தியவைகள் கண்ணுக்குத் தெரியாது மங்கிய பிறகு கட்டுமரத்தின் பாய் தாழ்த்தப்பட்டது. கட்டுமரத்தின் பின்னணியில் உட்கார்ந்திருக்கும் பிரசாதன் மெல்ல, மெல்லத் தண்டு வலித்துக் கொண்டிருந்தான்; முன்னணியில் உட்கார்ந்திருக்கும் சிமந்தன் மூட்டையாய்க் கிடக்கும் வலையை அவிழ்த்துக் கொஞ்சங் கொஞ்சமாகக் கடலில் விரித்துக் கொண்டிருந்தான்.

"பூர்ணிமை இரவன்று எவ்வளவு பெரிய இறா வலையில் படுகிறதோ அவ்வளவு பெரிய இறா மற்றொரு இரவிலும் வலையில் படுகிறதில்லை என்பது உனக்குத் தெரியுமோ இல்லையோ, பிரசாதா! நிலவு காயும் இரவிலே மானத்திலே ரொம்ப மப்பு கூடிச்சாரு வலையிலே ஏராளமாக நண்டு அப்பும்," என்றிவ்வாறு சிமந்தன் வலை விரித்துக்கொண்டே ஓயாது தொணத் தொண வென்று பேசிக்கொண்டிருந்தான். "உன்னுடைய அம்மாவுக்குத் தாலி கட்டினேன் பார். அந்தச் சமயம் இந்த இடத்திலே எங்கிருந்தோ ஒரு பெருஞ் சுறா மீன் கூட்டம் மொய்த்து வந்து வலையில் விழுந்தது."—"பிரசாதா, பிரசாதா" என்று பிரசாதன் காதுக்கு யாரோ அவன் பின்னாலிருந்து கூப்பிடுகிற மாதிரி இருந்தது. பிரசாதன் திடுக்கெனப் பின்னால் திரும்பிப் பார்த்தான். ஒருவரையும் காணோம்! உடம்பு முழுவதும் பிரசாதனுக்கு மயிர்க் கூச்செடுத்தது. அவனுடைய வெகு நாளைய ஆசை—பல நாள் சொப்பனம்—அவன் பால்யத்தில் விரும்பிய விஷயம் இன்று அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. இரண்டு கருத்த மறதிப் படுதாவானது கடந்த பத்து வருஷங்களாக எதன் மீது மூடிக் கிடந்ததோ அது இன்று அம் மறதிப் படுதாவை ஒரு நிமிஷத்தில் சின்ன பின்னமாகக் கிழித்தெறிந்து விட்டு, விடுபட்டு, தெளிவாய் ஜ்வலித்துக் கொண்டு வெளிக் கிளம்பிற்று. பிரசாதன் சிமந்தனைத் திரும்பி நோக்கினான். கிழவன் தனக்குள் ஏதோ ஏதோ போர்த்த வண்ணமாய் வலை வீசிக் கொண்டும், எவ்வளவோ நாளைய பழைய சங்கதிகளை யெல்லாம் பிதற்றிக் கொண்டு மிருந்தான்! "பிரசாதா பிரசாதா"—பிரசாதன் திரும்பிப் பார்த்தான். எண்ணிறந்த அலைகள் பல்லாயிரம் யுவதிகளைப் போல் கல கல வென்று சிரித்துக் கொண்டு இவனைப் "பிரசாதா, பிரசாதா" என்று கூவிக் கூவி அழைத்தன. பள பள வென மின்னும் நிலவொளியில் அலையானது இளங்கிளி மாதரின் இளகி, உருகி நடனமிடும் உடல்களின் எழில் மயலை வீசி நளிர்த்தது. அவர்களுடைய இனிய குரல்களில் "பிரசாதா, பிரசாதா," என்னும் ஒலி பிறந்தது; அந்தப் பல்லாயிரம் இளங்கிளி மாதர்களும் தேனினும் இனிய புன்னகையைப் புரிந்து, நாலா பக்கங்களிலும் இனிய தேன் கனவைப் பரவச் செய்து, "பிரசாதா, பிரசாதா," என்று கூவி அழைத்தார்கள். எதற்காக அழைக்கிறார்கள்? அவனை எங்கே அழைத்துச் செல்ல விரும்புகிறார்கள்? கடலின் ஆழத்தின் எந்தப் பகுதிக்கு! எந்தத் தோரணப்பாலுள்ள இரகசியத்திற்கு? கட்டுமரத்தின்மேல் மோதி விழுந்து திரும்பும் அலைகள், "பிரசாதா, பிரசாதா," என்று கூவி அழைக்கின்றன. வெகு தூரத்தினின்று ஓடி வந்து கட்டுமரத்தின் ஓரங்களில் மறைந்து போகும் சிற்றலைகள் "பிரசாதா பிரசாதா," என்று கூப்பிடுகின்றன. பிரசாதன் சிமந்தன் புறமாகத் திரும்பிப் பார்த்தான். இவன் புறம் முதுகைக் காட்டிய வண்ணமாய்க் கிழவன் வலை வீசிக்கொண்டிருந்தான். பிரசாதன் மெல்ல ஓசை செய்யாது கட்டுமரத்தின் மீது வலிக்கும் துடுப்பை வைத்துவிட்டுத் தன்னுடைய இரு கால்களையும் தண்ணீரில் தொங்கவிட்டான். அதன் பிறகு கட்டுமரத்தைப் பிடித்துக் கொண்டு கடலில் இறங்கினான். இடுப்பு, மார்பு, கழுத்து, மோவாய், மூக்கு, கண், நெற்றி, தலை, தலைமயிர் முதலியவைகள் கொஞ்சங் கொஞ்சமாக, வெள்ளைப் பரப்பில் மறைந்தன. இருமடங்கு

உத்ஸாகத்துடனே, இலட்சக் கணக்கான அலை இளங்கிளி மாதர்கள் பளபளவென்று மின்னினார்கள்; கடல் தன் மார்பைத் திறந்து பிரசாதனுடைய சரீரம் முழுமையையும் வாங்கிக் கொண்ட இடத்தில் அலை இளங்கிளி மாதர்கள் வெகு ரம்மியமாக நடனம் புரிந்து, ஒருவர் மேல் ஒருவராக விழுந்து விளையாடி, கலகலவென்று சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

"ஏண்டா சரியாத் தண்டு வலிக்கமாட்டேன்'றே?" என்று சீமந்தன் கேட்ட பொழுது பிரசாதனிடத்திலிருந்து ஒரு வித பதிலையும் காணோம். சீமந்தன் திரும்பிப் பார்த்தான். வெறும் வெட்ட வெளி— பிரசாதன் உட்கார்ந்திருந்த இடத்தில் ஒருவரையுங் காணோம். சீமந்தனைத் தவிர வேறு எவரையுங் காணோம். எங்கும் ஒரே வெட்டார வெளி.

சீமந்தனுடைய நெஞ்சத்தினின்று திடுக்கென ஒரு கணத்தில் ஏதோ ஒன்று நெருப்பைப் போல் குப் குப்பெனக் கிளம்பி அவன் சரீரத்தின் ஒவ்வொரு சிரையிலுமாக ஓடிப் பாவிற்று. சீமந்தன் கையினின்று வலை கீழே நழுவி விழுந்தது. மந்திரத்தால் மயக்கங் கொண்டவன் போல் எழுந்து நின்று, உணர்ச்சியற்ற தன் இரு கண்களில் பிரசாதன் உட்கார்ந்திருந்த இடத்தைச் சீமந்தன் இன்னதென அறியாது உற்று நோக்கினான். பிறகு, "பிரசாதா! பிரசாதா!" என்று மர்மஸ்தானம் பிளந்துவிட்ட சமயத்தில் கத்துவது போல் அலறிக் கூவிவிட்டு, கட்டுமரத்தின் மீது தொப்பென விழுந்தான். இலட்சக் கணக்கான அலைகள் நிலவொளியில் இலட்சக் கணக்கான தொடும் இளம் பெண்கள் போல் மின்னி மினுங்கி விட்டு, கட்டுமரத்தைச் சுற்றிச் சுற்றிக் கலகலவென்று சிரித்துவிட்டு, போதும் போதாததற்குப் பின்னும் மகிழ்வுற்று, "பிரசாதா, பிரசாதா" என்று சீமந்தன் அலறியதற்குப் பதில் சத்தம் கொடுத்தன.

# திருவள்ளுவரின் பொருள் நூல்

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதுவது)

---

ராஜக்யம் தனியாக நடவாது. பல அங்கங்களின் உதவியால்தான் அரசாங்கம் நடைபெறும். அமைச்சன், ஆலோசனைசபை, தூதர், நாடு, அரண், பொருள், படை, ஒற்று, முதலிய துணைகளால்தான் ராஜாங்க சக்கரம் சுழலும்.

அமைச்சு

மதியும் திறனும் மரபும் நன்றியும்
பொதியும் வீரம் பொலிவ தமைச்சு,

என்றபடி, காலமும், கருவியும், வினையும் ஆராய வல்ல மதியும், கல்வியறிவும், முயற்சியும் கொண்டு குடியோம்பும் திறனும், நற்குடிப் பிறப்பும், அரசனிடம் விசுவாசமும், புத்தி நுட்பமும், தைரியமும், வீரமும் பொருந்திய மனதும் உடையவனே அமைச்சன். பல சோதனைகளின் மேல் அமைச்சனை அரசன் நம்பவேண்டும். ஏனெனில்,

பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும்.

அரசன் பக்கத்திலேயே யிருந்து தீயதை யெண்ணும் அமைச்சன் எழுபது கோடி பகைவரினும் தீயன். மந்திரி, படைத் தலைவன் முதலிய சேவகரைப் பரிசோதிக்கும் விதத்தைத் தொகுத்து, "ஒற்றர்" என்ற தலைப்பின்



கீழ்க் குறிப்போம். மந்திரிக்கு மதிநுட்பத்தோடு உலக அனுபவமும் மிக்கும் இருத்தல் வேண்டும். எவரையும் வசப்படுத்தும் சொல்வன்மை யிருத்தல் முதன்மையானது. ஏனெனில் ஆக்கமும் கேடும் சொல்லால் வரும்.

சொலல் வல்லன், சோர்விலன், அஞ்சான், அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது.

சொல் வன்மையும், சோர்வின்மையும், அஞ்சாமையும் கொண்டவனை யாரும் வெல்ல முடியாது. மந்திரியின் சொல், சுருக்கமாயும், விளக்கமாயும் இனிமையாகவும் இருத்தல் வேண்டும். தன் செயலிலும் மந்திரி தூய்மை யுற வேண்டும். வினை நலம் வேண்டிய வெல்லாந் தரும். அரசனுக்குப் புகழையும், தருமத்தையும் பெருக்குஞ் செயல்களை மந்திரி எண்ண வேண்டும். தெளிவுள்ளவர் இடுக்கண் வரினும் இழி தொழில் புரியார்.

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

ஆதலின் பெரியோர் வெறுக்கும் செயல்களை மந்திரி ஒழித்தல் வேண்டும். தீய வழிகளில் பொருள் தேடுவதினும் வறுமையே நலம். முன்னால் அவசரமாகச்செய்து பின்னால் இரங்காது முன்னேயே யோசித்துப் பயன் தூக்கி வினை முயல வேண்டும்.

தான் உன்னிய பரிசுத்தமான வினையை அமைச்சன் மனவலிமை, அடக்கம், தெளிவு முதலியவற்றோடு திறன் படச் செய்தல் வேண்டும்.

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

பொருளும், கருவியும், காலமும், வினையும், இடமும் ஆராய்ந்தே அமைச்சன் ஒரு தொழிலைச் செய்யக் கடவன். தன் துணிவைப் பிறர் அறிதல் கூடாது. பகைவரைச் சிநேகமாக்கிக் கொள்ளுதல் சிநேகிதருக்கு நல்லவை செய்தலினும் நல்லது.

வேற்றரசருக்குத் தம்மரசன் சொல்லியதை வினயமாகத் தெரிவிக்கவும், வேற்றரசர் தம்மரசரைக் குறித்து உரைப்பதை உண்மையாகத் தெரிவிப்பதற்கும் தூதர் முதன்மையானவர். அன்பும், மந்திரத் தொழிலுக்கமைந்த குடிப்பிறப்பும், அரசர்க்குவந்த குணமும் ஆராய்ந்த சொல்வன்மையும், துணிவும், நல்லறிவும், கல்வியும், தோற்றப் பொலிவும், இன் சொல்லும் தூதருக்கு அழகு. தன் கடமையும், காலத்தையும், இடத்தையும் அறிந்து எண்ணி ஒரு விஷயத்தைத் தூதன் தெரிவித்தல் வேண்டும். தூதன் இழிந்த வார்த்தைகளைச் சொல்லலாகாது. தனக்கு முடிவு வரினும் தன்னரசன் சொல்வதை யுண்மையாகத் தெரிவித்தல் தூதனுக் கழகு.

பகை மன்னரைச் சேர்ந்தொழுகும் அமைச்சன் தீக் காய்வான் போன்று மிகவும் அணுகாமலும், அகலாமலும் சேர்ந் தொழுகல் வேண்டும். அரசன் விரும்பியவற்றைச் சொல்லிப் பயனற்றவைகளைக் கேட்பினும் சொல்லாது விட்டுவிட வேண்டும். தான் பேசும் மன்னன் மனதை அறிய வேண்டும். குறிப்பறிந்தே பேச வேண்டும். 'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்றவாறு முகக் குறிப்பாலேயே மன்னன் மனதை யறிந்து மந்திரி யுரையாடவேண்டும். அரசனோடு இருக்கும் ஆலோசனை சபையை அறிந்தே தன் எண்ணங்களை மந்திரி வினயமாக வெளியிடல் வேண்டும். சபையின் அளவையும் அறிவையும், மனதையும், அறிந்து, சொல் தெரிந்து, அடக்கமும வணக்கமும் கொண்டு உரைத்தல் வேண்டும். அறிவோர் முன் நல்லவற்றைச் சொல்லல் பயிர் வளரும் பாத்தியில் நீர் சொரிதற் கொப்பாகும். புல்லர் சபையில் மறந்தும், நற்பொருளைச் சொல்லாதிருக்கக் கடவன். தக்க சபையில் அஞ்சாது தன் எண்ணத்தை மந்திரி வெளியிடவேண்டும். அவையஞ்சி மெய் விதிர்ப்பவனுடைய அறிவு பயன் படாது. இத்தகைய அமைச்சன் தன் நாட்டை எவ்விதம் அமைப்பனென்றுரைப்பாம்.

நாடு, பொருள்

பயிர் விளைப்போரும், அறவோரும், செல்வரும், நீர்வளமும், மலைவளமும், நதி வளமும், நல்ல அரணும், நல்ல அரசாட்சியும் கொண்டது நாடு.

"உறு பசியும் ஓவாப் பிணியும் செறு பகையுஞ்
சேரா தியல்வது நாடு.

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல் குறும்பு மில்லது நாடு."

என்றவாறு, பசியும், பிணியும், பகையும், மாறுபாட்டாலாகிய பல கூட்டமும், உள் விரோதமும், கொலையும், நாட்டில் இருக்கத் தகாதவை.

மணி நீரு மண்ணு மலையு மணி நிழற்
காடு முடைய தரண்.

நீர், வெளி, மலை, காடு முதலிய அரண்களோடு கூடிய கோட்டை நாட்டைப் பகைவனிடமிருந்து காக்கும். உள்ளேயிருக்கும் மக்களுக்கு வேண்டிய பொருள்களும் நல்ல வீரர்களும் கோட்டைக்குள் ளிருத்தல் வேண்டும். கோட்டையானது காக்கவேண்டிய விடத்திற் சிறிதாயும், உயர்வும் அகலமும், திட்பமு முடைய சுவரினதாயு மிருத்தல் வேண்டும்.

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

அரண் எவ்வளவு பலமாயிருப்பினும் அதையுடையோர் தக்க போர்த் தேர்ச்சி யுள்ளவராயில்லேல் பயனில்லை.

இத் தகைய நாட்டிற்குப் பொருள் இன்றியமையாதது. பொருளே நாட்டிற்கு மதிப்பு:

"அறனீனும் இன்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்."

அரசன் தர்மத்தில் விதிக்கப்பட்டபடி அருளோடும், அன்போடும், தானே வந்து கிடைத்த பொருளையும், சுங்கப் பொருளையும், பகைவரிடமிருந்து வென்ற பொருளையும் தன் பொருளாக்குதல் முறை.

படை

எந்த இடர் வரினும் அஞ்சாது போர் செய்யும் படையே அரசனுடைய செல்வத்துளெல்லாம் தலையாகும். வீரமும், மாண்பும், முன்னாலே வீரர் சென்ற வழியைப் பற்றி நடத்தலும், நம்பிக்கையும், தலைவனுக்கு உடனே கீழ்ப் படிதலும் சேனையின் குணமாகும். சேனைக்கு வெறுப்பும் வறுமையும் கூடாது. சேனா வீரர் தம் புயவலிமையில் பெருமை யுள்ளவராயும் அஞ்சாத நெஞ்சுடையவராயும் பகைவன் கண்டு வெருளும் பார்வையுடையவராயு மிருத்தல் வேண்டும்.

போரிற் களிக்கும் இப் படையைக் கொண்டு மன்னவன், போரினும் நட்பையே அதிகமாக வளர்க்க வேண்டும். வளர்பிறை போன்றும், நூல்நயம் போன்றும், பண்புடையாரின் தொடர்பு வளரும். வாழ்விலும் தாழ்விலும் நண்பனுடன் நின்று, வேண்டும் போதெல்லாம் கண்டித்துப் புத்திசொல்லி, உள்ளுணர்ச்சியுடன், முகமனின்றி, சமயங்களில் உடுக்கை யிழந்தவன் கைபோல உதவி, நெஞ்சுறவு கொள்வாரே உண்மையான நண்பர். தன் நண்பரை மன்னன் ஆராய்ந்தே கொள்ளவேண்டும். ஆராயாமல் சிநேகிப்பதைப் போல் ஒருவனுக்குக் கேடில்லை. நட்டபின் பிரிதல் கூடாது. ஆராயாது கொண்ட நட்பு சாய்ந்துவிடும். குணத்தையும் பிறப்பையும், குற்றத்தையும், அற்றத்தையும் ஆராய்ந்தே நட்புச்செய்தல் வேண்டும். பழிக்கஞ்சி, குற்றங்களை யிடித்துக்காட்டி, துன்பத்தில் கைவிடாத, மாசற்றார் கேண்மை, கொடுத்துங் கொள்ளத் தக்கது. கேட்டி லுதவியென்னும் கோலால் நண்பரை யளந்துவிடலாம். அறிவில்லார் தேசத்தை நீப்பதே ஒருவனுக்கு லாபம். பழையநட்பைப் போற்றிக் குறிப்பறிந்து கேளாவுதவிசெய்வது மேலானது. ஆசை காட்டினும் பண்பிலார் நட்பை விட்டுப் பிரிவதே மேல். செல்வ முற்ற விடத்து நட்டு, அஃதற்ற விடத்திற் பிரிந்து வேசையைப் போன்ற கள்ள வுறவுடன், போர்க்களத்தில் விட்டோடிப் போகும் குதிரை போன்றவர் நேசத்தினும் தனிமை இனிது. கெடுங்காலை கைவிடுபவர் கேண்மையை எண்ணினும் உள்ளஞ்சுடும். தனக்கு ஆபத்துவந்தவிடத்து உதவிய நண்பரை ஒருபோதும் துறக்கக்கூடாது. பழைய சிநேகிதரிடம் அன்பு பிரியாத வரைப்பகைவரும் கண் டஞ்சுவர். பண்பிலார் கேண்மை பெருகலினும் அருகலே இனிது. செல்வத்தில் நட்டு அல்லலில் நீங்குவோரின் நேசம் இருப்பினும் போயினும் ஒன்றேயாம்.

கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல் வேறு பட்டார் தொடர்பு.

மனையிலே யுறவாடி மன்றிலே பழிப்பவர் தொடர்பை ஒழிக்கக் கடவர். இனம்போன்று இனமற்றார் கேண்மை மாதர் மனம் போன்று வேறுபடும். முகத்தி லினியராய் அகத்தில் நஞ்சுடையாரை எப்போதும் அஞ்சுக. நேசர் போன்று இன்சொல் சொல்லினும் தீய நேசரை உட்னே அறிந்து கொள்ளலாம்.

சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்
தீங்கு குறித்த, மை யான் [வணக்கந்

என்றபடி, பகைவரின் சொல் வணக்கத்தை நன்மையென்று மயங்காதிருக்கவேண்டும். அது வில் வளைந்தாற்போன்று தீமை தரும். தொழுத கை யுள்ளும் பகைவர் வாளை மறைத்து வைத்திருப்பார். அவருடைய அழுத கண்ணீரையும் நம்பாதிருக்கவும். புறப்பகைவரை நகச் செய்து நட்பாக்கிக்கொண்டு தான் மட்டும் யெதிர்க்கத் தக்க வலியைப் பெருக்குவது அரசரின் தந்திரமாகும். பகைவர் நட்பாகும் காலம் வரின் முக நட்புக் கொண்டு அகநட்பை முற்றும் விடவேண்டும்.

நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்,

என்றபடி, பழி பாவங்களுக்குக் கூசாமையும் விரும்பிச் செய்ய வேண்டிய கருமங்களைச் செய்யாமையும், போற்றத்தக்க கல்வி யொழுக்கங்களை யடையாமையும் அரசனைப் பேதையாக்கும். தான் ஓதி, உணர்ந்து, பிறர்க்குரைத்துத் தான் அடங்க வேண்டும். அறிவீனன் தான் எத்தப் பிறப்பிலும் அனுபவிக்க வேண்டிய நரகத்தை, இப் பிறப்பிலேயே தேடிக் கொள்வான். பேதைமையாற் செய்யப்படும் வினை தன்னையும் பிறரையும் வருத்தும்.

ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
பெருஞ் செல்வ முற்றக் கடை.

பேதையின் செல்வத்தால் அயலார் பசி தீர்ந்து, தன் சுற்றத்தார் பசியால் வருந்துவார். பேதையர் எளிதில் நட்புப் பிரிவர். பெரியோர் முன்னே பேதை புகுவது அழுக்குக் காலை நல்ல படுக்கை மேல் வைத்தற் கொப்பாகும். ஒருவனுக்கு அறிவின்மையை யுலகு பெருங் குறையாகவே மதிக்கும். புல்லறிவாளர் இம்மை மறுமைப் பயன்களை நோக்கி யறஞ் செய்யார். அறிவீனர் தமது புன்செயலால் பகைவரினும் தம்மையே வருத்திக் கொள்வர். தம்மைத் தாம் மதித்துக்கொண்டு, எல்லா முணர்ந்தவர் போல் எண்ணிக் கொள்வது வெண்மை அல்லது அறியாமை எனப்படும். கல்லாத நூல்களைக் கற்றது போல் நடத்தல், அவன் கற்ற நூலறிவையும் சந்தேகிக்கும்படி செய்யும். முதியோர் சொல்லும் உபதேசங்களைக் கேட்காத அறிவிலர், தமக்கே பெருந் துயரைத் தேடிக் கொள்ளுவர்.

ஏவவுஞ் செய்கலான், தான்தேறா னவ்வுயிர்
போஒ மளவு மோர் நோய்.

அறிவுடையாரின் கட்டளைகளையுஞ் செய்யாது தானும் உணராதிருக்கும் பேதை உலகிற்கு நோய் போன்றவன். உலகம் ஒப்புக் கொண்டதை மறுத்து மக்களின் எண்ணத்திற்கு மாறாக நடக்கும் மன்னன் உலகிற்கு ஒரு பேய் போல மதிக்கப் படுவான்.

இனி குரோதத்தா லுண்டாகும் இகல் வினைகளைப் பற்றிக் கூறுவோம். அன்பினால் பகைவரையும் நேசத் துட்படுத்தி ஆளுவதே நலமென வள்ளுவர் மொழிந்துளார். இக்காலத்தின் புதிய வுணர்ச்சியும் போரைத் தடுக்கிறது.

தன்னாட்டைச் சீருடனே தான் போற்றி
டெண்ணுக்கால் ஏதே இகல். [மற்றோர் நா

அச்சத்தை முற்றும் விட் டன்புமதம் பூணாசிற்
கெச்சமயத் தாரே யிகல்,
படையாலே யென்னும் பாரோரே கூடி
னிடை யன்பு சூழா விடம்,
பஞ்சம் படையுஞ் சிறையும் பகைதீது
மஞ்சானை வெல்வ தரிது,

என்னு முண்மைகள் நிலவி வளர்ந்து தற்போதுலகம் போர்களைக் கண்டித்து முன்னேறிக்கொண் டிருக்கிறது. இவ் வுணர்ச்சி புத்தன் காலத்திற்குப் பிறகு சிறிது அரும்பி மலர்ந்தது. பிறகு நம் நாடு அயலார் செய்த கொடும் பே ருக்குக் களானது. உலகில் எங்கு நோக்கினும் போர் முழக்கம் மிகுந்தது. மஹாத்மா சகத்தில்தான் போரொடுங்கிப் பொறுமை நிலவிக் கொண்டு வருகிறது.

வள்ளுவரும்,

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை
றளையுங் கட் டங்கிற் றுலகு, [யாளன்
இன்பத் ..ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத் துட் டுன்பங் கெடின்,
இகலானு மின்னாத வெல்லா நகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு,

முதலிய திருவாக்குகளால் இகலற்ற தன்மையைப் போற்றுகிறார். எனினும் அவர் காலம், போரில் வெல்லலே வீரத்திற் கழகு என்று மதிக்கப்பட்டுக் குடியரசின் சக்தி யுதிக்காத தனி யரசாட்சியின் காலம். சேரசோழ பாண்டியருள் கொடும்போர் நிகழ்ந்த காலம்.

வாள் ..ந்தர மறுப் பட்டன
செவ்வானத்து வனப்புப் போன்றன
தாள், களங் கொளக் கழல்பறைந்தன
கொல்லேற்றின் மருப்புப் போன்றன
தோல்துவைத் தம்பிற் றுளை தோன்றுவ
நிலைக் கொரா அ விலக்கம் போன்றன.

என்று போர்த்திறனைப் பாடிக் களித்துப் படைச் செருக்கும் வாள் வலியும், நிணந்தோய்ந்த ஈட்டியைத் தாங்குவதில் பெருமையும் மதிப்பாயிருந்த அக் காலத்தில் போரறத்தைக் குறித்து வள்ளுவர் விரித்துக் கூறியது பொருத்தமானதே. அந் நாட்களிலும்,

போராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு,

என்றவாறு, பகைவரின் தாழ்வையும் நீக்கல் பகைவரை வெல்லுதற்கான ஆயுதமென்று சொல்லி யிருக்கிறார். வள்ளுவரின் போரறம் பெரும்பாலும் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திற்கு ஒத்தே யிருக்கிறது. கௌடில்யர் வள்ளுவரினும் மிக விரிவாகப் போர் நூலைச் சொல்லி யிருக்கிறார். ஏனெனில் அர்த்த சாஸ்திரம் முற்றிலும் ராஜ தந்திரத்திற் கென்றே எழுதப்பட்ட நூல். குறளோ, துறவோர், மனையோர், அரசர், வணிகர் முதலிய யாவருக்குமுள்ள அறத்தை விரிக்கும் பெரு நூல்.

கௌடில்யர் ஒரு நாட்டைப் படை யெடுக்கும் வழி சேனைகளைத் தயார்செய்தல், அணி வகுத்தல், உள்நாட்டு வெளிநாட்டுச் சண்டைகளை யடக்கும் வகை, விரோதிகளோடு உறவாடி அவர்கள் நுட்பமறிதல், முற்றுகை போடல், தன் சேனை தளர்ந்த விடத்து அதைத் தைரியப்படுத்தல், யுத்தகளத்தில் படைகளைத் தக்குழி நிறுத்தல், காலாள், குதிரை, யானை, தேர், முதலிய படைகளைச் செலுத்தும் வகை, கோல், பாம்பு, வட்டம் பதுமம், முதலிய உருவில் படையை நிறுத்தல், தூதனின் திறம், தந்திரம், உளவின் வகை, பகைவனின் ஆயுதங்களைக் கைப்பற்றும் வகை, அரசர்களை இரகசிய வழிகளில் வசஞ்செய்யும் வகை, ஆயுதங்கள் செய்து உபயோகிக்கும் விதம், சமாதானஞ் செய்வகை முதலியவற்றைக் குறித்து வெகு விரிவாயும் தெளிவாயும் கூறுகிறார்.

திருவள்ளுவர் முதலில் பொது வகையால் விலக்கப்பட்ட இகலைக் கண்டித்துவிட்டுப் பிறகு ராஜாங்க விஷயமாக ஏற்படும் பகைமையைப் பற்றிக் கூறுகிறார். படை, அறிவு, நீதி முதலியவற்றின் வலிமையுள்ள துணையுள்ளவரை எதிர்க்காமலும், மேற் சொன்ன வற்றில் மெலிந்தவரை எதிர்த்தும் மன்னன் ஒழுக வேண்டுமெனப் பகைமாட்சி முதற் குறள் சொல்லுகிறது. அன்பும், துணையும் ஆற்றலும், மின்றி அச்சமும், காமமும், உலோப குணமும், கோபமும் உடையவன் பகைவனால் வெல்லப் படுவான்.



[நோக்கான்
வழி நோக்கான் வாய்ப்பன செய்யான் பழி
பண்பிலன் பற்றார்க் கினிது,

என்றபடி நீதி யறியாது, விதித்தன செய்யாது, பழிக் கஞ்சாது குணமற்றவனைப் பகைவர் எளிதில் வெல்லுவர்.

கொடுத்துங் கொளல்வேண்டுமன்ற வடுத்திருந்து
மாணாத செய்வான் பகை,

என்றபடி ஒரு நீதி யற்றவனுடைய பகையை வலிவிலாயினும் அடைதல் வேண்டும்.

செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர் பெறின்,

கல்லாள் வெகுளுஞ் சிறு பொரு ளெஞ்ஞான்றும்
ஒல்லானை யொல்லா தொளி,

என்றபடி நீதி யறியாதவன் பகை வரின வெல்பவருக்கு இன்பம்.

ஆனால் மாண்பற்ற பகையைவள்ளுவர் கண்டிருக்கிறார்:

எழுற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகை கொள்பவன்.

தான் தனித்திருந்து பல ஜன விரோதியான் பித்தன் போல்வான். சமயங்களில் பகைவனை நண்பனாக்கி யொழுகலே பண்பு. தனது பகைவரிடம் தன் வலியற்ற தன்மையை ஒரு போதும் அறிவிக்கக் கூடாது.

வகை யறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

தன் எண்ணத்தை நிறைவேற்றும் வகையை யறிந்து, அதற்கு வேண்டிய சாதனங்களைப் பெருக்கி, தன்னைக் காக்க வல்லவன் முன் பகைவனுடைய செருக்கு கெட்டுவிடும்.

இளைதாக முண்மரங் கொல்க; களையுநர்
கைக் கொல்லுங் காழ்த்த விடத்து.

முள் மரத்தை இளமையிலேயே சிதைக்க வேண்டும். முதிர்ந்தால் அது கையை நோவுறுத்தும். அது போல பகையை முதிரவிடாது இளமையிலேயே சிதைக்க வேண்டும். அப்படிப் பகைவருடைய செருக்கை அடக்க ஆற்றலற்றவர் அவர் கையில் உயிரிழப்பர்.

அரசன் புறப் பகையைக் கண்டிப்பதோடு உட்பகையையும் கண்டித்தல் வேண்டும். நீரும் நிழலும் சில சமயங்களில் மனிதனை நோவுறுத்துவது போல் தம்மினத்தவரின் உட்பகையே ஒருவனுக்குக் கேடு தரும்.

வாள் போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள் போல் பகைவர் தொடர்பு.

உருவிய வாளையுடைய பகைவனைவிட, நேசனைப் போன்றே உட்பகை யுள்ளவனை அஞ்ச வேண்டும். அப் பகைவன் பால் தற்காப்புக் கொள்ளல் மன்னரின் முதற்கடன். உட்பகையினின்று பல குற்றங்கள் பிறக்கின்றன.

அரம்பொருத பொன் போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

உட்பகை தன் வலிமையை அரம்போலத் தேய்த்து விடும்.

உடம் பாடிலாதார் வாழ்க்கை குடங்கருட்
பாம்பொ டுடனுறைந் தற்று.

மனப் பொருத்த மில்லாதவரோடு வாழுதல் குடத்திற்குள் பாம்புடன் வாழுதல் போன்று அபாயமுள்ளது.

அரசன் பெரியோர்களை வணங்கி அவர்கள் சொற்படி நடக்கவேண்டும்.

கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல்.

அறிவாலும் பலத்தாலும் வல்லவர்களைச்சக்தியற்றவர்கள் துன் புறுத்தல் எமனைக் கையினால் அழைத்துக் கொண்டதற் போலாகும். எரியாற் சுட்டப்பட்டு உய்தாலும்

160202



பெரியவருடைய மனதைப் புண் படுத்தியோர் உய்யார். குன்றைப் போன்ற உறுதி யுடையவர்கள் மனம் வருந்தும்படி செய்தால் செல்வர் குடியொடு கெடுவர்.

எந்திய கொள்கையார் சீறி னிடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

ஆதலின் மன்னன் குரோதத்தினலுண்டாகும் பகையைத் தடுக்கவும் எதிர்க்கவும் அடக்கவும் முயலவேண்டும்.

இனி காமத்தினல் வரும் பகையைச் சொல்லுகிறார். மன்னன் பெண்களுக்கு ஈடுபட்டு நடத்தல் பேதமை. தன் இல்லாளைக் கண்டு அஞ்சுபவன் எப்போதும் நல்லார்க்கு நல்லது செய்யவும் அஞ்சுவான். அப்படிப்பட்டவன் ஆண்மையற்றவன். பெண்ணேவல் செய் தொழுகுவோனைவிட அப் பெண்ணே பெருமை யுடையவள். பெண்கள் வலையிற் சிக்கி யொழுகு மரசன், தன் நண்பரின் குறைகளையும், மறுமைக்கு வேண்டிய அறத்தையும் நன்கு செய்யான்.

அறவினையு மான்ற பொருளும் பிற வினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்.

இதனினும் மிகக் கொடிய குற்றத்தைத் தருவது வேசையர் முயக்கு.

பொருட் பெண்டிர் பொய்மை முயக்க மிருட்டறையில்
லேதிற் பிணந்தழீஇ யற்று.

வேசையரைப் புணர்தல் இருட்டறையில் பிணத்தைத் தழுவியதற்குச் சமானமாகும். அறிவும், அருளும், நலமும், நிறை நெஞ்சும் உடையார் விலைப் பெண்டிரைக் கனவிலும் கருதார். பரத்தையரின் மெல்லிய தோள்கள் அறிவிலிகள் அழுந்தும் நரகம்.

இரு மனப் பெண்டிரும் கள்ளுங் கவறுந்
திரு நீக்கப் பட்டார் தொடர்பு.

பெண் வலையிற் சிக்கிக் கோவலன், இந்திரன், இராவணன், கீசகன் முதலியோர் கெட்டனர். ஆதலின் அரசன் பெண் மாயையைக் கண்டித் தொழுகல் வேண்டும்.

அரசன் மதுபானத்தைத் தானும் ஒழித்துத் தன் குடிகளையும் ஒழிக்கும்படி செய்ய வேண்டும். கௌடில்யர் தன் அர்த்த சாஸ்திரத்தில் பழங்களாற் செய்யப்பட்ட மதுக்களையே குறிப்பிடுகிறார். தீய நடத்தையுள்ளவர் குடிப்பதைத் தடுக்க விதி யேற்படுத்தி யிருக்கிறார். நன்னடத்தை யுள்ளவர்கள் தீராதெனில் தன் தேக சுகத்திற்காகச் சிறிதளவே யுண்ணவேண்டு மென்கிறார். ஆனல் வள்ளுவர் குடியை அறவே ஒழிக்க வேண்டு மென்கிறார். கள் ஒருவனுடைய பெருமையையும், ஒளியையும், ஆயுளையும் போக்கும்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

ஆதலின் கள்ளுண்பதை முதலில் தன் அரசை விட்டு ஓட்ட வேண்டும். இஃதின்றி, அக் கட்கடைகளைப் பெருக்கி அதனின்றுபொருள் தேட விழையும் ஒரு அரசின் கொடுமையை யென்னென் றுரைப்பது!

கள்ளை யொழிப்பது போல் சூதையும் தன் நாட்டினின்று ஒழித்தல் மன்னனின் அறம்.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற் பொன் மீன்விழுங்கி யற்று.

சூதினல் கிடைத்த லாபம் தூண்டிலில் மீனுக்குக் கிடைக்கும் இனிக் கொப்பானது. சூதில் ஒன்று லாபம் வந்தால் நூறு நஷ்டம் வரும். சிறுமை பல செய்து சீரழிக்கும் சூதைப் போல் வறுமை தருவது மற்றொன்றில்லை.

உடை செல்வ மூணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

அரசன் சூதாட்டத்தை விரும்பினல் தன் கீர்த்தி, கல்வி ஞானம் அனைத்தையும் இழந்து ஊணுடைக்குக் கூட வருந்த நேரிடுமென்பது நளனுடைய கதையினின்று நமக்கு விளங்குகிறது.

அரசன் தன்னையுங் குடிகளையும் நோயினின்று காக்க வேண்டும். அளவறிந்து, அற்றது போற்றி உண்



ணலே நோயற்ற வாழ்வைத்தரும். அளவற்றுண்ணும் விருந்துகளும் நோய்க்கிடமானவை.

இவ்விதமாக அரசனது அங்கமாகிய அமைச்சர், ஆலோசனை சபையார் புரோகிதர், பெரியார், படை, போர்வீரர், காப்பு நண்பர், பகைமன்னர், சேவகர், மருத்துவர் முதலியோரைக் கூறிவிட்டு, இனி ஆளுகைக் குறிய சில குறிப்புகளை ஒழிபியலில் கூறுகிறார்.

அரசன் உயர்குடி மக்களைத் தேர்ந்தெடுப்பதோடு தன் குடிகளுக்குச் செம்மையும், நாணும் இயல்பாக வரும்படி செய்ய வேண்டும். உயர் குடிப் பிறந்தவர்கள் ஒழுக்கமும், வாய்மையும், நாணு முடையவர். முக மலர்ச்சியும், ஈகையும், இன் சொல்லும், அன்பும், இகழாமையும் நற்குலத்தவரின் அழகு. நிலத்தினியல்பைப் பயிர் காட்டுவது போலக் குலத்தினியல்பை அவரவர் சொல்லே காட்டும்.

[வேண்டின்

நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்
வேண்டும் யார்க்கும் பணிவு.

ஆதலின் பணிவுடன் பழகுவதே உயர்குடிப் பிறப்பின் அறிகுறி. இன்றியமையாத சிறப்பின வாயினும், தமது மானத்தைக் குன்றச் செய்யும் செயல்களை விட்டுவிடுதல் நலம். பெருமையற்ற காரியங்களைச் செய்து நிலை கெட்ட மாந்தர் தலையினிழிந்த மயிரனையர். மானமுடையார்க்குத் தன் ஊனுடல் பெரிதல்ல. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா போன்று சான்றோர் தம் மானத்திற்குக் கேடுவரின் உயிர் நீப்பார். மானத்தைக் காப்பவனை உலகம் போற்றும். ஆதலின் அரசன் தன் பெருமையைக் காத்து தான் அவமானப் படும்படியான வினைகளை யொழிக்கக் கடவன்.

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப் பொவ்வா
செய்தொழில் வேற்றுமையி னல்,

என்றபடி பிறப்பினல் அனைவரும் ஒன்றே யாயினும் தாம் செய்யும் தொழிற் பெருமையால் மனிதர் உயர்வு தாழ்வுள்ளார். உயர் விடத்திலிருந்தும் சிறுமையெண்ண முடையவர் மேலோராகார். கீழிருந்தும் சிறந்த எண்ண முடையவர் கீழோராகார். சிறியார் பெரியோரைப் பேணிக் கொள்வோ மென்னும் உணர்ச்சியற்றவர்.

பணியுமா மென்றும் பெருமை, சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

சிறுமைக்குத் தற்புகழ்ச்சியும் பெருமைக்குப் பணிவும் அறிகுறிகளாம். பிறர் மானத்தைப் பெரியோர் மறைப்பர்; சிறியோர் பிறர் குற்றத்தையே கூறுவர். குண நலமே சான்றோருக்கு அழகு. சால் புடையார் பணிவுடையர்.

அன்பு நாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்து சால் பூன்றிய தூண்.

பிறரிடை பண்பும், பழிக்கு நாணலும், பரோபகாரமும் பழைய நேசரிடம் பிரியமும், உண்மையும் சான்றோர் குணம். தனக்கு இன்னாத செய்தோர்க்கும் இனியவை செய்வர் சான்றோர். ஊழி பெயரினும் சான்றாண்மையாளர் தம் நடத்தையினின்று பெயரார். அவர்களே அப்படிச் செய்யின் பூமாதேவி பொறையாற்றாள். அத்தகைய பண்புடையாளரை மன்னன் போற்ற வேண்டும்.

பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண் புக்கு மாய்வது மன்

பெரியவர்களிடத்தில் நற்குண மிருப்பதனல்தான் உலகம் நிலை நிற்கிறது. இல்லையேல் உலகம் மண்ணாகும். எவ்வளவு புத்தியுள்ளோரேனும் பண்பற்றவர் மரம் போன்று பகுத்தறிவற்றவரே யாவர்.

இனி அரசனுடைய செல்வத்தைக் குறித்துச்சொல்லுகிறார். தான் அனுபவித்துப் பிறர்க்கும் ஈதற்கே செல்வம் ஏற்பட்டது. பொருளை மென்மேலும் பேராசையுடன் குவித்து அதை நல்வழியில் செலவழிக்காதவர் உலகிற்குப் பெரும் பாரமாவர். கொடுப்பதும்

துய்ப்பதும் தேற்றாதான், எவ்வளவு செல்வமுடைய வனாயினும் இல்லாதவனுக்குச் சமமானவன்.

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றாள் தமியள், மூத் தற்று.

பிறர்க் குதவாது சேர்த்துவைக்கும் செல்வம் அழகுள்ள ஒரு பெண் தன்னை அனுபவித்தற்கு ஒருவருமின்றிக் கிழவியாதலை யொத்தது. ஆதலின் அரசன் தன் செல்வத்தால் உலகிற்கு உதவவேண்டும். பேராசையுடன் தனம் சேர்ப்பது குற்றமுடைத்து. முயற்சியாலும் அறிவாலும் அரசன் தன் குடிகளின் செல்வத்தையும் குணத்தையும் உயர்த்தவேண்டும். தன் குடியை உயரச் செய்து வாழ்பவனை உலகமெல்லாம் கூடிப்புகழும். விவசாயம் கைத்தொழில் முதலிவற்றைச் சரியானபடி வளர்க்கவேண்டியது அரசனுடைய பொறுப்பாகும். நீர்வளமும் நிலவளமும் மிகுந்தநம் நாட்டின் செழிப்பை யறிந்தே அதற்குத்தக்க பயிர்த் தொழிலைச் செழிப்பிக்க வள்ளுவனார் வற்புறுத்துகிறார். நம் நாட்டிற்கு இயற்கைத் தாய் கொடுத்திருக்கும் பயன்களை உழுது பயிர்செய்து அடைந்து நாட்டின் வறுமையைப் போக்க வற்புறுத்துகிறார். பயிர்த் தொழிலே நாட்டின் மூச்செனச் சொல்லலாம். உழவர் கை மடங்கினால் உணவின்றி மாந்தர் வருந்துவர். துறவோரும் நிலைதவிர்வர். வேளாளர் தமது கலப்பை முனையில் உலகுமக்களைத் தாங்குவர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாரும் தொழுதுண்டு பின்செல்லுபவர். எல்லாவற்றிற்குந் தலைமையான தொழில் உழவே.

இல மென் றசைஇ இருப்பாரைக் காணி
னில மென்னு நல்லாள் நகும்.

இல்லையென்று உழுதுண்ண ஆற்றாது சோர்வடைந்து சோம்பியிருப்பவனைக் காணின் நிலமாது நகைப்பாள்! உலகின் வறுமையை நீக்கும் மருந்து உழவே.

வறுமை உலகின் பாவங்களுக்கெல்லாம் காரணம். இக்கொடிய அரக்கனாகிய வறுமையை அரசன் தன் நாட்டைவிட்டு ஓட்டாவிடின் களிப்பெனும் மங்கையைக் கற்பழிக்கும். நல்குரவென்னும் இடும்பையுள் பல் குறைகள் அடங்கும்.

இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

வறுமை இம்மை மறுமைப் பயன்களை யழிக்கும். வறியன் தன் தாயாலும் அவமதிக்கப்படுவான்.

தீயிலேனும் தூங்கலாம். வறுமையின்பால் மட்டும் ஒருவரும் தலைவைத்துப் படுக்கக் கூடாது. வறுமையுடன் இவ்வாழ்வை நடத்துவதினும் இல்லைத் துறத்தலே மேல். ஆகலின் வறுமையை யொழிப்பது மன்னவனுடைய முதற்கடமையாகும். தன் குடிகள் பிறரிடம் யாசிப்பதை மன்னன் ஒழித்தல் வேண்டும். கரவாது ஈயவல்லவரிடமும் இரவாமை நன்று. முயற்சியால் வந்தது கூழாயினும் அதை மாந்தர் பெருமையுடன் உண்ணக்கடவர். இரப்பதைப்போல நாவிற்கு இழிவு தரத்தக்க தொன்றுமில்லை.

இரவென்னு மேமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

தன் வறுமையைத் தீர்க்க இரப்பதென்னும் காப்பற்ற தோணி பொருளுடையோர் இல்லை யென்று தம் பொருளை யொளித்தலெனும் வன்னிலத்தில் தாக்குண்டு பிளக்கும்.

முடிவில் கீழ் மக்களைத் தன் வசப் படுத்தி யடக்கும் வகையைச் சொல்லுகிறார்.

அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவா வுண்டே லுண்டாஞ் சிறிது.

அரசன் தன்னைத் தண்டிப்பான் என்னும் அச்சத்தாலும் அரசன் தனக்குத்தரும் பொருட்பேற்றாலுமே கயவர் அடங்குவர்.

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படும் கீழ்.

என்றபடி கீழ்மக்களுக்குத் தக்க தண்டோபாயத்தையும் அரசன் பயன்படுத்த வேண்டும். பிறர் உடுப்பதும் உண்பதுங்கூடக் காணின் பிறர் மேல் கீழ்மக்கள் வடுக்கண்டு பொறாமை யுறுவர். தம்மைப் பிறர்க்கு விற்றுத் தகாதவற்றைச் செய்யக் கயவர் துணிவர். இத் தகைய கயவர் தம் நாட்டில் தலை காட்டாது செய்து, சான்றோரைப் போற்றுதல் மன்னன் கடன்.

திருவள்ளுவர் கூறும் பொருள்நூல் தனியரசிற்கு மிகப் பொருந்தியதா யிருக்கிறது. அதன் கண்ணேயே குடியாசிற்கு வேண்டிய விதிகளும் பொருந்தி யிருக்கிற



தென் றறிந்தோம். இத்தகைய நூல்களைக்கற்றுணர்ந்து மன்னறத்தையும் மக்களறத்தையும் ஒவ்வொருவரும் அறிந்து "எல்லாரும் இந் நாட்டு மன்னர்" ஆகவேண்டு மென்பதே எமது விருப்பு. அர்த்த சாஸ்திரத்தைக் கற்பது மன்னரேயன்றி மக்களுடைய கடனுமாகும். உலகில் ஜனநாயக முழக்கம் மிகுந்திருக்கிறது. நம் நாடும் விழித்துக்கொண்டிருக்கிறது. சுதந்திரசூரியன் உதித்திருக்கிறான். பாரதமாதாவின் வயிற்றிலும் ஒரு ஆப்ரஹாம் லிங்கனும் வாஷிங்டனும் பிறக்கலாம். இன்று ஏருழவன் நாளை ஜனத்தலைவனாக வரும் காலத்தைப் பாரத நாடும் எதிர் பார்க்கிறது. புலித் தாயின் நற்பயனைப் பொதுவாகப் புலியோர் துய்க்கும் நாள் அணுகி வருகிறது. ராஜ தந்திரம் ஒவ்வொருவருக்கும் தெரிய வேண்டியது மதக் கடனென் றுணரவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன் கடனையும், தன் நாட்டிற்குரிய கடனையும் உணர்ந்து சமயம் வரின் தன் நாட்டின் ஆட்சிப் பொறுப்பையும் தாங்க வல்லவனாதல் வேண்டும். ஏ பாரத வீரனே, உன்னை நீ அடிமை யென்றெண்ணாதே. நீயே நாளை என் ஜனத்தலைவனாக வரக் கூடாது! முயற்சி திருவினையாக்கும்! ஆதலின் உன் திறமையை அதிகப்படுத்திக்கொள்!

## ராஜகோபாலன் கடிதங்கள்

அன்புள்ள சகோதர, வைகாசி ௧௦

ஓர் உண்டியலை மாற்றுவதற்காக நான் மதுரைக்குப் போகும்படி ஏற்பட்டது. சென்ற கண்ணுக்கு முன்னால் சலன படம் விரிவது போல் விரிய ஆரம்பித்தது. வந்த காரியம் கூடப் பார்க்கவில்லை. மனது அந்த மனோகரமான சரித்திரத்தை உள்வெளியின் கண்ணோ கண்டு களி



பொற்றாமரைக்குளம், மதுரை

சனிக்கிழமை சென்றேன். மதுரையைப் பார்த்தேன். பார்த்தது தான். தென் தமிழ் நாட்டின் செல்வத் திருச் சரிதமெல்லாம் என் மனக் யெய்தி நாட்களைக்காகப்பாவசமாயிருந்தது திரும்ப அரிதில் தன்னிலை பெற்ற பிறகுதான்நேற்றுக் காரியத்தைப் பார்த்துக்கொண்டு திரும்பினேன்.

மதுரை! பேரே எவ்வளவு மதுரமாக இருக்கிறது! அப் பேரினுள் வெள்ளியம்பலக் கடவுளின் திருநடனம் நிகழ்கின்றது; பாண்டியரின் கோலாகலமான பராக்கிரமங்கள் ஒளி வீசுகின்றன. முச்சங்கங்களினும் தண்டமிழ் மணம் கமழ்கின்றது. சமய குரவர்களின் திருவடிச் சுவடுகள் பொன்னெனப் பொலிகின்றன. நாயக்கர்களது வீரமும் ஈகையும் சிற்ப அபிமானமும்

மதுரைக்குச் சென்றதும் கோபுரங்களே உயிர் பெற்று என்னை வாவென்று அழைத்தது போலிருந்தது. நேரே ஆலயத்துக்கே சென்று புஷ்கரணியண்டை உட்கார்ந்து கொண்டும், மறுபடி எழுந்து உலவிக்கொண்டு சுவரில் எழுதியிருக்கிற சித்திரங்களையும் தூண்களில் வெட்டியிருக்கும் சிற்பங்களையும் கண்ணால் பருகிக்கொண்டும் வந்தேன். ரோமாபுரியின் அலங்காரங்களையும்



மண்டபச் சிற்ப வேலைகள், மதுரை.

பிரகாசிக்கின்றன. பாளையகாரரின் தேசாபிமானமும் ஸ்வதந்திர அபிமானமும் மலர்ந்து மனதைக் கவர்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலே பாண்டியரின் புதல்வியாக வந்து தோன்றி எம்மனோரையெல்லாம் ஆட்கொண்டு வருகிற மீனாக்ஷியம்மையின் திருவருட் பிரகாசமும் எழிலும் கோடி சூரியப் பிரகாசத்துடன் விளங்குகின்றன.

சரித்திரங்களையும் பற்றி எழுதுவதற்குத் தற்கால ஐரோப்பாவில் கவிவாணர்களும் வசன ஆசிரியர்களும் மலிந்து நிற்கிறார்கள். பைரனைப்படி. மாஜினியின் அக்னி ஜ்வாலை கக்கும் வாக்கியங்களைப் பார். காரிபால்டியின் போரிடி முழக்கத்தைப் போன்ற பிரசங்கங்களை நினை. சூரியோதயத்துக்கு முன் தோன்றிய கானங்கள் என்ற பொருள்ள ஸ்வின்பர்னுடைய கவிகளின் சோக



ழும், மானமுடைவும், வெற்றி நம்பிக்கையும் ஆகிய இருதயபேதனமான உணர்ச்சிகளைச் சிந்தி.* இதனோடு கிப்பனுடைய நூலையும் மோம்ஸனுடைய நூலையும், நீபூர், மெரிவேல் ஆகிய இவர்களுடைய ரோமாபுரி சரித்திரத்தையும், இதற்கும் மேலே விர்கிலியனுடைய ஏனையத்தையும் லீவியன் எழுதிய ரோம இதிகாசத்தையும் சிந்தித்துப் பார்.† இந் நூல்களெல்லாம்

விட்டுப் புதியதோர் மெல்லிய, எழிலுடைய சரீரத்தை எடுக்கும் நிலையிலிருக்கும் ஒளி நிரம்பிய அசரீரியான ஓர் ஜீவனைப் போலவும் மாறி மாறித் திகழும்படி காண்பிக்கின்றன. இதினின்று ரோம் என்கிற பெயருக்கே ஓர் மோகன சக்தி ஏற்பட்டுவிட்டது. 'மதுரையின் ஏகாதிபத்தியம் ரோமாபுரியின் ஏகாதிபத்தியத்தைப் போன்ற அவ்வளவு விரிந்த பரப்புடையதா



பிராகாரம், மதுரை.

ரோமாபுரியை மகா சக்தி நிரம்பிய ஓர் தேவியைப் போலவும், துக்கத்தினால் பீடிக்கப்பட்டுத் தன் விதியையும் தன் குழந்தைகளின் நிர்க்கதியையும் நினைத்துக் கதறும் ஓர் கிழமாதைப் போலவும், பழைய உடலத்தைத் தள்ளி

யிருந்ததில்லை. ஆனால் சம்பவங்களின் நிகழ்ச்சிகளையும், அவ் வரு நகரில் பிறந்த ஆத்தியாத்ம வேகத்தையும், கவிஞர்களின் வாற்சல்லியம் நிறைந்த மொழிகளையும், தண்டமிழ்த் தொண்டர்களின் வாஞ்சையையும் நோக்கினால், செந்

* "Songs before sunrise" by A. C. Swinburne.

† Gibbon's Decline and fall of the Roman Empira; Histories of Rome by Mommson, Niebuhr, and erivale; Virgil's Æneid; Titus Livy's History of Rome.

தமிழ் தந்த கூடல்மாநகரானது மகித இதிகாச மாகிற படத்தில் பெற்று வைத்திருக்கிற புகழ் நிரம்பிய இடமானது சோமாபுரி பெற்றிருக்கிற இடத்திற்குக் கொஞ்சமேனும் குறைந்ததன்று என்றே தோன்றும்.

இன்று உனக்கு அதிகம் எழுத எண்ணவில்லை. ஆனால் மதுரையின் எழில் நிறைந்த சரித்திரத்தைக்கடல் மடை திறந்தது போல என் சிதாகாயத்தினுள்ளே பெருகிஓடும்படி செய்து கொண்டு, வண்டியூர்த் தெப்பக்குளக் கரையில் பௌர்ணமி யன்று நான் உட்கார்ந்திருக்கையில் தோன்றிய அனந்தமான சித்திரக் கூட்டங்களில் சிலவற்றை யாத்திரம் உனக்கு எழுதாமலிருக்க மனம் வரவில்லை.



திருவிளையாடற் சித்திரங்கள், மதுரை.

சிங்களம், யவத்தீவு, மாலத்தீவு முதலிய தீவுகளெல்லாம் தண்டமிழ் நாட்டின் எதிலுடைப் பாகங்களாக நிற்க, குமரியாறு கொந்தளித்தோட, தமிழ் மணம் எங்கணும் தென்றலில் நறுமலர் போல் பரவிவர, நாலாயிரத்தி நானூற்று நாற்பத்தொன்பது புலவர்கள் ஒவ்வொருவரும் தீந்தமிழ் நறவ மாந்தித் தமிழ்க் கடலை,

அலை ஆழிக் கதிர்த் திங்கள்
உதயத்தில் கலித்து ஓங்கும்

மற்றோர் அலையாழி யெனக் கொந்தளித்தெழும்படி பரவிட, தமிழ் மக்கள் பொருளாலும் புகழாலும், அறத்தாலும் மறத்தாலும், அன்பாலும் இன்பாலும் மண்ணுலகில் வாழும் தேவர் போல வாழ்ந்து வந்தனர். எல்லையற்ற வெறுக்கை, எல்லையற்ற ஆனந்தம், எல்லையற்ற புகழ்! தமிழ் நாட்டிலும் வலியமேதோர் நாடிருந்ததோ! தமிழ் மன்னரினும் கொற்றமுடை மன்னரிருந்தனரோ? சிவபெருமானும் குமாரக் கடவுளும் தந்த தமி





மதுரைக் கோவில் கோபுரங்கள்

ழிலும் தமிழிய மொழியு மிருந்ததோ? இல்லை இல்லை. அந்த நிரதிசயமான ஆனந்தக் காட்சியை என் மனக் கண்ணில் காண எனது தலை கிறு கிறுக்கது, கண் கம்பித்து நின்றுவிட்டது, மனம் சுஷுப்தியில் வீழ்ந்து அவ் ஆனந்தத்தின் ததாகாரத்தையே பெற்றுவிட்டது.

இரண்டாவது காட்சி மெல்ல மெல்ல எழுந்தது. குமுறுகிறது பெருகிற்று. அதனோடு செடிகளெல்லாம் ஒரே தழற்பிழம்பாய் எரிகின்றன. ஏ பிரகிருதி தேவி! உன் குழந்தைகள் கதறுகிறார்களே, அலறுகிறார்களே, தவிக்கிறார்களே, மிகிறார்களே—உனக்கு இரக்கமில்லையா? குழந்தைகளை மார்போடு மார்பாய் அணைத்துக்கொண்டு பொந்துகளில் ஓடி ஒளிந்து தப்பமுயலும் பேதைத் தாயருக்கு இரங்கு! மணியையும் பொன்னையும் புறக்கணித்து அன்னை தந்தையரைக் கூடைகளில் வைத்துக் காவடிகளில் தூக்கி



வண்டியூர்த் தெப்பக்குளம், மதுரை.

இணைந்திருந்த நாற்பத் தொன்பது ஆறுகளும் கொதித்துக்கொண்டு சீறிக்கொண்டு எழுந்தன. பூமி குமுறிற்று, அதிர்ந்தது, புயலில் அகப்பட்ட தோணி போல ஆடிற்று. தன் கர்ப்பத்திலுள்ளே வைத்துக்கொண்டிருந்த அக்னிக் குழம்பை உமிழ்ந்தது. எங்கு பார்த்தாலும் கக்கிற்று. எரிகிறது, தீப்பட்டெரிகிறது, நாடு நகரங்களெல்லாம், மாடமாளிகைகளெல்லாம், காடு வரும் செல்வப் புதல்வர்களுக்கு இரங்கு! புது மணம் புரிந்துகொண்டு, ஒருவரை ஒருவர் பிரிய முடியாமல் தத்தளிக்கும் காதலர்க்கு இரங்கு! ஆனால் பிரகிருதியின் கோபத்துக்கு, உக்ரத்துக்கு, ஆவேசத்துக்கு எல்லையே இல்லை. மரம் செடிகளைக் காய்கிறாள்! மாடு கன்றுகளை இரக்கமின்றி எரிக்கிறாள்! குழந்தைகளையும் கிழவரையும், பண்டிதரையும் பாமரரையும், காதலரையும், காதலிகளையும் பாரபக்ஷமின்றி ஒரே சாம்பராக ஆக்கிவிட்டாள். எத்தனை பேர் தப்பினார்கள்? யார் தப்பினார்கள்? யாரே சொல்ல வல்லார்? ஆனால் அந்நாளையத் தமிழ் நாட்டின் துயரம் அவ்வளவோடு நிற்கவில்லை. கடல் பொங்கிவிட்டது! சண்டமாருதம் உலகத்தையே சூறையாடுகிறது. கடலின் அலைகள் பனை உயரம் கிளம்பி நாட்டினுள் கொந்தளித்துக்கொண்டு பாயத் துவக்கிவிட்டன. அக்னிபகவான் விட்டு வைத்த பாகத்தையெல்லாம் வருணன் அடித்துக்கொண்டு போய்விட்டான்! என்னே தமிழ் நாட்டின் துயரங்கள்!



மறுபடி ஓர் காட்சி. தமிழ்நாடு அளவில் சிறுத்துவிட்டது. ஆனால் சோமசுந்தரக் கடவுள் அதன் மீது அருள் சுரக்கத் துவக்கிவிட்டார். பழந் தமிழ்நாடு அழிந்தும் தமிழின் பெருமை வளர்ந்தது. அகத்தியர் இலக்கணம் செய்தார். தொல்காப்பியர் வெள்ளத்தில் எஞ்சி நின்ற நூல்களை யெல்லாம் ஆராய்ந்து, அகத்தியரிடம் தீரக் கற்று, வட நூல்களிலும் தேர்ந்து அகத்தியத்திற்கு வழிநூல் செய்தார் என்று மதியாப் புகழெய்தினார். ஔவையும் திருவள்ளுவரும், பரணரும் கபிலரும், திருத்தக்க தேவரும் இளங்கோவும், சாத்தனாரும் நக்கீரரும் இன்னோன்ன புலவரும் தமிழ்த் தேனை நம்மனோருக்குப் பெய்து வைத்துவிட்டார்கள். பாடிய கவிகளின் பெருமை இத் தகையதென்றால், பாடுவதற்கு எத்தனை வளம், எத்தனை வீரம், எத்தனைக் கொடை! பாரியும் நன்னனும் அதியமானும் இம் மதுரைச் சங்கத்தினரின் செய்யுள்களுக்குப் பாட்டுடைத் தலைவராக ஏற்பட்டவர்கள். இவர்கள் வீரத்தையும் கொடை மடத்தையும் உலகினுக்கே அணிகளாக மதிக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட மகா புருஷர்களின் பெயரை என்றும் பசுமையாக நிற்கும்படி செய்த மதுரைச் சங்கப் புலவர்களை நாம் ஏத்துவோம்.

கண்ணகியின் கற்புத் தீயினால் எரியுண்ட மதுரை என் கண்ணில் தோற்றிற்று. அதைச் சிலப்பதிகாரத்தை எனக்கே கற்பித்த உனக்கோ நான் வர்ணித்துச் சொல்லுவது!

இன்னொரு காட்சி. சமணரின் கூட்டம். வர்த்தமான மகா வீரனுடைய மகா உன்னதமான கொள்கைகளெல்லாம் போய், சமணரது வெறும் பொருளற்ற மந்திர தந்திரங்களில் மூழ்கிப் போயிருந்தது. கூன் பாண்டியன் வைதிகக் கொள்கையினரை யெல்லாம் வெறுக்கிறான், தண்டிக்கிறான். சைவர்கள் சிவபெருமானை நோக்கிக் கதறுகிறார்கள். கடைசியில் கதறுவதற்குக்கூட மனிதரில்லை. குலச்சிறை நாயனாரும் மங்கையர்க்கரசியுமே எஞ்சி நின்றனர். மங்கையர்க்கரசி தன் கணவனுக்குக் கடவுளின் திருவருள் வரவேண்டுமென்று பிரார்த்தித்த வண்ணமாக இருக்கிறாள். சைவ வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து வந்த மந்திரி குலச்சிறையின் மனமும், அரசி மங்கையர்க்கரசியின் ஆத்மாவும் ஆத்மியாத்ம உலகில் கலந்து மதுரை மாநகரிலும் பாண்டிய நாட்டிலும் சைவத்தை மறுபடியும் பரவச் செய்ய வழி என்ன என்று இடைவிடாது ஆய்ந்து தவம் புரிகின்றன. இத் தவம் பாண்டியன் உடலை வெதுப்பத் துவக்கிவிட்டது. ஜீவவேகம் அற்றுப் போய்விட்ட சமணரின் மந்திரங்கள் பலிக்கவில்லை. பாண்டியன் கதறிய வண்ணமாக இருக்கிறான். திவ்விய மங்கள சொரூபனாக ஓர் பாலன் வருகிறானே இவன் யார்? ஆகா! சிவனடியார்களிற் சிறந்த சம்பந்த மூர்த்தியன்றோ சிஷ்யகோடிகளோடு வந்து மதுரையின் வீதிகளைப் புனிதப்படுத்துகிறார். அவரை அழைத்து உடலைப் பார்க்கச் சொல்லலாமா என்று மங்கையர்க்கரசி தன் கணவனை மன்னவனைக் கேட்கிறாள். "யாரேனும் வருக! காலகூடவிஷம் போல எரிக்கும் என் காய்ச்சல் எவ்வாறேனுந் தணிய வேண்டுமே!" என்று சொல்



திருமலை நாயகன் மஹால்



னுகிறான். வருகிறார் சம்பந்தர். தொழுகிறார் சோமசுந்தரத்தை. சமணரும் தானும் பரீக்ஷையாக அரசனுடைய உடலின் இரு பாதிகளையும் தனித்தனியே சொஸ்தப்படுத்தச் சங்கற்பித்தெடுத்துக்கொள்கின்றனர். திருநீற்றுப் பதிகத்தின் கோஷம் மதுரை அரண்மனையில் மறுபடியும் கேட்கிறது. சம்பந்தர் பிணிதீர்க்க எடுத்துக்கொண்ட பாகம் பிணி தீர்ந்துவிட்டது. ஆனால் மற்றையது முன்னிலும் அதிகமாகக் காய்கின்றது. சமணர் தோற்றனர். அரசனும் சம்பந்த மூர்த்தியை வேண்டிக்கொண்டு முற்றிலும் குணமடைந்துவிட்டான். பிறகு வாது நடக்கின்றது. பக்தியின் சக்தி நிரம்பிய சம்பந்தருக்கெதிரே மாற்றாருடைய வாதமும் மந்திரமும் பலிக்கவில்லை. தம் பிரதிக்ஞைப்படிச் சமணகுரவர் கழுவேறுகின்றனர். ஐயோ, சமணரேனும், தமிழரின் இரத்தம் தமிழரால் சிந்தப்படுகிறது! பரிதாபம், பரிதாபம். இதன் மூலக் கருத்தை யாரே அறிந்து சொல்லுவர்? மரத்தின் பட்டுப்போன கிளைகள் மரத்தினுக்குச் சேதம் வராமலிருப்பதற்காக வெட்டுப்பட்டுப் போயின என்றுதான் சொல்லலாம். மற்றைய சமணரெல்லாம் சைவராயினர். சிவமந்திரம், சிவபூஜை, வேதகோஷம் மறுபடியும் பகிரங்கமாக மதுரை நாட்டில் கேட்கத் தலைப்பட்டது. வைகை பொங்கி ஒரு கூடை மண்ணில் அடங்கிவிட்டது. நரி பரியாகி, பரியும் நரியாகின. மதுரை யமைச்சர் மணிவாசகப் பெருமான் பக்தி வெள்ளத்தில் மூழ்கித் திருக்கோவையாரையும் திருவாசகத்தையும் பரவசமாகிப் பாடி, நம்மனோர்க்கு அருளிவிட்டார். இன்னும், வண்ணானும் வேடனும், கள்ளனும் மறவனும், அரசனும் பிரஜையும், கற்றோனும் மற்றோனும் சிவபக்தி நிறைந்து சிவசாக்ஷாத்காரத்தைப் பெற்று மதுரை மாநகரையும் தமிழ்நாடனைத்தையும் பூவுலகக் கைலாசமாக்கிவிட்டனர்.

ஆனால் ஏறின அலை இறங்கித் தீரவேண்டும் என்று பிரகிருதி ஓர் சட்டம் ஏற்படுத்திவைத்திருக்கிறாள். இத்தகைய தர்மவேகமும் ஆத்ம சக்தியும் கூடக் குன்றத் துவக்கிவிட்டது. தமிழர் கடவுள் பேரைச் சொன்னார்கள். கடவுளை நினைப்பதை மறந்தனர். அறத்தைப்பற்றிப் பாடினர், அறத்தினைச் செய்யப் பின் வாங்கினர். வந்தது அழிவு. அராபிய வியாபாரிகள் பாண்டிய சிங்காதனத்தில் உட்காருகிறார்கள்! என்ன அக்கிரமம்! ஆனால் தமிழ்த்தாய் அதி சீக்கிரம் விழித்துக் கொண்டனள். அவ் இராஜ்யம் உடைந்து போயிற்று. ஆனால், ஆனால், பாண்டியரின் சக்தியும் அதனோடு அழிந்து போயிற்று. ராமாயண காலம் முதல் ஓங்கித் தழைத்து வளர்ந்து வந்த பாண்டிய வமிசமாகிய ஆலமரம் சாய்ந்துவிட்டது.

அப்பொழுதும் மதுரையின் மாண்பு குன்றவில்லை. தமிழ் நாட்டைக் காக்க நாயகர் தோன்றினர். சிதறிப்போன தமிழ்ச் சக்தியைத் தமிழ்த்தாயினின்று பிரிந்துபோயிருந்த தெலுங்கு நாட்டவர் ஒன்றுபடுத்தினர். நாயகர் வமிசத்தவர் ஆளுகையின் சின்னங்கள் தாம் இன்று நம் கீழ் நிலையை நமக்குக் குத்திக் காட்டிக் கொண்டு, நம்மை என்று விழிக்கப் போகிறீர்கள் என்று இடைவிடாது கேள்வி கேட்டுக் கொண்டு நிற்கின்றன. ஆலயத்தில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள், சிற்றுளி வேலைகள் நிரம்பிய தூண்கள், திருமலைநாயகன் மஹாலின் கம்பீரமான அமைப்பும் தோற்றமும் ஆகிய இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு, தமிழ்நாட்டை மறுபடியும் அவளுடைய உச்சமான நிலைக்கு என்றைக்குக் கொண்டு வரப்போகிறோம் என்கிற ஏக்கமும், பயப்படாதே, கொண்டுவந்து விடமுடியும் என்கிற தைரியமும் ஒருங்கே உண்டாயின. ஏக்கம் இன்றிருக்கும், நாளை போய்விடும். ஆனால் இவைகளின் நினைவு என் மனதில் நின்று என் தைரியத்தை வளர்த்து எனக்கு ஆற்றலையும் கொடுக்கும் என்று நம்பியுள்ளேன்.

உனது அன்புள்ள,

வே. ராஜகோபாலன்.

# ஸ்ரீ ஸாவர்க்காரின் கடிதங்கள்

(இரண்டாவது)

சொந்தக் கணவன் ஸ்ரீ கணேசபண்ட் ஆயுள் பரியந்தம் தீவாந்தர சிட்சை பெற்று நீங்கிவிட்டார். சொந்தப் பிள்ளையினும் பன்மடங்கு பிரியத்துடன் வளர்த்து வந்த இளைய மைத்துனனாகிய பாலு கொடிய குற்றங்கள் சுமத்தப்பட்டுச் சிறை செய்யப்பட்டுக் கிடக்கிறான். இந்நிலையில் ஸ்ரீ வாஹினீ தேவியின் கண் முன்னர்க் கனத்த காரிருளே துன்னிக் கிடந்தது. எனினும் இதனூடும் ஓர் சுடரொளிக் கிரணம் மெல்ல எட்டிப் பார்த்தது. வெகு தொலையிலே, சீமையிலே உள்ள தன் மைத்துனர் ஸ்ரீ விநாயக ராவ் பாரிஸ்டர் பரீட்சையில் தேறிவிட்டார். உடனே அவர் வந்து குடும்ப பாரத்தை ஏற்றுக்கொண்டு விடுவார் என ஸ்ரீ வாஹினீ தேவி நம்பி இருந்தாள். ஆனால் ஸ்ரீ விநாயக ராவ் சீமையிலே சிறை பிடிக்கப்பட்டுவிட்டார். அவர் மீது சாட்டிய குற்றம் ஆயுதங்கொண்டு அரசாங்கத்துடன் போர் செய்தார் என்பதாகும். இதற்கு மரண தண்டனை விதிக்கலாம். பலர் மரணதண்டனையேதான் விதிக்கப்படும் என்று அக் காலத்தில் (கலி ௫௦௧௨-ல்) எதிர்பார்த்தனர். இந்நிலையில் தான் தழுவிய ஆதர்சம் எத்துணைப் பெருமையிலங்குவது — விழுப்பஞ்சான்றது — மனோகரமானது என்பதை ஸாவர்க்கார் மிகவும் உருக்கமாகத் தன் அண்ணியாருக்குப் பாக்களால் அறிவுறுத்துகிறார். அதோடு தனக்கு நேர்ந்த இன்னலைத் தெரிவிக்கும்படியான கஷ்டமான கடமையையும் ஆற்றிக்கொள்கிறார். அப்பொழுது இருந்த நிலைமையில் அண்ணியை இம் மண்ணுலகில் சந்திப்பது அசாத்தியம் என்று நம்பப்பட்டதால் இந் நிருபத்திற்கு 'மிருத்யு பத்ரம்' அல்லது மரண சாஸனம் எனப் பெயரிட்டனர்.

## எனது மரண சாஸனம்

வைகாசி மாதம் வஸந்த ராஜனுடைய ஆட்சி பூமியின்கண் கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. எங்குப் பார்த்தாலும் பூக்களின் கோஷம். தூய நீல வானிடைச் சந்திரன் சுகுமாரனாய் மந்தஹாஸம் செய்தான். அவனிடமிருந்து பெருகிய அழகு வெள்ளத்தின் அலைகள் மோத, பூமி மிதந்து கொண்டிருந்தது. நம்முடைய வீட்டின் முற்றத்தில் பாலு ஒரு ஜாதிச் செடியை நட்டு அன்போடு நாடோறும் நீர் வார்த்து வளர்த்து வந்தான். இந்த விழாவில் அதுவும் தன் திறையை ஏந்தி நின்றது. கொத்துக்கொத்தாகப் பூத்திருந்த அதன் மலர்கள் நாலா பக்கங்களிலும் நறுமணங் கமழ வீசின.

கோடை விடுமுறையும் அப்பொழுது சேர்ந்து கொண்டது. ஆருயிர் நண்பர்கள் அனைவரும் நமது வீட்டில் வந்து குழுமி இருந்தனர்—மாலையில் வீடு அடையும் பக்ஷிகளைப் போல. இன்ப வெள்ளம் கரை புரண்டோடியது. இளமை புதிதாய்ப் பூத்த அத் தருண மண்டலம் மகா காந்தியுடன் விளங்கிற்று. அதைச் சுற்றிலும் ஓர் பிரபா சக்கரம் உன்னத ஆதர்சங்கள், தூய்மை, வீரம் என்ற கதிர்களை வீசிச் சுழன்றது. இதற்கு மாலை சூட விழைபவளாய்ப் புகழணங்கு கையில் ஆரமுடன் பக்கத்தே நின்றாள்.

இந்த இள மலர்களில் "அன்பெனும் தேன் ஊறித் ததும்பி"ப் பொங்கிற்று. இப் பைம் மலர்கள் வீசிய மணம் விழுமிய பேறுகளாகவும் உன்னத லட்சியங்களாகவும் ஆகாய மெங்கும் கமழ்ந்தது. அங்கே குழைந்து, துவண்டு இழை



யும் இளங்கொடிகள் திண்ணென வானளாவி நின்ற குலமரங்களைப்பற்றி ஏறித் தழைத்து நின்றன. இவ் வினிய காட்சியைக்கண்டு மகிழ்ந்த ஊர் ஜனங்கள் இதற்குத் 'தர்மசாலை' என்றுபேர்வைத்தனர்.

அம்மையே! சமையல் செய்வதில் உனக்கு நிகர் நீயேதான்; வேறு யாருமிலர்: நீ பரிமாறவும் புகுந்து விட்டால், உண்டி அமுதம் பொழிவதாகும். பட்டப் பகற்போலே சந்திரன் நிலா விரித்தான். இழை நகை பூத்த முகத்துடன் எங்கட்கு நீ அமுதூட்டி நின்றாய். என்னே இன்பம்! என்னே ஆனந்தம்! முற்றத்திலே அமர்ந்த நண்பர்களான நாங்கள் இதில் மெய்ம் மறந்து போவோம். அல்லது இடை இடையே பல விஷயங்களைப் பற்றி உக்கிரமாக வாதிப்போம்.

ஸ்ரீ ராமசந்திரனுடைய வனவாச வரலாறு சுவை சொட்டும். வெளியே இத்தாலியா என்ற ஓர் நாடு தன் பகை தீர்த்து விடுதலை பெற்று எழுந்த சரிதம் கேட்க வீரம் பொங்கும். தானாஜியின் போர்த் திறம், பாஜி, பாவா, நானா இவர்கள் காட்டிய அசகாய சூரத்தனம், சித்தூரின் புல்லரிக்கும் விருத்தாந்தம், இவைகளைக் கேட்டு நெஞ்சு விம்முவோம்.

நமது அன்னை நமது ஆசைக்கும் அன்புக்கும் உறைவிடமான நம் பெருந்தாய் இன்று இருக்கும் நிலை என்னே! அன்னாள் நிலையினிழிந்து அடிமை வாய்ப்பட்டு இடிப்பொடிந்து எலும்பெல்லாம் நொறுங்கி நைந்து நைந்து தேய்ந்து மாய்கிறாள் என்று நினைக்கக் கண்ணீர் மல்கும். இதற்குக் காரணங்களை ஆராயும் பொழுது சுவாஸம் பந்தமாகிவிடும். துன்பப்பட்டுத் துன்பட்டு மடியும் இவளை விடுவிக்கத் தக்க உபாயங்கள் யாவை என்று விசாரிக்க உள்ளம் கொதித்தெழும். முடிவில் அன்னையை விடுவித்தே தீருவோம் என்று இள இரத்தம் துடிக்கும் நாங்கள் அனைவரும் பிரதிக்ஞை செய்தோம்.

மனோக்ஞமான அந்தக் காலம், அன்பு கனிய இன்பம் திளைக்கும். அந்தச் சங்கம், அந்த அமுதமயமான நிலவு, ரமணீயமான அந்த இரவு, புதுமை சேர்ந்த அந்தக் கதைகள் இதையெல்லாம் சற்று நினைத்துப் பாருங்கள். தெய்விகம் பொலியும் அவ்வுண்மைத் தாயின் விடுதலையின் பொருட்டுச் செய்த அந்த உக்கிரமான சபதம், நிலைபேராத அந்த உறுதி, இதையும் சிந்தியுங்கள்.

அண்ணியே! அன்று நடந்த தெல்லாம் நினைவில் இருக்கிறதோ? ஆர்வம் மிகுந்த அவ் அன்பர்கள் ஒருவருக்கொருவர் செய்து கொடுத்த ஆணைகள்; அனைவரும் அவனுடைய கொடியை வந்திப் போர்க்கோலம் கொண்டு நின்றது: 'பாஜி பிரபு போல நிற்போம்' என்று இளைஞர்கள் செய்த கோஷம்; 'சித்தூர் சிறுமிகள் நாங்கள்!' என்ற பெண்களின் பெருமிதம்;—இதெல்லாம் மறவாமல் இருக்கின்றனவோ?

அந்த விரதத்தை நாங்கள் குருட்டுத்தனமாக எடுத்துக்கொண்டுவிட்டோமோ? ஒருகாலும் இல்லை. இதிகாசத்தின் ஸம்பூர்ண பிரகாசத்தில் நின்று, கண்ணைத் திறந்து கொண்டுதான் எடுத்தோம். சாதக பாதகங்களைத் தீர விசாரித்து "மாஜினி"யின் இயல்பையும் அறிவையும் நன்கு தெளிந்த பிறகே அவ் விரதம் பூண்டோம். உயிரில் ஆசை வைத்தவன் அதனை இழப்பான் என்ற உண்மையினைத் தேர்ந்த இத் தெய்விகத் தாகம் கொண்டோம். அதற்கே எங்கள் உயிரை அர்ப்பணம் செய்தோம்.

தோழர்களுடனே அன்று நாங்கள் செய்த பிரதிக்ஞையை, எடுத்த விரதத்தை, நினைவுறுத்திக் கொள்ளுங்கள். இன்று நிலைமை எப்படி இருக்கிறது என்று அறிந்து ஒப்பு நோக்குங்கள்.

தகைந்து இருநாலண்டுகள் இன்னும் சென்றில. அதற்குள் காரியசித்தி இவ்வளவாகி இருக்கிறது. உண்மையில் உளம் பூரிக்கவில்லையா?

குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் நம் தாய்நாடு முழுவதும் கனன்று சிங்கநாதத்துடன் சீறி எழுந்துவிட்டது. அதன் மேல் இருந்த பிச்சைக் கோலம் கிழிந்து தூள் தூளாய்ப் பறந்து போயிற்று. வீர வடிவந் தாங்கிக் கையில் வாள் கொண்டு எம் அன்னை இன்று தோன்றி விட்டாள். ஸ்ரீ ராமசந்திரன் தன் கொடியை உயர்த்திவிட்டான். அதைத் தாங்கி நிற்க அடியார்கள் ஆயிரம் ஆயிரமாக முன் வந்து அணி அணியாய் அமைந்து நிற்கின்றனர். ஓமகுண்டத்திலே அக்கினி ஜாஜ்வல்யமாக எரிகின்றது.

இவ் வேள்வியில் சித்தி பெற்றே தீருவது என்று உக்கிரமாகத் தீட்சை செய்து கொண்டவ! பக்த ஜனங்காள்! உங்கள் உறுதியைக் காட்டவேண்டிய சோதனைக்காலம் வந்துவிட்டது. உலகனைத்தும் மங்களம் பெற வேண்டி இதோ யக்ஞம் ஆரம்பமாகிவிட்டது. கொழுந்து விட்டுக் கடும் பசியுடன் எரிகின்றது தீ. அவி பெய்தாக வேண்டும். அதற்குச் சித்தமாயுள்ளவர்கள் முன் வரலாம்.

இவ்வாறு, ஸ்ரீ ரகூத்தமன் அழைத்து நின்ருன். உன் தேவ காரியத்துக்கு, பிரபு! எங்கள் குடும்பம் தயாராக ஒதுங்கி நிற்கிறது. நாக்கை நீட்டி கர்ஜித் தெழும் இவ் வெரியில் எங்களை முதலில் ஆகுதி செய். இந்தக் கௌரவம் எங்களுக்கே உரியதாகட்டும் என்று நாம் முதலில் முன் வந்தோம்.

உடல் பெற்றதன் பயன் அறன் ஆற்றுவதற்கேயாகும். எனவே அறவினைக்கே அதனை இரையாக்குவோம். வேறு, மனைவி மக்கள் இன்பத்தைக் கனவிலும் கருதோம். எத்துணைத் துன்பம் வந்தாலும், என்ன இடர்ப்பட்டு வருந்தினும் அந்தி உறுதி யிழந்துவிட மாட்டோம். பற்றற்று வினை முடிக்கும் யோகநெறி பற்றி, வழாது வாழ்ந்து வருவோம் எனப் புகன்ருேம்.

அன்பர்களுடனே அன்று நாங்கள் செய்த பிரதிக்ஞை என்னுயிற்று? வெறும் விளையாட்டாக முடிந்ததோ? இல்லை: இல்லை. ஸத்யமாக அது இன்று நிறைவேறியதை நீயே உன் கண்ணுக் கண்டுகொள்ளலாம். நமது அன்பிற்கு உகந்த அன்னை விடுதலை பெறவேண்டி இதோ வேள்வி துவக்கப்பட்டு விட்டது. தீயும் வளர்ந்தாயிற்று. அது சுடர்விட்டுச் சீறி எழுகின்றது. அதில் நாம் நம்முடைய தன்னலம் முழுவதையும் போட்டு எரித்துச் சாம்பராக்கி விட்டோம். நாம் சொன்ன சொல் காப்பாற்றப்பட்டது. கிருதார்த்தரானோம்.

ஹே மாதிரு பூமி! எம் உள்ளத்தை உனக்குக் கோயில் செய்தோம். எமது பேச்சு, எமது நாவன்மை முழுவதையும் உனக்கே சமர்ப்பணம் செய்தோம். நவ நவமாய் என் இருதயத்தில் ஸ்புரிக்கும் கன்னல் போன்ற இன் கவி மலர்களை உனக்கே சூட்டினேன். உன் விஷயமல்லாது பிறிதோர் விஷயத்திற்கு நான் எழுதுகோலைத் தொட்டறியேன், அம்மே!

என் னருந் தாயே! உனக்குத் தொண்டு செய்வது தனித்தனியே தேவர் அனைவருக்கும் தொண்டாற்றியதற்கு ஒப்பாம். உன் பணி தெய்விகம் பொருந்துவது. உன் பணி செய்யும் யான் ஸ்ரீ ராமசேவையே செய்கிறேன் என்று அறிவேன். உன்னுடைய பலிபீடத்திலே அன்பு மிக்க நேயர்களின் சேர்க்கை இன்பத்தை நீத்தேன். உன் வேள்வித்தீயிலே எனது உடல், இளமை, உலகவின்பங்கள் அனைத்தையும் எரித்துச் சாம்பராக்கினேன்.



வீடு வாசல், பொருள், புகழ் எல்லாம் உனக்கே தத்தம் செய்தேன். துணையற்று, தனியே கனல் வாதையில் வெந்து போம் என் அண்ணியையும், அம்மையே! உன் பொருட்டுப்பலி கொடுக்கின்றேன். அன்றலர்ந்த மலர்கள் போன்ற என் இளங் குழந்தைகள், இன்னுயிர்க்காதலி, இவர்களையும் உன் பொருட்டுத் துறக்கின்றேன். உன் பலி பீடத்திலே, அஞ்சா நெஞ்சன், மகா தீரன் எனினும் சேயினும் கனிந்த உள்ளத்தோன், கருணைக் கடலோன், என் அண்ணனை பலி கொடுத்தேன்.

சின்னஞ் சிறியன்: அன்பே உருவாயவன்: எனது பிரியம் மிக்க தம்பி, பாலன் இன்று உனக்குப் பலியாகின்றான். யூபஸ்தம்பத்திலே இதோ என்னையும் கட்டியாகிவிட்டது. அம்மையே! இவர்களே யன்றி இன்னும் ஏழு பெயர்கள் இருந்தாலும் அவ் வனைவரையும் உனக்குப் பலி கொடுத்திடுவேன்.

எமது அன்னையின் சந்தானங்கள் முப்பது கோடி. இவருள் தேசபக்தி பழுத்துத் தேசப் பணியிலே உயிர் நீக்கும் சீரியர் தன்யராவர்: நித்தியவாழ்வு பெற்று, நித்திய சோபையுடன் திகழ்பவராவர். தேசபக்தியால் எரிக்கப்பட்டு நிர்வம்சமாகப் போய்விட்டால் என்ன? நமது குடும்பம் என்றென்றும் வாழ்வதாகும்: உலகத்தில் தழைக்கும் வம்சங்கள் அத்தனையும் நமது வம்சமாகவே பொலிவுறும்.

நமது குடும்பம் வாழ்கின்றது: அல்லது, வாழாமலே தான் போகின்றது. இதுவோ எமக்குக் கவலை? எமது கடனை யாம் ஆற்றினோம். இவ்வளவில், எமது வாழ்க்கை சம்பூரணம் பெற்றது. இனி யாம் வேண்டுவது யாது மிலது. எமது மெய்யன்னை விடுதலை பெற்றெழ வேண்டி வேள்வி வளர்த்தார்கள். அதில் கனலும் சீறி நாக்கை நீட்டி மூண்டெரிந்தது. அதில் நம் தன்னலம் முழுவதையும் அறுத்துப் பெய்து சாம்பராக்கினோம். கிருதார்த்தரானோம். இதுவே சாலும்-எனது அருமந்த மதினீ! இவ்வாறாக விசாரித்து உண்மை தேர்க. தேர்ந்து, நாம் எடுத்த இவ் விரதத்தினை வழாது காத்து வாருங்கள். அநேகாடு தெய்விகம் இலங்கும் இந்த நமது குல தர்மத்தை விடாது பற்றி ஓம்பி வரக்கடவீர். பனிமலையின் உச்சியில் தனியே தவ மியற்றும் ஸ்ரீ பார்வதிதேவி, கர்ஜ்ஜித்தெழும் தழலினைப் புன்னகை பூத்து நேயமுடன் தழுவிய ரஜபுத்திர கோமளங்கள், இவர்கள் உமது வாழ்க்கையின் விளக்கொளிகளா யிருப்பாராக!

அம்மே! வீரனுக்கு மாலைசூடிய வீரபத்தினி நீ! உன் வீர மரபுக்கு இசைந்து உனது வாழ்க்கை மிளிர்வதாக! வீரமும் தீரமும் ததும்பிப் பொங்கும் கடல் அனைய உன் கணவன் வாழ்வைப் போன்று உன் வாழ்வும் செல்வதாக! பாரத பூமியிலே அபலைகளும் பலம் படைத்தவர்கள்: தேஜஸு நிரம்பியவர்கள்: முன்னாளில்தான் அங்ஙனமிருந்தனர் என்பதில்லை; இற்றை நாளிலும் அவர்களுடைய பலமும் தேஜஸும் மங்கிவிடவில்லை: தேய்ந்து போய் விடவில்லை: என்ற இவ்வுண்மையை உனது வாழ்வைக் கண்டு ஜனங்கள் தேர்ந்து கொள்ளும்படி இருக்கவேண்டும்.

தனையனிலும் மிக்க பிரேமையுடன், தேவி! உன் பொன்னடிக் கமலங்களில் தமியன் பக்தி பூர்வகமாய் சமர்ப்பிக்கும் செய்தி ஈதாகும். இதுவே தான் என் கண்ணனைய இன்னுயிர்த் தோழிக்கு நான் அன்புடன் தழுவி அனுப்பும் செய்தியுமாம்.

இந்த விரதத்தை நாங்கள் கண்மூடித் தனமாக தரிக்கவில்லை. உலக சரிதத்தின் சம்பூர்ண பிரகாசத்தில் நின்று, நியாய நியாயங்களைத் தீர விசாரித்து, மனுஷ்ய தர்மத்தை நன்கு ஓர்ந்து தான் இதனைத்தாங்கி நின்றோம். இந்தத் தெய்விகதாகம் கொண்டோர் பற்றும் நெறி முதுகாட்டினூடே செல்லும் என்பதைச் செவ்வையாய் அறிவோம். அறிந்தே இந் நெறி பற்றி அவன் பணியில் ஈடுபட்டோம.

# ஆலோகன அவலோகனம்

## ஹிந்து மகாசபை

தேசிய வாரத்தில் நிகழ்ந்த சம்பவங்களில் காங்கிரெஸ் சபையின் நிகழ்ச்சிகள்தாம் எல்லோருடைய கவனத்தையும் ஆகருஷிக்கின்றன. மற்றவை யெல்லாம் பகலொளியில் சந்திரனும் நக்ஷத்திரங்களும் போல் மறைந்தோ மங்கியோதான் நிற்கின்றன. ஆனால் சில வேளைகளில் இம் மற்றவை காங்கிரெஸின் நடவடிக்கைகளைவிடக் கூட முக்கியமானவையாக இருக்கின்றன. இவற்றுள் ஹிந்து மகா சபையின் நிகழ்ச்சிகள் இவ் வருஷத்தில் பிரதானமானவையாகக் கருதப்பட வேண்டும். ராஜீய விஷயங்களை மாத்திரம் கவனித்து வந்ததில் ஹிந்துக்கள் தங்கள் ஜாதீய ஐக்கியத்தையும் கட்டுப்பாட்டையும் பலத்தையும் புறக்கணிக்கத் துவக்கிவிட்டார்கள். ஹிந்துஸ்தானம் கீழே விழுந்ததற்குக் காரணமே இடைக்காலத்தில் ஹிந்து ஜாதி தன் வன்மையை இழந்துவிட்டதாகும். மறுபடியும் ஹிந்துஸ்தானம் தலையெடுக்க வேண்டுமானால் ஹிந்துஸ்தானத்தில் வசிக்கும் பெரும் பகுதியினரும், உலகத்தின் ஆத்தியாத்மதனத்தில் பெரும் பாகத்தைச் சேகரித்துத் தந்து அதைக் கையாடும் ஆற்றலை இன்னும் இழக்காதவரும், வீரத்திலும் தீரத்திலும், நேர்மையிலும் சீர்மையிலும் ஓர் காலத்தில் தமக்கு இணை யாரும் இல்லை யென்று வாழ்ந்தவரும் ஆன ஹிந்துக்கள் தங்களுக்குள் வளர்ந்திருக்கும் சீர்கேடுகளைத் தொலைத்துப் புத்துயிர் பெற்றுத் திகழ வேண்டும். சென்ற சில வருஷங்களாக அமைக்கப்பட்டுக் கூடிவரும் ஹிந்து சபையானது இந்த முயர்சியின் அவசியத்தை இந்த மார்கழி மாதக் கூட்டத்தில் உணர ஆரம்பித்தது நமக்கெல்லாம் சொல்லொணாத உள்ளக் களிப்பை தந்திருக்கிறது.

## நேபாலத்தின் கௌரவம்

இப்பொழுது ஹிந்துக்கள் தங்கள்ஐக்கியத்தைப்பற்றி உணர்ந்தும் யோசித்தும் வந்திராமற்போனால் நேபாலம் பெற்றுள்ள புதிய ஜயத்தைப்பற்றி யாரும் சிந்தித்துக்கூட இரார்கள். நேபாலம் சுதந்திரமான ராஜ்ஜியம் என்று சொல்லப்பட்டு வந்தாலும் இதுவரையில் பிரித்திஷ் இந்திய அரசாங்கம் அதைப் பிரான்ஸையும் பெல்ஜியத்தையும், இத்தாலியாவையும் ஸ்வித்ஸர்லாந்தையும், என் ஆப்கானிஸ்தானத்தை நடத்துவது போலக்கூட நடத்தவில்லை. தனக்கு உட்பட்ட சிற்றரசர்களை நடத்துவதைப் போல நடத்தாவிட்டாலும், பெயருக்கு மாத்திரம் சுவதந்திரநாடு என்று குறிப்பிட்டுக்கொண்டு, நடத்துவது தனக்குப்பவ்யப்பட்ட ஓர்நாட்டை நடத்துவது போலவே நடத்தி வந்தது. எவ்வளவுதான் நவீன நாகரீக உணர்ச்சி நேபால ராஜாங்கத்துக்கு இல்லையானாலும், தான் குறைவாக நடத்தப்படுகிறது அதற்குத் தெரியாமற் போக வில்லை. ஆயினும் அது பிரித்திஷ் அரசாங்கத்துக்குத் தம்முள் உள்ள சம்பந்தத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று தினே தினே வற்புறுத்தி வந்தது. கடைசியில் நேபால அரசாங்கம் கூறுவது முறைதான் என்று ஒப்புக்கொண்டு பிரித்திஷ் ஏகாதிபத்தியமும் இந்திய அரசாங்கமும் பழைய ஒப்பந்தத்தைப் புதுப்பித்து நேபால அரசாங்கத்துக்கு உரிமையாக உள்ள கௌரவங்களிற் பெரும்பாலனவற்றைக் கொடுத்திருக்கிறது. இதைப் பற்றி ஹிந்துசபை தனது சந்தோஷத்தைத் தீர்மானரூபமாகத் தெரிவித்தது. ஹிந்து தர்மத்தை ரக்ஷிப்ப தென்று கங்கணம் கட்டிக்கொண்டு, பசு வதம் நேராமல் காக்கிறவர்கள் என்ற பொருள் கொண்டே கூர்க்கர் (கோரக்ஷகர்) என்ற திருப் பெயரைப் பூண்ட ஹிந்துக்களின் ராஜ்ஜியம் முன்னிலும் சற்று அதிகமான கௌரவத்தைப் பெற்றது என்றறிய ஒவ்வொரு ஹிந்துவின் உள்ளமும் களிப்படைய வேண்டும். தமிழ்நாட்டிலும் அவ் உள்ளக் களிப்பு பரவுக.

## ஹிந்து சங்கடன இயக்கம்

ஹிந்து சங்கடன இயக்கத்தைத் தென்னாட்டில் பரப்ப வென்று லாலா லஜபதி ராய் சென்னை முதலிய முக்கியமான இடங்களுக்குச் சென்ற மாதம் வந்திருந்தார். ஹிந்து சங்கடனம் என்பது யாரையும் தாக்குகின்ற இயக்கமன்று. மற்று, ஹிந்து ஜாதி தன்னைத் தானே காத்துக்கொள்ளச் செய்யும் முயற்சியாகும். தனக்குள்ளே பலமில்லாதவனை உலகம் எளனம் செய்யும். அதேமாதிரி பலமில்லாத ஓர் ஜாதியையும் மற்ற ஜாதியர் அவமதிப்பது இயற்கை. இந்த இயற்கை விதியினின்று தப்பவேண்டுமானால் ஹிந்து ஜாதி தன் நிலைமையைச் சோதித்துப் பார்த்துக்கொண்டு, தன் அமைப்பிலும் மற்றெல்லாவற்றிலும் அத்தியாவசியமான மாறுதல்களைச் செய்துகொண்டு புதிய வாழ்க்கை வாழ வேண்டும். இதுதான் ஹிந்து சங்கடனத் தலைவர்களின் நோக்கம். சீட்டுகளுக்காகவும் உத்தியோகங்களுக்காகவும் தம்முடன் வாழும் முகமதியர் முதலியோருடன் நாம் போராடக் கூடாது என்பது எமது அபிப்பிராயம். கலி ௫0௧௯-ல் (௧௯௧௭-ல்) ஜனத்தொகையில் ௧00-க்கு ௫௪ உள்ள பஞ்சாபு முஸல்மான்கள் சட்டசபை முதலிய பொது ஸ்தாபனங்களில் ௧00-க்கு ௫0- ஸ்தானங்கள்தான் பெற வேண்டும் என்றும்; ௧00-க்கு ௫௨ உள்ள வங்காள முஸல்மான்கள் ௧00-க்கு ௪0-ஸ்தானங்கள் பெறவேண்டும் என்றும் இவ் விரண்டு மாகாணங்களிலும் முஸல்மான்களின் முன்னேற்றக் குறைவுக்காக ஏற்படுத்திய இந்தக் குறைந்த விகிதத்துக்கு ஈடாக, ஜனத் தொகையில் ௧00-க்கு ௨0 விகிதம் உள்ள பம்பாய் முஸல்மான்கள் ௧00-க்கு ௩௩ ஸ்தானங்கள் பெறவேண்டும் என்றும்; ௧00-க்கு ௧௪ உள்ள ஐக்கிய மாகாண முஸல்மான்கள் ௧00-க்கு ௩0 -ஸ்தானங்கள் பெற வேண்டும் என்றும் ௧00-க்கு ௭ தான் உள்ள மத்திய மாகாண முஸல்மான்களும் சென்னை முஸ்லீம்களும் ௧00-க்கு ௧௫ -ஸ்தானங்கள் பெறவேண்டும் என்றும் லக்னௌவில் நமது தலைவருக்குள் ஓர் ஒப்பந்தம் நடந்தது. இந்த விகிதத்தைத் தங்களுக்கு அநுகூலமாக மாற்றவேண்டும் என்று முஸல்மான்களும், தங்களுக்கு முஸல்மான்களுக்குக் கொடுப்பதுபோல ஜனத்தொகையின் விகிதத்துக்கு மேலான ஸ்தானங்கள் கிடைக்க வேண்டும் என்று சீக்கியரும் கேட்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இம் மாதிரி வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் ஜாதீய ஐக்கிய உணர்ச்சிக்குப் பெரிதும் ஹானியை விளைவிக்கக் கூடியது. எந்த ஜாதியினரையும் அந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்கிற ஹேதுவில் பிரதிநிதிகளாக நியமிப்பதோ, உத்தியோகங்களுக்கு நியமிப்பதோ தவறாகும். அவர்களுடைய சாமர்த்தியத்தையும் யோக்கியதையையும் பார்த்து, எந்த ஸ்தானத்துக்குத் தகுதியாக இருக்கிறார்களோ அந்த ஸ்தானத்துக்கு ஜாதி நினைவே இல்லாமல் நியமித்து வந்தால்தான் ஜாதி சமக்ரத்துக்கு நன்மை யுண்டாகும். ஆனால் இந்த உணர்ச்சி சிலருக்கு இல்லாமல் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தைப் பிடிவாதமாக அவர்கள் கேட்டால் ஜாதியின் நன்மையை நாடியவர்கள் அதற்கு உட்பட்டுப் போவதைத் தவிர வேறு வழியில்லை. காலத்தில் இம் முறை தவறு என்று கண்டுபிடித்துக் கொண்டு மற்ற நாடுகளில் உள்ளது போன்ற வழியைப் பின் பற்றுவார்கள் என்று நம்பிக்கை வைத்துக்கொண்டு அவர்களுக்கு இணங்கிக் கொடுத்துக்கொண்டு போவது தான் பெரும்பகுதியினருக்குக் கடனாகும். ஹிந்து மகா சபைத் தலைவர் இதை நன்கு கவனிப்பார்கள் என நம்புகிறோம்.

ஆனால் அதே மாதிரி, ஹிந்து ஜாதியானது தன்னைப் பலப்படுத்திக்கொள்ளுவதற்கு இதர வகுப்பினர் ஆக்ஷேபித்தல் முறையாகாது. ஒவ்வொரு தனி ஜாதியும் தன்னை வன்மையுள்ளதாக ஆக்கிக் கொண்டால் தான் ஜாதிமுற்றும் வன்மையுள்ளதாக ஆகும். ஒரு ஜாதி பலக்குறைவாக இருந்தால் அப் பலக் குறைவு ஜாதியனைத்துக்மே பலக்குறைவாக முடியும். ஆகையால் ஹிந்து சங்கடன இயக்கத்தை இதர ஜாதியினர் சற்றேனும் பொறாமையுடன் பார்க்கக் கூடாது.

## ஜாதிச் சீர் திருத்தங்கள்

ஹிந்து ஜாதியில் செய்ய வேண்டிய திருத்தங்கள் தாம் என்னே? முதலில் வர்ண தர்மங்களும் ஆசிரம தர்மங்களும் கெட்டிருக்கின்றன. அந்தந்த வர்ணத்தார் என்று சொல்லிக் கொள்ளுபவர் அந்தந்த வர்ணத்துக்கு விதித்திருந்த தர்மத்தை நிறைவேற்றாததனாலேயே ஹிந்து ஜாதி கெட்ட நிலைமைக்கு வந்தது. தென்னாட்டில் வர்ண வரிசை எக்காரணத்தினாலேயோ பூரணமாக அமைக்கப்படவில்லை. க்ஷத்திரியர் வைசியர் என்ற வர்ணத்தாரும் அப் பெயரைப் பெறாமல் விட்டுவிட்டு, அவ் வர்ணங்களுக் கேற்ற சம்ஸ்காரத்தையும் கைக்கொள்ளாமற் போனமையால் பல இடையூறுகள்

தோன்றியிருக்கின்றன என நம்புகிறோம். இதைப் பற்றிப் பாரதஜாதி உடனே கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. இத் தென்னாட்டு விஷயங்களை உடனே கவனிக்க ஓர் பஞ்சாயத்து ஏற்படுத்த வேண்டும் என்று ஹிந்து சபையில் விஷயாலோசனைப் பஞ்சாயத்திற்கு ஸ்ரீமான் வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர் ஓர் தீர்மானம் அனுப்பியிருந்தார். அப் பஞ்சாயத்திற்கு நேரமில்லாமற் போய்விட்டமையால் அவருடைய பிரேரேபணை காரிய பஞ்சாயத்தில் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இக் காரியம் அதிக அவசரமுள்ள காரியமாதலால் தமிழ்நாட்டுத் தலைவர் அனைவரும் அக் காரிய பஞ்சாயத்துக்கு இவ் விஷயத்தை வற்புறுத்தி எழுதுவார்களென நம்புகிறோம்.

தீண்டாமை ஒரு பெரிய இடையூறாக இருக்கிறது என்று சென்ற மூன்று வருஷங்களாக வற்புறுத்தப்பட்டு வந்தும் அவ் விவகாரத்தை இன்னும் ஜாதியானது தொடக்கூட இல்லை. ஒரு பெரிய ஆத்தியாத்ம வேகம் பாரத ஜாதியில், முக்கியமாகத் தீண்டாமை அதிக கோரமாகப் பரவியிருக்கிற இத் தென்னாட்டில், பிறந்தாலொழிய இக் கொடுமை தீரும் என்று நம்புதற்கில்லை. ஆனால் ஆத்தியாத்ம வேகம் பிறந்துவிட்டால், அக்னியானது சமஸ்த அழுக்குகளையும் எரித்துத் தங்கத்தை எப்படி முற்றிலும் பரிசுத்தமாக்கி விடுகிறதோ அப்படித் தீண்டாமை ஒழிந்து தீண்டாதார் என்று சொல்லப்படுவோர் ஜாதியில் மற்றெல்லோருக்கும் சமானமான ஸ்தானத்தைப் பெற்றுவிடுவர். அந்த வேகம் என்று பிறக்கும், எவ்வாறு பிறக்கும்? இன்று எதிருச்சையாக வெளிவந்த ராஜகோபாலன் கடிதத்தில் குறிக்கப்பட்டிருக்கும் பண்டைத் தமிழ்நாட்டு நாயன்மார்களின் சக்தியும், வடக்கே நானகன் கோவிந்த சிங்கன் முதலிய சீக்கிய குருக்களின் சக்தியும் போன்ற சக்தி ஒரு மனிதனிடத்தில் அல்லது ஒரு சிறு கூட்டத்தினுள் தோன்றிவிட்டால் அன்றைக்கு இவ்விவகாரம் அடியோடு அற்றுப் போய்விடும் என்னலாம். ஏனெனில் அவர்களுடைய ஆத்மசக்தியாகிற காந்தம் சகல விதமான இரும்புகளுக்கும் தன் காந்த சக்தியைத் தந்துவிடும்: அவர்களுடைய ஆத்தியாத்ம வேகமாகிற தெய்வமணி அது தீண்டிய சகல வஸ்துக்களையும் பொன்னாக்கிவிடும். தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைக் கருதுவோர் பாரத ஜாதி மறுபடி தலையெடுக்க வேண்டும் என்ற அவா உள்ளவர்கள், நம்மைச் சுற்றிலும் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயுள்ள தனிப் பெரும் பொருளில் இடைவிடாது மூழ்கி, ஒருவரோடு ஒருவர் அளவளாவிக்கொண்டு, கலந்து கொண்டு, அச் சுடரை இப் பூவுலகத்தில், இந் நிகழ்காலத்தில் கொழுந்துவிட் டெரியும்படி செய்ய முயலுவர்.

## மொரோக்கோ

மொரோக்கோவின் பாடு மிகக் கடினமாக இருக்கிறது. தங்கள் சுயபலத்தைக் கொண்டு இஸ்பானியரை மோரியர் முற்றிலும் தோற்கடித்து விட்டார்கள். மகா வீரம் பேசிக்கொண்டு மோரியரை இஸ்பானிய சேனாபதி இரண்டு மாதங்களுக்குமுன் தாக்கினான். நவீன ஐரோப்பாவின் மரணம் பெய்யும் சகல ஆயுதங்களும் அவனிடமிருந்தது. இஸ்பானியரும் சூரரே. ஆனால் சுதந்திரத்திற்காகப் போர் செய்யும் வீரருக்குக் கடவுள் துணை செய்கிறார். வெல்கிறோம், வெல்கிறோம் என்று பொய்த் தந்தி கொடுத்துக்கொண்டு இஸ்பானிய சேனாபதி பின் வாங்கிக்கொண்டே போய்விட்டான்.

மோரியருக்கும் ஐரோப்பாவுக்கும் இன்றைய நேற்றையசண்டை இல்லை. கஉ00-வருஷங்களுக்கு முன் இஸ்லாம் மதமாகிற அமிர்தத்தைச் சாப்பிட்டு, மகா சௌரியத்தோடுகூட மோரியர் ஆபிரிக்காவின் வடபாகம் அனைத்தையும் அதன் வடகடலிலேயுள்ள தீவுகளையும் வென்று, மொரோக்கோவினின்று இஸ்பானியாவுக்குத் தாண்டி வென்று, அங்குநின்று பிரான்ஸுக்கும் சென்றார்கள். சார்லஸ் மார்தெல் என்பவன் பெரியதோர் படை திரட்டி வந்து தூர் என்னும் இடத்தில் கவி ௬௮௪௨-ல் இவர்களை வென்றிராமற் போனால் பிரான்ஸும் இங்கிலாந்தும் பெல்ஜியமும் உலாந்தாவும் இன்று மக்காஷெரீபை நோக்கித் தொழுது கொண்டிருக்கும். அதுமுதல் எ௮0-வருஷங்கள் வரையில் மோரியர் ஸ்பெயினிலும்போர்த்துக்கல்லிலும் பெரியபெரிய ராஜ்ஜியங்கள் ஸ்தாபித்து வாழ்ந்து வந்தார்கள். ஆனால் ஐரோப்பா ஜாதீய ஐக்கியத்தின் வன்மையினால் மோரியரைக் கடைசியாக ஆபிரிக்காவுக்கே அனுப்பிவிட்டது.



நபோலியன் காலம் வரை கூட மோரியர் என்றால் ஐரோப்பா நடுங்கும். பக்கத்து நாடாகிற அல்ஜீரியாவின் தே என்னும் அரசனுக்கு நபோலியன் கூடக் கடற் கப்பம் என்கிற ஹோதாவில் பணம் அனுப்பி வந்தான். ஆனால் காலசக்கரத்தின் வேகத்தினால் ஐரோப்பா வலுத்து ஆசியஇரத்தம் சிறிதுதளர்வடைந்தது. சென்ற நூற்றாண்டில் ஐரோப்பியர் கை மேலாகி, இஸ்பானியா மொரோக்கோவின் கடற்கரைப் பாகங்களை யெல்லாம் கைப்பற்றிக்கொண்டது. ஜனங்களுக்கு 'நாகரீக' வழிகளைக் காட்டி அவர்களைக் குடிகாரராயும் போகப் பிரியர்களாகவும் ஆக்கித் தன் ஆதிக்கத்தைப் பலப்படுத்தி வந்தது. ஆனால் அதே கால சக்கரம் இஸ்பானியாவின் சக்தியையும் உறிஞ்சிவிட்டது. பிரான்ஸும் ஜெர்மனியும் இங்கிலாந்தும் மொரோக்கோக் கொள்ளையில் தங்களுக்குப் பங்கு வேண்டும் என்று பலவிதமான சூழ்ச்சிகள் செய்து வந்தார்கள். மொரோக்கோ அங்கியவரை இவர்களுடைய சூழ்ச்சிகள் நிறைவேறும் என்றே தோன்றிற்று. ஆனால் சுதந்திர சூரியன் கீழ் நாட்டாரின் மீது மறுபடி ஒளி விடத் துவக்கிவிட்டான். ரிப்பியர் (மோரியருக்கு இது மறு பெயர்) சென்ற பத்து வருஷமாக இஸ்பானியாவோடு விடாத சுதந்திரப்போர் செய்து வந்து இன்று அனேகமாய் வென்றும் விட்டார்கள்.

ஆனால் இச் சமயத்தில் இங்கிலாந்தும் பிரான்ஸும் மொரோக்கோவில் இஸபானியாவுக்குள்ள (கள்ளப்) பாத்தியம் தங்களுக்குச் சேரவேண்டும் என்று பல சூழ்ச்சிகள் செய்துகொண்டிருக்கின்றன. மண்ணாசையால் ஜெர்மனி பட்ட பாட்டைக் கண்டிருந்தும், இப்பொழுதே ஜீரணிக்க முடியாத பூமிகளை யெல்லாம் விழுங்கி வைத்திருந்தும், இவ் விரண்டு நாடுகளும் இன்னும் அவ் ஆசையை விடாமல் சுதந்திரத்தைத் திரும்பிப் பெறுவதற்கு உயிரையும் பொருளையும் இரத்தத்தையும் அமோகமாகச் செலவு செய்துவரும் மோரியருக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்கிறார்கள். ஆனால் இஸ்லாமிய வீரமும் சுதந்திர ஆவேசமும் இதற்கு முன் இதைவிடப் பெரிய ஆபத்தினின்று தப்பி யிருக்கின்றன. இந்தத் தடவையும் அவை தப்பும்படி சுதந்திர தேவி திருவருள் புரிக.

## மைசூர் அரசர்

நூற்கவேண்டிய அவசியத்தைப்பற்றி மகாத்மா இடைவிடாமல் வற்புறுத்தி வந்தும் நூற்றல் பரவவில்லை. நூற்க வேண்டும் என்கிற ஆவல் உள்ளவர்கள் கூடப் பலவித இடையூறுகளினால் நூற்காமல் நின்றுவிடுகிறார்கள். ஆனால் மைசூர் மகாராஜா மகாத்மாவின் உபதேசத்தை மனதில் வாங்கிக்கொண்டு நூற்கத் துவக்கினார். அதில் ஏற்படும் மனச்சாந்தியையும், அதனால் தமது பிரஜைகளுக்கு ஏற்படும் நல்ல உதாரணத்தையும் மனதில் வைத்துக்கொண்டு அக் காரியத்தில் தீர்க்கமாக இறங்கி விட்டார். இப்பொழுது தினம் அரை மணி நேரம் நூற்று வருகிறார் என்று அறிகிறோம். இவருடைய உதாரணமும் மகாத்மாவின் உபதேசமும் உதாரணமும் சேர்ந்து நம்மையெல்லாம் நம் நாட்டுக்கு இன்றியமையாத இத் தொழிலைக் கையிலெடுக்கும்படி செய்யும் என நம்புகிறோம்.

## சர்வகக்ஷி மகாநாடு

நமது தலைவரெல்லாம் ஒன்று கூடித் தேச சபையில் சமஸ்த கக்ஷியினரும் சேர்ந்து வேலை செய்ய அவசியமான ஒற்றுமையைத் தங்கள் தங்கள் கக்ஷிகளுக்குள்ளும் ஜாதிகளுக்குள்ளும் ஏற்படுத்தமுடியுமோ என்று கலந்து யோசித்திருக்கிறார்கள். உத்தியோகத்தையும் பிரதிநிதித்துவத்தையும் தங்களுக்குப் பிரத்தியேகமாய் வேண்டும் என்று அவ் வவ் வகுப்பினர் நினைக்கும் வரையில் ஒற்றுமையைக் காண்பதரிது. இவ் விவகாரத்தை முடிவு செய்ய ஓர் பஞ்சாயத்தும் நியமிக்கப்பட்டிருக்கிறது. என்ன ஆகிறது என்று பொறுமையுடன் பார்ப்போம்.

## பெசந்தம்மையின் மசோதா

பெசந்தம்மை ஆங்கில பார்லிமெந்து சபையில் கொண்டுவருவதற்காக ஓர் மாதிரி மசோதா தயாரித்து வெளிப்படுத்தி யிருக்கிறார். பார்லிமெந்து சபையில் கொண்டு வருவதற்கு யோக்கியதை வேண்டுமானால் அதில் பூரண சுதந்திரத்தைப் பற்றிப் பேசமுடியாது. இந்தியாவானது இங்கிலீஷ் பார்லிமெந்துக்கு அடங்கின

அரசாங்கமாக இருக்கவேண்டு மென்பதே அந்த மசோதாவின் மூலதத்துவமாக இருக்கிறது. அது பிடியாத கக்ஷியினர் நாட்டில் இருக்கிறார்களானாலும் தற்போது காங்கிரெஸில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர் பெரும்பாலார் தற்போதைக்கு இந்த நோக்கம் போதும் என நினைக்கிறார்கள். அந்த நோக்கத்தை நிறைவேற்று வதற்கு இந்த மசோதா சட்டமானால் போதும். ஆனால் பார்லிமெந்து இத் தகைய மசோதாவை நெருங்கிய காலத்தில் சட்டமாக்கும் என்று நினைத்தோமானால் அது மனப்பால் குடித்தலேயாகும்.

## ஸ்ரீமான் சின்னையாபிள்ளை.

அன்பர் சின்னையாபிள்ளை தமது தேசபக்திக்காக நான்கு மாதங்கள் சிறையிலிருந்து சென்ற தைமீ ௧௨-வ விடுதலை அடைந்தார். இந்த ௪-மாத காலத்திலும் அவர் தன்னாட்டுக்காக உழைக்கப் பல யோசனைகள் செய்து வைத்திருப்பார் என்பது நிச்சயம். முன் மாதிரியே இப் பொழுதும் யாருக்கும் அஞ்சாமல் நாட்டுப் பணியைத் தீவிர முயற்சியுடன் செய்குவார் எனப் பூர்ணமாய் நம் பியிருக்கிறோம். அவருக்கு எம் நல் வரவு கூறுகிறோம்.

# புத்தக விமரிசனம்

அறநூல்: இதன் பெயரைக் கேட்கவே தன்மையும் பொதுபொருளும் வெள்ளிடை விலங் கல்போல் நன்கு விளங்கும். இதன் பொருள் நுட்பங்களைத் தனித்தனி யெழுத இடங்கொடா ததுபற்றி இதன் உருவகத்தை இரண்டொரு வரி களில் சிறிது கூறுவதும் பெருமைக்குக் குறை வாகாது. இந் நூலை இயற்றியவர் பராசக்தியின் அருள் வாய்ந்தவரும், பாரதசக்தியின் உபாஸகருமான ஸ்ரீரியரும், துறவறமே தன்னறமாகவும், தேசத் தொண்டே தனது மெய்த்தொண்டாகவும், சாந்தமே தனது எந்தணியாகவும் பொறுமையே தனது கறுவாகவும் உடைய ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் என்னும் காரணப்பெயர் கொண்டவராவர். இந்நூல், முதலில் ஸ்ரீமான் வ. வெ. ஸுப்ரஹ்மண்யஐயர் அவர்களால் எழுதப் பட்ட முகவுரையுடைத்தாய், கடவுளியல்முதல் சாதனவியல் ஈறாகப் பதினைந் தியல்கள் கொண்டு இயல்கள் தோறும் ஐந்து அதிகாரங்கள் பெற்று அதிகாரங்கள் தோறும் ஐந்து சிறிய குறள் வெண்பாக்களை யடைந்து விளங்குகின்றது. ஒவ்வொரு குறள் வெண்பாவும் ஸ்ரீ பாரதியார் அவர்களின் மோன விருதத்தின் சார்பாக, பரா, சக்தியின் அருளால் உதித்து, தனது அனுபவத் திலேயே சான்றாகவும் உண்மையாகவும் கண்டு விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடைத் தாகும்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே

என்றபடி திருவள்ளுவனாருபரிடம் பக்திபுடைய ஸ்ரீ பாரதியாரவர்கள், கால நிலையைத் தழுவி இன்றியமையாத நீதிப் பொருள்களை, திட்பக் குறள்வெண்பாக்களில் அமைத்து, அரிய நூல்கள் வரவை எதிர்பார்த் திருக்கும் தமிழ் நாட்டிற்குக் கைம்மாறு கருதாது நன் கொடையாக அளித்துதவி யிருக்கிறார்.

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரி மாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு.

அவருக்கு நன்மொழி கூறுவதைத் தவிர தற்கால நாகரிகம், நீதி முதலியவைகளை அறிய விரும்புவோர் அனைவரும் இந்நூலை வாங்கி



கற்றறிவாராயின் அறிவு மிகுந்து ஒப்புரவொழுகி தந்தங்கடமைகளை நன்கறிவர் என்பது திண்ணம்.

இவ் வரிய அறநூல் மூலம் சேரமாதேவி 'பால பாரதி' புத்தக சாலையிலும், தேவகோட்டை ராமகிருஷ்ண பிரசுரசாலையிலும் விலைக்குக் கிடைக்கும்.

குறள் நானூறு: விலை அணா ௪. கிடைக்கு மிடம்:—'பஞ்சாமிருதம்' காரியாலயம், மைலாப் பூர், சென்னை.

இந் நூல் யாவர்க்கும் பொதுவான தேவர் குறளினின்று பொறுக்கி யெடுக்கப்பட்டு ௪௦௦ அரிய குறள்களை யடக்கிக் கொண்டிருக்கிறது. அக் குறள்களின் கருத்துரையும் அதற்கிணையான ஆங்கில மொழி பெயர்ப்பும் அடங்கிய இச் சிறு நூல் ஒவ்வொரு தமிழரின் கையையும் அலங்க ரிக்கத் தக்கது.

'தினகரன்: இம் மாதத் தமிழ் பத்திரிகையின் முதல்இதழ் வரப்பெற்றோம். இதன்கண் அறிஞர் களால் எழுதப்பட்ட பல அரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. இதன் முன்படம் எழுவழுப் பான காகிதத்தில் அழகாக இலங்குகிறது. சந்தா ௯-௫—௦—௦: கிடைக்குமிடம் 'தினகரன்' காரி யாலயம், திருவல்லிக்கேணி, சென்னை.

## Pupil's Readers 1, 2, 3.

ஸ்ரீமான் பி. வி. ஜெகதீசய்யரால் எழுதப்பட்டு இப் பெயர் பூண்ட ஆங்கில வாசக புத்தகங்கள் வரப்பெற்றோம். இம் மூன்று புத்தகங்களும் ஆங் கிலம் பயிலும் பள்ளிச் சிறுவர்களுக்கு ஏற்ற வாறு வெகு கவனத்துடன் எழுதப்பட்டுள்ளன. போதனு முறையும் காட்டப்பட்டுள்ளது. இவற்றின்கண் படங்கள் மலிந்துள்ளன. எழுத் துகளின் உச்சரிப்புகளுக்கும் வார்த்தைகளுக் கும் ஏற்ற படங்கள் முதற் பகுதியிற் காணப்படு கின்றன. சிறுசிறு சம்பாஷணைகள் மூலம், மென் மேலும் பாஷாபிவிருத்தியைத் தரும் இப் புத்த கங்கள் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைப்ப தற்கு மிகவும் ஏற்றன. முதற் புத்தகம் விலை அணா-௩; ௨-ம் புத்தகம் அணா-௪; ௩-ம் புத்தகம் அணா-௫. கிடைக்குமிடம்:—பி.வி. ஜெகதீசய்யர், பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

சென்னையிலும் பம்பாயிலும் பரத்துவாஜ ஆசி ரமத்துக்கு ௧௯௨௬ மார்கழி தையில் வசூலான தொகைகள் வந்தனத்துடன் அங்கீகரிக்கப்படுகின் றன.

| | | |
|---|---|---|
| கோயமுத்தூர் கிருஷ்ணய்யர் திருவல்லிக் கேணி | ரூ. | ௧௦௦—௦—௦ |
| பெரின் காப்டென் | ரூ. | ௨௦—௦—௦ |
| பம்பாய் ஆஸ்திக சபைமூலம் வசூல் | ரூ. | ௧௨—௦—௦ |
| பம்பாய் க.சே. ராமஸ்வாமி ஐயர் | ரூ. | ௨௫௦—௦—௦ |
| கி. பாலஸயம் | ரூ. | ௧௫—௦—௦ |
| | ரூ. | ௩௯௭—௦—௦ |

## நமது புதுவைப் பிரதிநிதி

நந்தி பிரசுராலயம், புதுவையர்களே.
இவரே நமது பத்திரிகைகளை பட்வாடா செய்து
சந்தாக்களை வசூல் செய்வார்கள்.

160202

# Reviews of Books

*[Telugu, Malayalam, Samskrit, and Hindi books will be reviewed in these columns. The reviews will be written in English and, if required, in Tamil also. When publishers desire their books to be reviewed in two languages, they should send us two copies of their books.* Ed. B. B.]

(Young India Supplement: Publisher, S. Ganesan, Triplicane, Madras. Rs. 1 / 8.

Some of the most valuable writings of Mahatmaji so precious for humanity that were omitted in the first edition of the Young India have been carefully treasured up in this valuable supplement. These include his early articles in the Young India as well as his Satyagraha pamphlets.

(Landmarks In Lokamanya's Life: Publisher, S. Ganesan Triplicane, Madras. Price Rs. 1-8-0)

The inspiring chapters of this book contain some brilliant pageses out of the life of our great and lamented leader Lokamanya Tilak. The material portion this volume is made up of articles written by his staunch disciple of our great hero, Mr. N. C. Kelkar. A character sketch of the noble patriot crowns the first chapter of the book. A chapter has also been devoted to the elucidation of the Arctic Home in the Vedas. The Tai Maharaj case a diary of the Tilak cases, some extracts from the High Court judgments, the Chirol case, and an account of the official boycott on Tilak, and his Home Rule agitations find a place in this book. We hope that the patriotic public will ncourage such publications.

(The Story of Rama Tirath: Publisher Ganesh and Co, Madras. Rs. 3.)

The life of the great apostle of the inner spirit who soared high in the air of complete renunciation, intoxicated with the joy of self-realization, the life of the great Rama Tirath, is a real feast to our soul. The poet-monk who is an embodiment of the spirit of Vedanta, has by his saintly life, and divine utterances and writings done a good deal of service to Humanity by reminding it of its soul. His extraordinary fondness for solitude, his incessant labour, the freedom of his life and his undaunted spirit, are al finely described in this precious volume. The book contains different photographs of the Swami. We owe the author a great debt of gratitude for giving these intimate glimpses into the life of this great soul. The book is well bound and the get-up very attractive.

(The Gospel of Love. Publisher Ganesh and Co. Madras. Price 8 annas.)

This small booklet, containing the text and translation of Nárada's Bhakti Sutras, is fit to be placed by the side of the Bhagavad Gita. It is a rare expression of the soul-thrilling love which delights the heart of those attached to the feet of the Lord. The booklet is a real solace to every heart yearning after the divine love of the Lord.

# இராமகிருஷ்ணாமிர்தம்

—()—

காலராவுக்கும், அசலில் உண்டாகும் வயிற்று வலிக்கும், கிரகணிக்கும், வயிற்றுக் கடுப்புக்கும், அஜீரணத்தினால் உண்டாகும் பயங்கரமான வியாதிகளுக்கும், சித்தர்களால் சொல்லி இருக்கப்பட்ட சிறந்த [illegible] மருந்து.

புட்டி க-க்கு விலை ரூ. க-அ.

எஸ். வி. ராமகிருஷ்ண குமாரர்கள்,

ஆயுர்வேத வைத்திய சாலை,

௬-ம் தெரு, சேரமாதேவி,

திருநெல்வேலி ஜில்லா.

---

ஸ்ரீ பார்த்தஸகன் அவர்கள் இயற்றிய

## சத்தியவிரதன்

என்னும் அருமையான ஒரு தமிழ் நாவல்

ஆச்சரியமான விற்பனை!

அ-மாதத்தில் ௫00-பிரதிகள் விளம்பரமின்றியே தீர்ந்துவிட்டன.

அபிப்பிராயங்கள்

நவசக்தி:—"இந் நூல் மிகவும் நயம்பட எழுதப்பட்டிருக்கிறது. சுருக்கமாகவும் அனைவருக்கும் விளங்கும்படியாகவும் எழுதப்பட்டிருப்பது போற்றத் தக்கது."

ஸ்ரீ [illegible] ஐயர் அவர்கள் சேரமாதேவி "இந்த புஸ்தகம் தற்காலத்தில் வெளிவரும் மேனாட்டு நாகரிகத்தை மறைத்து நம்நாட்டு நாகரிகம் போலக் காட்டும் போலி நாவல்களைப் போன்ற கதையன்று. [illegible]".

விலை அணா எட்டு. க00-க்கு ௨0-கமிஷன்.

உடனே எழுதுங்கள்,

ஸ்ரீ பார்த்தஸகன்

நரசிம்மபுரம், கருர்

---

## இராஜர்ஷி-நாவல்

ரவீந்திரநாத டாகூருடைய

பங்காளி நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு

தி. வி. சேஷகிரி அய்யர் B.A., B.L., M.L.A.,

அவர்களால் எழுதப்பட்ட முகவுரையுடன்

விலை ரூ. க-ல

## விஜயா-விமலா.

ஒரு அற்புதக் கதை. ஜி.பி. மகாலிங்க அய்யர் அவர்கள் இயற்றியது. விலை அணா கஉ.

## சுவர்ணாம்புஜம் அல்லது பதிபக்தி

ஜி.பி.மகாலிங்க அய்யரால் இயற்றப்பட்டது.

விலை அணா அ

தபால் கட்டணம் வேறு

கிடைக்குமிடம்:—

கிராண்டு அன் கோ

கடு பேக்கர் தெருவு,

மதுரை.

---

## 'பாலபாரதி' விளம்பரவிகிதம்

| | |
|---|---|
| ஒரு பக்கம் ... | ரூ. கஉ. |
| அரைப்பக்கம் அல்லது ஒரு பத்தி | ரூ. எ-அ |
| அரைப் பத்தி ... ... | ரூ. ௩-கஉ |
| கால் பத்தி ... ... | ரூ. உ-0 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்து முன் பணம் அனுப்பினால்

| | |
|---|---|
| ஒரு பக்கம் ரூ. க0. | கால் பக்கம் ரூ. ௩. |
| அரைப்பக்கம் ரூ. ௫-அ. | அரைக்கால் பக்கம் ரூ. க-கஉ |

காரியஸ்தன்,

"பாலபாரதி"

சேரமாதேவி,

(திருநெல்வேலி ஜில்லா) S.I.RY.

# "பாலபாரதி"

—[*]—

சந்தா நேயர்கட்கு

## ஓர் வேண்டுகோள்.

கற்றோரின் இதயமும் சாமானியரின் இதயமும் களிக்கும்படி "பாலபாரதி" தன் அகத்தினுள்ளே சரித்திரசம்பந்தமாயும், இலக்கியசம்பந்தமாயும், நவீன சாஸ்திரங்கள் சம்பந்தமாயும் பல கட்டுரைகளைத் தாங்கி வருகின்றாள்.

யோகத்தைப் பற்றியும் சமயங்களைப்பற்றியும், ஆத்யாத்ம வாழ்க்கையைப் பற்றியும் தொழில்களைப்பற்றியும் இதுவரை அநேக வியாசங்கள் வந்திருக்கின்றன. இன்னும் அனந்தமான வியாசங்கள் வர இருக்கின்றன.

ஒரு நெடுங்கதை (நாவல்) தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிறது. சிறு கதைகளும் பல வந்திருக்கின்றன. இன்னும் அரிய சிறு கதைகள் மாதாமாதம் வர இருக்கின்றன.

வர்ணப்படங்களும் பிற 'படங்களும்' பாரதியைத் தொடர்ச்சியாய் அலங்கரித்து வருகின்றன.

ஒவ்வொரு சஞ்சிகையையும் நூறுபக்கங்கள் வரையில் ஏற்றி இப்பொழுதையும் விடப் "பாலபாரதியை" ரமணீயமாக்க வேண்டுமென்பது எமது கருத்து. ஆனால் தமிழ் நாட்டவரின் பெருதவியில்லாமல் இக் கருத்தைநிறைவேற்றிக் கொள்ளுதல் அசாத்தியம் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் சந்தாநேயர் சிறிதுபிரயத்தனப் பட்டால் இத்தனையும், இதற்குமேலும் சாத்தியமாகும்படி செய்துவிடலாம். நமது சந்தா நேயர்களுள் ஒவ்வொருவரும் வருகிற சித்திரை மாதத்திற்குள் பத்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தந்து விட்டார்களானால் "பாலபாரதி"யை இணையது இல்லாத பத்திரிகையாக்கி விடுவோம் என்று உறுதி கூறுகிறோம். "பாலபாரதி"யின் வருமானமெல்லாம் "பாலபாரதி" அபிவிருத்திசெய்து தமிழ்த் தொண்டும் தேசத்தொண்டும் புரிவதற்காகவே செலவிடப் பட்டுவரும். ஆகையால் அன்பர் மேற்கண்ட விதம் முயன்று எமக்கும் தமக்கும் உதவி புரியுமாறு வேண்டுவோம்.

காரியஸ்தர், "பால பாரதி."

## கிருப நேயர்கள் கவனிக்க வேண்டிய விஷயம்.

௧. கட்டுரைகள் மையில் ஒரு பக்கமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

௨. வியாசங்கள் சுவையுள்ளனவாயும் படிப்போரின் அறிவை விரியச் செய்வனவாயும் இருக்க வேண்டும்.

௩. தினப்பத்திரிகைகளுக்கு ஏற்ற முறையில் சமாசாரங்களை மாத்திரம் தாங்கிநிற்கும் கட்டுரைகளும், கலகத்தையும் சச்சரவுகளையும் வளர்க்கும் கட்டுரைகளும் பிரசுரிக்கப் படமாட்டா.

௪. சிறு கதைகளும் உயர்ந்த சுவையோடு எழுதப்படும் ஹாஸ்யகரமான வியாசங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

௫. அங்கீகரிக்கப்படாத வியாசங்களைப்பற்றி நேயர்களுக்கு எழுதிக் கொண்டிருத்தல் கடினமாக இருக்கும். பதிக்கப்படாத வியாசங்களைத் திரும்பப் பெற விரும்புகிறவர்கள் தங்கள் வியாசத்தின் தலைப்பில் பெயரும் விலாசமும் எழுதி வைத்து நம்மோடு தபால் முத்திரையும் அனுப்ப வேண்டும். அங்கீகரிக்கப்படாத வியாசங்களைப் பற்றி தபால் முத்திரை அனுப்பாமல் கடிதங்கள் எழுதாமலிருக்கும்படி வேண்டுகிறோம்.

௬. ஐந்து அச்சுப் பக்கங்களுக்கு மேல் போகும்படி எழுதப்படும் வியாசங்களை அச்சிடுதல் கஷ்டமாக இருக்கும். சுருக்கமாக எழுதியனுப்பும் வியாசங்கள் தாம் சீக்கிரம் வெளி வருவனவாயிருக்கும். நீண்ட வியாசங்களைப் பகுதி பகுதியாக வெளியிடுவது புதிய சந்தா நேயர்களுக்கு இடைஞ்சல் தரக்கூடியதாதலால் அத்தகைய கட்டுரைகளை எமக்கு அனுப்பாதிருத்தல் நலமாயிருக்கும்.

௭. அன்னிய நாட்டுப் பெயர்களைத் தமிழில் எழுதும்போது நேயர் அப் பெயர்களின் பகுதியை அவ் அன்னிய நாட்டார் உச்சரிக்கிற மாதிரி எழுதியும் ஒத்த தமிழ் விகுதிகள் சேர்த்தும் எழுதவேண்டும்.

# THE KURAL

OR

## The Maxims of Tiruvalluvar

Translated by

*Acharya V. V. Subrahmanya Aiyar.*

*Second Edition, thoroughly revised and enriched with a large number of footnotes and otherwise.*

—— (o) ——

The difficulty of unravelling the sense out of the cryptic though magnificent commentary of Parimelalakar can be conquered by the use of this translation which is the only one that preserves all the force and sublimity of the original.

This edition will be ready by the 15th of December, 1924, and will be beautifully bound in cloth.

Price Rs. 5. V.P.P. charges 8 as.

**The Bala Bharati Bookshop,**

**Sheramadevi.**

# பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

பெரிய கம்பெனி!

பெரிய கம்பெனி!!

## நாகரீகமான ஜரிகை வேலை செய்த பட்டுச்சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், ஜெம்பட்டுகள், முதலியன மிகச் சரசமாகக் கிடைக்கும்.

(○)

சித்திர வேலை செய்ததும் சாதாரணமான பித்தளைப் பாத்திரங்களும், காசுமீர சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி, கோரோஜனை முதலியனவும் கிடைக்கும்.

**விலை ஜாபிதாக்கள் இனாமாக அனுப்பப்படும்**

உடனே எழுதுங்கள்.

விலாசம்:

**காரியஸ்தர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.**

**Silk Pitambar Co.,**

**Pitambar Buildings,**

**BENARES CITY**


சேரமாதேவி "குருகுல" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, ஏ. ஆனந்தகிருஷ்ணனால் பிரசுரிக்கப்பெற்றது.